janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 84 | 2022 மார்ச் 20 - 26 | விலை: ரூ.10 | 16 பக்கங்கள் | இதழ் 50




## பாசிசம் வீழ்த்து!

நமது நாடு, நாம் வாழும் நாடு, நமது சந்ததிகள் வாழவேண்டிய நாடு பாசிச வீரர்களின் கையில் சிக்கி நாளும் சீரழிக்கப்பட்டு வருகிறது. ஆளும் பாசிச கார்ப்பரேட் சௌக்கிதார் மோடி அரசு ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவை>>>



ப 03

## உ.பி. தேர்தல் முடிவுகள்...


பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் வெளிவந்து விட்டன. வெற்றிக் களிப்பிலும், வெறிக் கூச்சலிலும் பா.ஜ.க. ஈடுபட்டு வருகிறது. ஒரு பக்கம் விவசாயிகள் போராட்டம், விலைவாசி >>>



ப 08

## என்றென்றும் மார்க்சை

காரல் மார்க்ஸின் 140 வது நினைவு தினம் மார்ச் 14. 65 வயது வரையில் இந்த உலகில் வாழ்ந்தவர்... லண்டனில் அரச குடும்பத்தார் மற்றும் உயர் பதவி வகித்த வர்கள் அடக்கமாகும் கல்லறைத் தோட்டத்தில் மார்க்சின் உடலை >>>



ப 10




"துன்பக் கடலில் உளல்பவனுக்கு பெருமூச்சு
இதயமற்ற உலகின் இதயம் உயிரில்லாத பௌதீக சூழலின்
உயிர் ஆயினும் மதம் மக்களுக்கு அபின்"

## மாமேதை கார்ல் மார்க்ஸ்

நினைவு நாள் மார்ச் 14.

லண்டனில் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட் கட்சி
தோழர்கள் மார்க்ஸ் நினைவிடத்தில் வீரவணக்கம்!








### ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் மிகுந்த கவலை அளிக்கிறது

# சுயபரிசோதனை அவசியம்

**எதிரும் புதிரும்**

**"சூர்யாவின் படத்தை ரிலீஸ் ஆக விடமாட்டோம்"**
**- பா.ம.க. சவால்**



"எதற்கும் துணிந்தவன்" படம் பெயரே பா.ம.க.வை விரட்டும்!

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு கூட்டம் டெல்லியில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகமான அஜாய் பவனில் 2022 மார்ச் 12, 13 மற்றும் 14 ஆகிய மூன்று நாட்கள் நடைபெற்றது. இக்கூட்டம் முடிவுற்ற பின், 14 ஆம் தேதி நடைபெற்ற பத்திரிக்கையாளர் சந்திப்பில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் டி.ராஜா வெளியிட்ட ஊடகங்களுக்கான செய்திக்குறிப்பில் கூறியிருப்பது பின்வருமாறு:**

தற்போதைய சர்வதேச மற்றும் தேசிய சூழல் குறித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் டி ராஜா ஒரு சுருக்கமான அறிக்கையை தேசியக் குழு கூட்டத்தில் சமர்ப்பித்தார். மார்ச் 10 அன்று வெளியான ஐந்து மாநில சட்ட மன்றத் தேர்தல் முடிவுகள் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மட்டுமின்றி நாட்டிலுள்ள அனைத்து இடதுசாரி மற்றும் மதச்சார்பற்ற, ஜனநாயக அரசியல் கட்சிகள்

## தேசியக்குழு தீர்மானம்

மற்றும் சக்திகளுக்கு மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது. இந்தத் தேர்தல் முடிவுகளில் இருந்து அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயக எதிர்க்கட்சிகள் உரிய படிப்பினைகளைப் பெற வேண்டும். 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கு முன்னதாக தீவிர சுயபரிசோதனையில் அனைத்து மதச்சார்பற்ற ஜனநாயகக் கட்சிகள் ஈடுபட வேண்டும்.

கடுமையாகப் போராடி பெற்ற இந்திய குடியரசை ஒரு இந்து தேசமாக மாற்றுவதற்காக ஆர்எஸ்எஸ் பாஜக கூட்டு கட்டவிழ்த்து விடும் வகுப்பு வாத, பிரிவினைவாத, எதேச்சதிகார தாக்குதல்களில் இருந்து இந்திய குடியரசையும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தையும் பாதுகாத்திட நாட்டில் உள்ள அனைத்து மதச்சார்பற்ற மற்றும் ஜனநாயக சக்தி கள் ஒன்றிணைந்து வலுவான ஐக் கிய முன்னணியை உருவாக்க வேண் டும் என்று தேசிய குழு கூட்டம் அறை கூவல் விடுக்கிறது. இத்தகைய அறை கூவல் விடுப்பதற்கான முடிவை மூன்று நாட்கள் நடைபெற்ற கட்சியின் தேசிய நிர்வாகக் குழு கூட் டம் மற்றும் தேசியக் குழு கூட்டம் மேற்கொண்டது. ஒடிசா மாநிலத்தைச் சார்ந்த தோழர் ராமகிருஷ்ண பாண்டா இக்கூட்டங்களுக்குத் தலைமை தாங்கினார்.

ஆர்எஸ்எஸ்–பாஜக கூட்டணியை முறியடிக்க அனைத்து கட்சிகளிடையே ஒற்றுமை மேலோங்க வேண்டும். அதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் பரஸ்பரம் ஒத்துப்போகும் இயல்புடைய, விட்டுக்கொடுக்கும் அணுகுமுறையைக் கொண்டிருக்க வேண்டும். மக்கள் பிரச்சனைகளைத் தீவிரமாக முன்னெடுப்பதன் மூலம் முன்பு வலுவாக இருந்த பகுதிகளில் தற்போது மீண்டும் இழந்த செல்வாக்கை நிலைநிறுத்திட எதிர்க்கட்சிகள் ஒருங்கிணைந்து முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

2014ஆம் ஆண்டில் இருந்தே, ஒன்றிய அரசு வெளிப்படையாகவே அரசியலமைப்புச் சட்டத்தின் பாற்பட்ட அமைப்புகளைக் குறைமதிப்புக்கு உட்படுத்த முயலுவதுடன் மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறித்திடவும் முயலுகிறது. மாநில அரசுகளையோ அல்லது சம்பந்தப்பட்ட எந்த ஒரு அமைப்பையும் கலந்து ஆலோசிக்காமல், அரசியலமைப்புச் சட்டத்தின் மாநில அரசுப் பட்டி யலில் வேளாண்மை துறை குறிப்பிடப்பட்டுள்ளதையும் புறந்தள்ளிவிட்டு மூன்று சர்ச்சைக்குரிய வேளாண் சட்டங்களையும், தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் ஒன்றிய அரசு நிறைவேற்றியது. இத்தகைய

தொடர்ச்சி 5ம் பக்கம் >>

கட்சிக் கடிதம்



# மக்கள் தீர்ப்பு யார் பக்கம்?



**பேரன்புமிக்க தோழர்களே!**

**நாட்டின் மிகப் பெரிய மாநிலமான உத்தரப் பிரதேசம், கோதுமையின் களஞ்சியமாக திகழ்கின்ற பஞ்சாப், சுற்றுலாத்தலமான கோவா, உத்தரகாண்ட் மற்றும் மணிபூர் ஆகிய ஐந்து மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தல் நடந்து முடிந்து, கடந்த 10ஆம் தேதி முடிவுகள் அறிவிக்கப்பட்டன.**

இவைகளில் பஞ்சாப் மாநிலத்தில் ஆம் ஆத்மி கட்சி வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்துள்ளது, மற்ற நான்கு மாநிலங்களில் நாட்டிற்கு பேராபத்தாக விளங்கிவரும் வகுப்புவாத வெறிபிடித்த ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் அரசியல் பிரிவாக செயல்பட்டு வரும் பாஜக ஆட்சியை பிடித்துள்ளது.

வகுப்புவாதம் முற்றிலும் துடைத்து எறியப்பட்டு, நாட்டையும், நாட்டை வழிநடத்தும் அரசியலமைப்புச் சட்டத்தையும், அரசியலமைப்புச் சட்டம் உருவாகியுள்ள அமைப்புகளையும், இரத்தம் சிந்தி, தேசத்தின் பிதா மகனான, தேசப்பிதா என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பி.சி.ஜோஷியால் போற்றப்பட்ட மகாத்மா காந்தியை உயிர்ப்பலி கொடுத்து உருவாக்கப்பட்ட மதச்சார்பின்மை கொள்கை காக்கப்பட, பொதுத்துறை நிறுவனங்களை காக்க, விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், தொழிலாளர்கள் காக்கப்பட, பெண்களை பாதுகாக்க, குழந்தைகளை பாதுகாக்க, பாலியல் வன்முறைக்கு முடிவு கட்ட, கல்வி, வேலைவாய்ப்பை பெற்றிட போராடிக் கொண்டுள்ள நிலையில்,

மாநில உரிமைகள் காக்கப்பட, தாய்மொழி காக்க, பிறமொழி திணிப்பை எதிர்த்து போராடி கொண்டுள்ள நிலையில்,

விவசாயிகளுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்று, விவசாயத் தொழிலாளர் நலன் காக்க, புலம்பெயர்வதை தவிர்க்க, ஐக்கிய முன்னணி ஆட்சியில் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கான நிதியை குறைக்காதே; அதிகமாக்கு,

வேலை நாட்களை 200 ஆக உயர்த்து, தின ஊதியத்தை ரூ.600 ஆக உயர்த்தி வழங்கு, கிராம ஊராட்சியில் மட்டுமல்ல, நகரங்களுக்கும் திட்டத்தை அமல்படுத்து, குடும்பத்திற்கு 100 நாள் என்பதை மாற்றி வேலையில் கோரும் அனைவருக்கும் வேலை வழங்கு என போராடிக் கொண்டிருக்கும் நிலையில்,

**நூறாண்டு கால போராட்டங்களில் ரத்தம் சிந்தி, சிறைக் கொடுமைகளுக்கு ஆளாகி, தூக்குமேடை ஏறி, துப்பாக்கிச் சூட்டிற்கு ஆளாகி, உயிர் பலி கொடுத்து தொழிலாளர்கள் பெற்ற உரிமைகள் பறிக்கப்பட்டு, கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு ஒன்றிய அரசு நன்றிக் கடன் பட்டு, தொழிலாளர்களுக்கு விரோ தமாக செயல்படுவதை கண்டித்து நாடு தழுவிய வேலை நிறுத்தம் உள்ளிட்ட பல போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கும் நிலையில், நாடு முழுவதும் உள்ள மீனவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு வேண்டும் என போராடிக்கொண்டுள்ள நிலையில், இவை போன்ற எண்ணிலடங்கா பிரச்சனைகளுக்கு காரணமான வகுப்புவாத சக்திகள் வெற்றி பெற்றுள்ளது வியப்பளிக்கத்தான் செய்கின்றது!**

என்ன உடை அணிய வேண்டும்? என்ன உணவை உட்கொள்ள வேண்டும்? என்று வகுப்புவாத சக்திகள் தீர்மானிக்கும் சர்வாதிகாரத்தை எதிர்த்துப் போராடிக் கொண்டுள்ள நிலையில் வகுப்புவாத சக்திகளின் வெற்றி என்பதை ஏற்க முடியவில்லை !

சமையல் எண்ணெய், பெட்ரோல், டீசல் விலை உயர்வு, அத்தியாவசியப் பண்டங்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களின் விலை உயர்வு விண்ணை முட்டும் அளவிற்கு உயர்ந்து கொண்டே இருப்பதற்கு காரணமான வகுப்புவாத சக்திகளின் வெற்றி வியப்பைத் தான் அளிக்கின்றது.

பாஜக வெற்றியை வகுப்புவாத வெறிபிடித்த கூட்டம் மேளம் அடித்து, வெடி வெடித்து கொண்டாடி கும்மாளம் போடுகிறது. வெற்றிக் கூச்சல் மட்டுமல்ல, வெறிக் கூச்சலாக எழுப்புகின்றது.

பாசிஸ சக்திகள் “ஒரே நாடு, ஒரே தேர்தல்” என்று கூறி வந்ததை பாஜகவின் கைப்பாவையாக மாறிவிட்ட தேர்தல் ஆணையம் ஆமாம் சாமி என வெட்கமில்லாமல் கூறுகின்றது.

எதிர்காலத்தில் சட்டமன்றங்கள் இருக்குமா? அமைச்சரவை இருக்குமா? என்கிற ஐயப்பாட்டை எழுப்பியுள்ளது !

இத்தகைய சூழலில் பாஜகவின் வெற்றி கண்டு பலரும் பல விதமாக பேசத் தொடங்கிவிட்டனர். மக்களுக்கு புத்தி இல்லை என்று அதிமேதாவிகள் பேசவும், எழுதவும் தொடங்கிவிட்டனர்.

மக்கள் எங்கள் பக்கம்தான், மோடியின் பக்கம் தான் இருக்கின் றார்கள் என்று கோயபல்ஸ்கள் மூட்டை மூட்டையாக புழுகத் தொடங்கிவிட்டனர். அவர்களின் புளுகு மூட்டைக்கு மற்றவர்களும் ஆட்படுகின்றார்கள்.

உண்மை என்ன? மக்கள் மோடி பக்கம் – அல்லது பாஜக பக்கம் சாய்ந்து விட்டார்களா? அல்லது எதிராக இருக்கின்றார்களா? என்பதனை நிதானம் இழக்காமல் அமைதியாக ஆய்வு செய்தால் மக்கள் பாஜக பக்கம் சாயவில்லை; எதிராகவே உள்ளனர் என்பதை புரிந்துகொள்ளலாம்.

மக்களின் தீர்ப்பு பாஜக விற்கு ஆதரவாக இல்லை – மாறாக எதிர்க்கட்சிகளுக்கு உரிய முறையில் தண்டனை வழங்கியுள்ளார்கள் என்ற பேருண்மையை புரிந்துகொள்ள வேண்டும்.

மக்கள் எத்தகைய தீர்ப்பை வழங்கி உள்ளார்கள் என்பதை பார்ப்போம்.

குறிப்பாக உத்தர பிரதேச மாநிலத்தில் பாஜக சென்ற தேர்தலைவிட நடைபெற்ற தேர்தலில் 57 குறைவான உறுப்பினர்களே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளனர். ஆனால் வாக்கு சதவீதம் சென்றத் தேர்தலைக் காட்டிலும் அதிகரித்துள்ளது. ஆனாலும் பாஜகவை காட்டிலும் மற்ற கட்சிகள் பெற்ற வாக்கு சதவீதத்தை கணக்கிட்டால் மக்கள் பாஜகவின் பக்கம் இல்லை என்ற உண்மையை புரிந்துகொள்ள முடியும்.

சென்ற தேர்தலில் 312 தொகுதிகளில் வெற்றி பெற்ற பாஜக, தற்போது 255 இடங்களை பெற முடிந்துள்ளது.

| 1. உத்தரப்பிரதேசம் | |
|---|---|
| பாஜக பெற்ற வாக்கு சதவீதம் 41.29. | |
| மற்ற கட்சிகள் பெற்ற வாக்கு சதவீதம் வருமாறு: | |
| 1. சமாஜ்வாதி | – 32.21 |
| 2. பகுஜன் சமாஜ் | – 12.88 |
| 3. காங்கிரஸ் | – 2.34 |
| 4. ராஷ்டிரிய லோக்தள் | – 2.85 |
| 5. இந்திய கம்யூனிஸ்ட் | – 0.07 |
| 6. மார்க்சிஸ்ட் | – 0.01 |
| 7. மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் | – 0.01 |
| 8. மற்றவர்கள் | – 6.74 |
| 9. ஒவைசி | – 0.49 |
| 10. ஐக்கிய ஜனதா தளம் | – 0.11 |
| மொத்தம் | – 57.71 |

பாஜகவை எதிர்த்து மற்ற கட்சிகள் பெற்ற வாக்கு சதவிகிதம் 57.71 % என்ற நிலையில், இரண்டாம் முறையாக பாஜக ஆட்சியைப் பிடித்தது என்றால் யாருடைய குற்றம்?

மக்கள் குற்றமல்ல – எதிர்க்கட்சிகளின் குற்றமே என்பது ஐயத்திற்கு இடமின்றி தெளிவாக தெரியவரும்.

| 2. மணிப்பூர் - பாஜக 37.83 | |
|---|---|
| மற்ற கட்சிகளின் விவரம் வருமாறு | |
| 1. காங்கிரஸ் | 16.83 |
| 2. ஐக்கிய ஜனதா | 10.77 |
| 3. நாகா மக்கள் முன்னணி | 8.09 |
| 4. தேசிய மக்கள் கட்சி | 17.29 |
| 5. சுயேட்சைகள் | 7.53 |
| 6. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி | 0.06 |
| 7. எஸ்.எச்.எல். | 0.34 |
| 8. மற்றொரு காட்சி | 0.03 |
| மொத்தம் | 62.17 |

மற்ற கட்சிகள் பெற்ற வாக்குகளை விட பாஜக குறைவாகவே பெற்றுள்ளதை உணரமுடியும்.

| 3. கோவா – பாஜக பெற்றது – 33.33 | |
|---|---|
| மற்ற கட்சிகள் பெற்ற விவரம் | |
| 1. காங்கிரஸ் | 23.46 |
| 2. ஆம் ஆத்மி | 6.67 |
| 3. திரிணாமூல் | 5.21 |
| 4. தேசியவாத காங்கிரஸ் | 1.14 |
| 5. மகாராஷ்ப ... கோமந்தக் கட்சி | 7.60 |
| 6. சுயேட்சைகள் | 19.30 |
| 7. எஸ்.எச்.எல். | 0.18 |
| மொத்தம் | 66.39 |


மக்கள் பாஜகவிற்கு எதிராக 66.39% பேர் என்கிற உண்மையை உணர முடியும்.

| 4. உத்தரகாண்ட் – பா.ஜ.க. 44.33 | |
|---|---|
| மற்ற கட்சிகள் பெற்றவை | |
| 1. காங்கிரஸ் | 37.91 |
| 2. ஆம் ஆத்மி | 3.31 |
| 3. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி | 0.04 |
| 4. மார்க்சிஸ்ட் | 0.04 |
| 5. மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் | 0.02 |
| 6. ராஷ்டிரிய லோக் தள் | 0.01 |
| 7. சமாஜ் கட்சி | 0.29 |
| 8. மற்றவர்கள் | 8.31 |
| மொத்தம் | 55.67 |

வாக்கு சதவீதங்கள் அனைத்து மாநிலங்களிலும் பாஜக விட பாஜகவை கொள்கை ரீதியாக எதிர்க்கக் கூடிய கட்சிகளுக்குதான் அதிகமாக கிடைத்துள்ளது என்பதும்,

கொள்கை அடிப்படையில் எதிர்க்கட்சிகள் அணி சேர்ந்திருந்தால் வாக்கு சதவிகிதம் இன்னும் அதிகரித்திருக்கும் என்பதும்,

>> தொடர்ச்சி 05ம் பக்கம்



- ஆர்.கே.

# பதாகை உயர்த்து! பாசிசம் வீழ்த்து!



**நமது நாடு, நாம் வாழும் நாடு, நமது சந்ததிகள் வாழவேண்டிய நாடு பாசிச வீரர்களின் கையில் சிக்கி நாளும் சீரழிக்கப்பட்டு வருகிறது. ஆளும் பாசிச கார்ப்பரேட் சௌக்கிதார் மோடி அரசு ஆர்.எஸ்.எஸ். அஜெண்டாவை அச்சு பிசகாது நடைமுறைப்படுத்தி வருகிறது.**

எங்கும் வறுமை, பசி, பட்டினி, வேலையின்மை தலை தூக்கி நிற்கிறது. விவசாயமும், விவசாய நிலங்களும் அழிக் கப்படுகிறது. உண்ணும் உணவு, உடுக்கும் உடை எல்லாமே கேள்விக்குறியாகிறது. கல்வி காவி மயமாக்கப் படுகிறது. ஏழை கிராமத்து மாணவர்களின் மருத்துவர் ஆகும் கனவு நீட் தேர்வு மூலம் நிர்மூலமாக்கப்படுகிறது. சிறு பான்மை மக்களின் வாழ்வுரிமை குடியுரிமைச் சட்ட திருத்த மசோதா மூலம் அச்சத்தின் முன் நிறுத்தப் படுகிறது.

நாட்டின் பொதுத்துறை, அரசுத்துறை நிறு வனங்களும் சொத்துக்களும் அதானி, அம்பானி கைகளுக்கு மாற்றப்படுகிறது. அன்றாட உபயோகப் பொருட்கள் விலை உயர்வும், நாளும் கூடும் பெட்ரோல் டீசல் விலை உயர்வும் ஏழை எளிய நடுத்தர வர்க்க மக்களின் வாழ்க்கையை படுபாதாளத்தில் தள்ளி வருகிறது. மின்சலுகை பறிப்பு, ஜி.எஸ்.டி. வரி சிறு குறு நடுத்தர நிலை தொழிற்சாலைகளை மட்டுமின்றி விவசாயத் தொழிலையும் வேட்டு வைத்து சரித்து வருகிறது.

இது நமது நாடு. நமது உழைப்பு, நமது வாழ்க்கை என்ற உரிமைகள் சிறுகச் சிறுக அழிவு நிலையில் தள்ளப் படுகிறது. தமிழ் மாநிலத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் தமிழருக்கு வாய்ப்பின்றி வட மாநிலத்தவர்கள் நுழைக்கப் படுகிறார்கள்.

இந்த மக்கள் விரோத, தேச விரோத பாசிச மோடி ஆட்சி கண்டு அஞ்சி நடுங்கி சாகப் போகிறோமா? அச்சமில்லை அச்சமில்லை என ஆர்த்தெழுந்து போராடி பாசிச மதவெறி மக்கள் விரோத ஆட்சியை வேரோடு மண்ணாக வீழ்த்தப் போகிறோமா? இதுவே நம் முன் உள்ள கேள்வி!

**அரசா? ஏலக்கடையா? LIC**

விண் தொட்டு வளர்ந்து நிற்கும் ஆகப்பெரிய ஆலவிருட்ச மாம், தேசத்தின் ஆலயமாம் லிமிசி எனும் ஆயுள் காப்பீட் டுக் கழகம் இடிக்கப்படுகிறது. மக்களின் சேமிப்பு ஆர் வத்தை சாதகமாக்கிக் கொண்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடித்து வந்த 400 க்கும் மேற்பட்ட தனியார் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளை ஒரேநாளில் ஒழித்து வெறும் 5 கோடி மூலதனத்துடன் ஜவஹர்லால் நேருவால் 1956ல் துவங் கப்பட்டது LIC. இன்று அதன் மூலதனம் 38லட்சம் கோடி. 42 கோடி பாலிசி தாரர்கள். ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழி யர்கள். பத்து லட்சம் முகவர்கள். இந்த லிமிசி ஒன்றிய அர சுக்கு ஆண்டுதோறும் தரம் ஈவுத்தொகை மட்டும் சுமார் 3000 கோடி. அரசு சமூக சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்கு ஒதுக்கி உதவும் பணம் பல்லாயிரம் கோடி.

தோழர்களே! இப்போது சொல்லுங்கள் LICஐ ஏன் விற்க வேண்டும்?

**வங்கிகள் தாரை வார்ப்பு ஏன்?**

வங்கிகள் நாட்டின் கிராமப் புறம் தொட்டு நகர்ப்புறத்து சிறு குறு வியாபாரிகள், கல்வி கற்கும் மாணவர்கள் என அனைத்துப் பகுதி மக்களுக்கும் உயர்ந்த சேவை தந்து வரும் பொதுத் துறை வங்கிகள். தனியார் பெரு முதலாளிகளின் கையில் அடங்கி ஏழை மக்களின் செல்வத்தை சூறையாடி வந்த நூற்றுக்கும் மேற்பட்ட வங்கிகளை ஒரே ஆணை மூலம் 1969ம் ஆண்டு தேசிய மயமாக்கினார் அன்றைய பிரதமர் இந்திரா. இன்று வங்கி மூலதனம் பல லட்சம் கோடி. நல்ல லாபம். ஏராள வேலை வாய்ப்பு.

தோழர்களே! இப்போது சொல்லுங்கள் தேசிய மய வங்கி களை மீண்டும் ஏன் தனியாருக்குத் தாரை வார்க்க வேண்டும்?

**பாதுகாப்புதுறையும் தனியார்மயம்**

பாதுகாப்பு துறை. பெயர் கேட்டாலே பாமரனும் சொல்லு வான் அத்துறை யார் கையில் இருக்க வேண்டும் என்று. தேசத்தின் பாதுகாப்பு அரசின் கையில் தானே இருக்க வேண்டும். அப்படித்தானே இருக்கிறது. 80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள். 40ஆயிரத்திற்கும் மேற்பட்ட சார்பு நிலை ஊழியர்கள். துப்பாக்கி, துப்பாக்கி ரவை, பீரங்கி, டேங்க், ராணுவ வீரர்கள் உடை, நவீன போர்க்கருவிகள் என இந்திய ராணுவத்திற்கு தேவையான அனைத்தையும் கேட்ட நேரத்தில் குறைவான செலவில் தயாரித்து தரும் 60 க்கும் மேற்பட்ட பாதுகாப்பு தொழிற்சாலைகள்.

தோழர்களே! சொல்லுங்கள் இந்திய நாட்டின் பாதுகாப்பையே கேள்விக்குறியாக்கி பாதுகாப்பு தொறிழ்சாலைகளை தனி யாரிடம் ஏன் தள்ளி விட வேண்டும்?

**இரயில்வே தனியார்மயம்**

140 கோடி இந்திய மக்களில் 90 சதத்திற்கும் மேலானோர் ஏழை எளிய உழைத்துப் பிழைக்கும் அடித்தட்டு மக்கள். அன்றாட பிழைப்புக்கு, அண்டை ஊர்களுக்குக் குறைந்த கட்டணத்தில் செல்ல இம்மக்கள் பயன்படுத்தி வரும் போக்குவரத்து இர யில்வே. வெள்ளை ஆட்சி நமக்கு விட்டுச் சென்ற கொடை அது. ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள். பிரயாணம் செய்யும் பல கோடி மக்கள்.

தோழர்களே! இப்போது சொல்லுங்கள்! இரயில்வே துறையை ஏழை மக்களின் பயண்பாட்டுக்கு உதவா வகையில் கார்ப்பரேட் வசம் கைமாற்றும் சதி ஏன்?

**காரணம் அறிவோம்!**

மேலே சொன்னவை மட்டுமில்லாமல் இன்னும் ஏராளமான துறைகள் தனியார் மயம் நோக்கி. தொலைத் தொடர்பு ஙிஷிழிலி துறையின் சிறகுகள் அனைத்தும் பிய்க்கப்பட்டு விட்டது.

அரசு, பொதுத்துறைகளை தாரைவார்ப்பதோடு நின்று விட வில்லை பாசிச மோடி அரசு. தேசிய பணமாக்கல் (NMP) திட்டம் என்ற பெயரால் பெருநகரங்களின் மையப் பகுதியில் இருக்கும் இத்துறைகளுக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை பல லட்சம் கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துக்களை அடிமாட்டு விலைக்கு அதானி அம்பானி கார்ப்பரேட் கும்பலிடம் ஏலம் பேசி விற்கும் வேலையைத் துவக்கிவிட்டார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன். இப்படி தேசத்தையே கார்ப்பரேட் கொள்ளைக் கூட்டத்திடம் விலைபேசுவது தேசத்து ரோகம் தானே!

அரசு பொதுத்துறைகள் அழிந்து விட்டால் படித்த இளைஞர்களின் வேலைவாய்ப்பு கேள்விக்குறி ஆகாதா? ஏற்கனவே மோடி ஆட்சியில் வேலை இழந்தோர் 5 கோடி பேர். இது தவிர வேலை இழந்த அமைப்பு சேரா தொழிலாளர்கள் ஏராளம் ஏராளம்!

தனியார் மயம் வேலை வாய்ப்புகளை பெருக்குமா? உருவாக்குமா? இட ஒதுக்கீடு அனுமதிக்குமா? எதுவும் இருக்காது. தொழிலாளர்கள் அடிமைகளாக நடத்தப்படுவர். இதற்கு வசதியாக ஏற்கனவே நாம் பல தியாகம் செய்து போராடிப் பெற்ற 44 தொழிலாளர் நலச் சட்டங்களை நான்காகச் சுருக்கி நசுக்கி விட்டது மோடி அரசு.

**என்ன செய்யப் போகிறோம்!**

இந்த அளவிற்கு பஞ்சமாப் பாதக செயல்களைச் செய்திட பாசிச மோடி அரசுக்கு எப்படி தைரியம் வந்தது? எங்கிருந்து வந்தது? எல்லாம் நம்மிடம் இருந்து தான். நமது அறியாமையும், நமக்கிருக்கிற இன மதத்தின் மீதான வெறித்தன பக்தியும் மூட நம்பிக்கைகளும் தான். இவைகளே மதவெறி பாசிச இந்துத்துவா ஆட்சியாளர்களின் மூலதனம்.

**ராமனைக் காட்டி, ராமர் கோவிலைக் காட்டி, இனத்தைக் காட்டி, மதத்தைக் காட்டி, அடுத்த ஜென்மம் என்கிற மாயயைக் காட்டி ஏமாற்றி வருகிற இந்துத்வா ஆட்சிக் கும்பலிடமிருந்து மக்களைக் காப்பாற்றியாக வேண்டும். மதவெறி மடமையிலிருந்து மக்களை வெளிக்கொணர வேண்டும். பாசிச பா.ஜ.க. கையிலிருந்து மதவெறி தாயித்தைப் பிடுங்கி பிய்த்து எறிய வேண்டும்.நமது வாழ்க்கை நாசமாவது மட்டுமின்றி நமது சந்ததிகளின் வாழ்க்கையையும் நாசமாக்கிட நாம் துணை போய்விடக்கூடாது என்பதை புரிய வைக்க வேண்டும்.**

இதற்கான ஒரே வழி மக்களைத் திரட்டி , விழிப்புணர்வு பிரச்சாரம் செய்து , மக்களைப் புரிய வைத்து ஜனநாயகத்தின் மீதும் மதச்சார்பின்மை மீதும் நம்பிக்கை கொண்ட சக்திகள் அனைத்தும் ஒன்றினைந்து போராடுவதுதான்.

மாவீரன் பகத்சிங் தனது 23 வயதில் வெள்ளை ஏகாதிபத் தியத்தை விரட்ட, இந்த தேசத்திற்காக, இந்திய மக்களுக்காக நான் மகிழ்ச்சியோடு என் உயிரை விடுகிறேன் என தூக்குக் கயிற்றை முத்தமிட்டு, "எனக்குப் பின்னால் இளைஞர் கூட் டம் ஆகப்பெரிய அளவில் திரண்டெழுந்து போராடும்; இந்த தேசத்தைக் காப்பாற்றும்" என நம்பிக்கையோடு கர்ஜித்து உயிர் துறந்தானே! அந்த மார்ச் மாதத்தில், பகத்சிங் நம் பிக்கை வார்த்தைகளை புரட்சி முழக்கமாக ஏற்று போராட இருக்கிறோம்!

மார்ச் 28, 29 போராட்டம் அனைத்து தொழிற்சங்கங்களின், தேசபக்த அமைப்புக்களின் போராட்டம்.

சிறிது காலம்ஆகலாம்! வெள்ளையனை ஒரே நாளிலா விரட்டி அடித்தோம்! இல்லை. ஆனால் ஓயாது போராடி விரட்டினோம்! அது முடிந்தது எனில் நம்மால் பாசிசத்தை வேரறுக்கவும் முடியும்! போராடாமல் நாம் வென்றதில்லை! போராடி நாம் தோற்றதில்லை!

பாசிச மாயை உடைப்போம்! கோடிக்கால் பூதமாய் கோபத்தின் ரூபமாய் கொதித்தெழுவோம்!

நாடு காப்போம்! நாட்டு மக்கள் காப்போம்!

தொடர்புக்கு: **94449 56694**

# மார்ச்- 28ல் 10 இடங்களில் மறியல் போராட்டங்கள்

## மேற்கு மண்டல மாவட்டங்கள் மாநாட்டில் முடிவு

மார்ச் 28, 29 தேதிகளில் நாடு தழுவிய அளவில் இரண்டு நாட்கள் பொது வேலை நிறுத்தம் நடத்த மத்திய தொழிற்சங்கங்கள் முடிவு செய்துள்ளது. கோவை காட்டூரில் உள்ள தியாகிகள் நிலையத்தில் தமிழ்நாடு மேற்கு மண்டல மாவட்டங்கள் கலந்து கொள்கிற மண்டல அளவிலான மாநாடு நடைபெற்றது.

ஏ.ஐ.டி.யு.சி கோவை ஜில்லா மில் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளர் எம்.ஆறுமுகம் எக்ஸ்.எம்.எல்.ஏ.,

எச்.எம்.எஸ்.மு.சுப்பிரமணியம், சி.ஐ.டி.யூ. சி. நாகராஜன், எம்.எல்.எப். திருப்பூர் சம்பத், எல்.பி.எஃப். க.பிரபாகரன், ஐ.என்.டி. யூ.சி. ஏ.சிவசாமி, ஏ.ஐ.சி.சி.டி.யூ. வெங்கடாசலம், எஸ்.டி.டி.யூ. ரகுபுநிஷீத்தார், பி. சண்முகம் உள்ளிட்டோர் சிறப்புரை ஆற்றினர்.

28 ம் தேதி வேலைநிறுத்தம் செய்துவிட்டு கோவை மாவட்டத்தில் சட்டமன்ற தொகுதிக்கு ஒரு மையம் என்ற வகையில் 10 மையங்களில் மறியல் போராட்டங்கள் நடத்துவது.

29ம் தேதி கோவை மத்திய தந்தி அலுவலகம் அருகே மறியல் போராட்டம் நடத்துவது என்றும் 16ம் தேதி முதல் 20ம் தேதி முடிய 5 நாட்கள், மாவட்டம் முழுவதும் வேன் பிரச்சாரம் மேற்கொள்வது என்றும். 22 ம் தேதி கோவை வடவள்ளியில் அனைத்து சங்கங்கள் கலந்துகொள்ளும் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்துவது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டிற்கு எம்.எல்.எப். தொழிற்சங்க தலைவர் மு.தியாகராஜன் தலைமை தாங்கினார். சி.ஐ.டி.யூ. பொதுச் செயலாளர் எஸ். கிருஷ்ணமூர்த்தி வரவேற்புரை நிகழ்த்தினார்.

கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, நீலகிரி உள்ளிட்ட மாவட்டங்களைச் சேர்ந்த தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்துகொண்டனர்.



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 84 இதழ் 50

# ஏன் என்ற கேள்வி!

நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வது, பூணூல், சீக்கியத் தலைப் பாகை, முடி வளர்ப்பது போன்றவை சீருடை விதிகளுக்கு எதிரானது என்று பேச முடியுமா? இந்தியாவின் சில பகுதிகளில், அதிலும் சில கோவில்களில் மட்டும் பிராமணர்கள்தான் அர்ச்சகராக முடியும் எனும் ஆகம விதிகளுக்கும் இந்து மதத்துக்கும் தொடர்புண்டா?

ராமர் இந்த இடத்தில்தான் பிறந்தார் என ஆதாரம் இல்லையெனினும், அவ்வாறுள்ள நம்பிக்கையைக் கேள்வி கேட்கமுடியாது என நீதிமன்றம் சொன்னதல்லவா? பாபர் மசூதியை இடித்தது தவறு தான், ஆனாலும் நம்பிக்கையை முன்னிறுத்தி இடித்தவர்களிடமே இடத்தை ஒப்படைக்க வேண்டுமென தீர்ப்பளிக்கவில்லையா?

நீண்டகாலமாக சமூகப் பதட்டத்திற்கு காரணமாக இருந்து வரும் பாபர் மசூதி பிரச்சனையை, ஒரு முடிவுக்கு வந்தால் சரி என்று நீதிமன்றத்தின் தலையில் பழியைப் போட்டு, சமூக அமைதியைப் பேணுமாறு பலரும் வேண்டுகோள் விடுக்கவில்லையா? பாபர் மசூதியைத் திரும்பக் கட்ட வேண்டும் எனத் தீர்ப்பு வந்திருந்தால், எவ்வாறாயினும் சமூக அமைதி நிலவினால் சரி என்று யாராவது பேசி இருக்க முடியுமா?

இன்று ஹிஜாப் அணிவது சீருடை விதிகளுக்கு விரோதமென்றும், அவ்வாறு உடையணிவது இஸ்லாம் மதக் கோட்பாடுகளில் ஒன்றாகக் கூறப்படவில்லை என்றும் கர்நாடக உயர்நீதிமன்றம் உத்தரவிட்டு இருக்கிறது. உடனடியாக கர்நாடக மாநில பாஜக அரசு நடவடிக்கையில் இறங்கியது.

பிரச்சினை வருமெனக் கருதுகிற பள்ளிக்கூடங்களை மூடியது. 144 தடை உத்தரவு பிறப்பித்தது. நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அனைவரும் தலைவணங்க வேண்டும் என்று கர்நாடக முதலமைச்சர் கேட்டுக்கொண்டிருக்கிறார். ஹிஜாப் அணிவது அனுமதிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு வந்திருந்தால் இதே வேண்டுகோளை அவர் விடுத்திருப்பாரா?

சபரிமலை, ஐயப்பன் கோவிலில் பெண்களும் வழிபடலாம் என்று நீதிமன்றம் உத்தரவிட்டது. அதனை செயலாக்க முயன்ற கேரள இடதுசாரி அரசு மீது, இதே பாஜகஆர்எஸ்எஸ் சங்கப் பரிவாரங்கள் எத்தனை விதமான தாக்குதல்களைத் தொடுத்தன. கோவிலுக்குச் செல்லும் பாதைக்குள்ளேயே பெண்களை நுழையவிடாமல் மனிதச் சுவர் கட்டி மறைத்ததை இந்தியச் சமூகம் மறந்து விடுமா? எங்களைக் கோயிலுக்குள் அனுமதிக்கக்கூடாது என்று பெண்களையே பேச வைக்கவில்லையா? தீர்ப்பைச் செயலாக்க முன்வந்த கேரளா இடதுசாரி அரசை, இந்து விரோத அரசு என்று சங்கப் பரிவாரங்கள் நாடு முழுமையும் தம்பட்டம் அடிக்கவில்லையா?

அப்போதெல்லாம் நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும் என்ற இவர்களின் இப்போதைய ஞானம் எங்கு போயிருந்தது? தாம் நினைத்ததைப் போல தீர்ப்பு வந்தால் அதை திடமாக அமுல் நடத்துவார்கள்; வேறு கட்சி ஆட்சி செய்தால் அமுல் நடத்துமாறு கோரிப் போராடுவார்கள். தனது விருப்பத்துக்கு எதிராக தீர்ப்பு வந்து விட்டால் அதனை அமுலாக்க மாட்டார்கள்; மற்றவர்களை செயல்படுத்தவும் விடமாட்டார்கள் என்பதுதானே இன்றுவரை ஆர்எஸ்எஸ் மதவெறிக் கும்பலின் வரலாறு!

அண்மையில் இந்தியத் தரப்பில் இருந்து அதிநவீன ஏவுகணையான பிரம்மோஸ் ஏவப்பட்டு, பாகிஸ்தானுக்குள் 120 கிலோ மீட்டர்கள் தாண்டிப்போய் மோதி இருக்கிறது. பொருட்சேதம் ஏற்பட்டாலும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. இது வேண்டுமென்றே நடந்ததல்ல, ஒரு விபத்துதான் என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் கூறியிருக்கிறார்.

ஒருவேளை இந்த ஏவுகணை பாகிஸ்தான் தரப்பில் இருந்து ஏவப்பட்டு, இந்தியாவில் விழுந்திருந்தால் இங்கு எப்படி எல்லாம் ஆடியிருப்பார்கள் என்று சிந்திப்பதற்கே அச்சமாக இருக்கிறது. இரண்டு நாடுகளுமே அணு ஆயுதம் உள்ள நாடுகள் என்பது இந்த அச்சத்தை அதிகப்படுத்துகிறது.

முடியாட்சியில் அதிகாரத்தில் இருப்பவன் சொல்வதுதான் நீதி. ஒரு ஜனநாயக நாட்டில், அரசியலமைப்புச் சட்டம் தான் பிரதானமானது. அதிலிருந்து விலகி ஆட்சி நடத்த முற்பட்டால் தடுத்து நிறுத்துவதற்கு நீதிமன்றங்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, கணக்காயம், ரிசர்வ் வங்கி, தேர்தல் ஆணையம் என ஏராளமான சுயாதிகாரம் கொண்ட அமைப்புகளை ஜனநாயகம் நிறுவி இருக்கிறது. ஆனால் மோடி அரசு அந்த அமைப்புகளை தனது அடியாட்களாக மாற்றியமைத்து விட்டது.

இங்கு கேள்விகளை எழுப்பினால் உரிய நியாயமான பதில் பெறுவது கடினம்! ஒருகட்டத்தில் கேள்வி எழுப்புவதே கூட கடினமானது ஆகிவிடும்.

பல்வேறு முறைகேடுகளைச் செய்து உத்தரப்பிரதேசத்தில் பெற்ற வெற்றியால் பாஜக அகமகிழ்ந்து அதிகார வெறி மேலதிகமாக தலைக்கேறி இருக்கிறது. அதிகாரத்திலிருக்கும் வரை அநீதிகளை இந்த அரசு அரங்கேற்றிக் கொண்டே இருக்கும்.

அதிகாரத்தில் இருந்து அகற்றுவதற்கு, மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்கு சக்திகள் இப்போதிருந்தே

அணி திரள்வதே தீர்வு!

அம்ரா பாண்டியன்

# தொழு நோயாளியையும் மனிதராக பாவிக்க வேண்டும்



சிறு வயது முதலே படு சுட்டியான சிறுமி அவர். தந்தை ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரி. விளையாடும் போது கூட எல்லோருக்கும் ஊசி போட்டு விடுவது போன்றே விளையாடுவார். ஒரு நாள் பள்ளியில் மாறுவேடப் போட்டி நடந்தது. தொழுநோயாளி வேடமிட முடிவு செய்த சிறுமி எப்படி நடிக்க வேண்டும் என்று தந்தையிடம் கேட்டார். அப்போது தந்தை தொழுநோயாளி போல வேடமிட்டு நடித்துக் காட்டினார். அதைப் பார்த்து அப்படியே அடுத்த நாள் பள்ளியில் நடித்து பரிசை வென்று வந்தார்.

தொழுநோயாளியாக சிறிது நேரம் நடிப்பதே இவ்வளவு சிரமமாக இருக்கிறதே அவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்ற எண்ணம் எட்டு வயதாக இருக்கும் போதே அவருக்கு வந்துவிட்டது. அப்போதே முடிவு செய்துவிட்டார் அந்தச் சிறுமி தான் டாக்டராகி பிற்காலத்தில் தொழுநோயாளிகளுக்கு உதவ வேண்டும் என்று!

கும்பகோணத்தில் மகாமகம் நடைபெற்று வந்த அந்த நேரத்தில் குளத்தில் புனித நீராடுவதற்காகப் பலரும் வந்து சென்று கொண்டிருந்தனர். குளக்கரையின் ஒரு பகுதியில் மக்கள் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். அப்போது பள்ளியிறுதி வகுப்புப் படித்த அந்தச் சிறுமி என்னவென்று பார்க்க ஓடினார். குளத்தில் ஒரு உடல் மிதந்து வந்தது. ஆடை இல்லாத உடல்!

அந்த உடலைத் தூக்கவோ அல்லது ஒரு துணி போர்த்தி விடவோ யாரும் முன்வரவில்லை. உடனே அந்தச் சிறுபெண் தன் மேலிருந்த துப்பட்டாவை அந்த உடல் மீது போர்த்தினார்.''யாராவது வாங்களேன் தண்ணியிலிருந்து இவரை மேலே தூக்கலாம்''என்று அந்தச் சிறு பெண் கத்தியும் யாருமே வரவில்லை. அப்போதுதான் அந்த உடலைக் கவனித்தார் இறந்து போனது ஒரு தொழுநோயாளி என்று புரிந்தது. கைகால்கள் எல்லாமே சூம்பிப் போய் விட்டதால் யாருமே நெருங்க மறுத்தார்கள்.

''உனக்கு எதுக்கு இதெல்லாம்?''என்று திட்டித் தீர்த்தார்கள் கூடியிருந்த மக்கள். குளத்தை எப்படி சுத்தம் செய்வது என்று பேசிக் கொண்டும், குளத்தைக் கடந்து செல்பவர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டுமே நடந்தனர். சாதிகளால் நடக்கும் தீண்டாமைக் கொடுமையை விட மோசமான தொழு நோயாளியின் நிலை சிறுமிக்கு மன அழுத்தத்தைத் தந்தது. குளத்தில் மிதந்த உடலை தன் மடியில் வைத்துக்கொண்டு ஒரு ரிக்சாவை அழைத்தார் சிறுமி. ஒருவழியாக ரிக்சாக்காரர் ஒருவர் மனம் இறங்கி வந்தார். அவருடைய உதவியுடன் உடலை ஏற்றிக் கொண்டு இடுகாட்டிற்கு விரைந்தார்.

தொழுநோயாளி என்பதால் உடலை தகனம் செய்யக் கூட 2 மயானங்கள் இடம் தரவில்லை. கடைசியாக கும்பகோணத்தில் இருந்து 30 கிலோமீட்டர் தூரத்தில் வயதான முதியவர் ஒருவர் இருந்த இடுகாட்டில் இறந்த தொழுநோயாளியின் உடலை தகனம் செய்ய ஒப்புகொண்டார்.

தன்னிடம் இருந்த தந்தை தந்த பாக்கெட் மணி 10 ரூபாயை அந்த முதியவரிடம் தந்து உடலை எரிக்கச் சொன் னார் சிறுமி. அந்த முதியவர் சிறுமியின் கால்களில் விழுந்து வணங்கி, ''உன்னைய மாதிரி சின்னப் பொண்ணு இப்படி செய்றதே பெரிய விஷயம்''என்று சொல்லி தொழுநோயாளியின் அந்த உடலை எரிக்கத் தேவையானவற்றைச் செய்தார். அந்தச் சிறு பெண்ணே கொல்லிவைத்து இறுதிச் சடங்குகளை செய்து முடிக்கிறாள்.

அன்று மாலை வீட்டிற்கு வந்ததும் சிறுமியின் தந்தை மகள் வாட்டமாக இருப்பதைப் பார்த்து என்ன விஷயம் என்று கேட்டார். அவரிடம் நடந்தவற்றைக் கூற, மகளை உச்சிமுகர்ந்து முத்தமிட்டார். ''நீ என் பொண்ணு என்பதை நிரூபிச்சு விட்டே. உன் விருப்பப்படியே டாக்டராகி தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை தரலாம். நான் அனைத்து உதவிகளையும் செய்கிறேனம்மா''என்று சொன்னார் அந்தச் சிறுமியின் தந்தை.

''அன்னைக்குத் தீர்மானிச்சேன். 'அனைவராலும் வெறுக்கப்படும் தொழுநோயாளிகளுக்கு நாம சேவை செய்யணும்' அப்படின்னு'' என்கிறார் அன்றைக்குச் சிறுமியாக இருந்து வளர்ந்து இன்று மருத்துவராக இருக்கும் ரேணுகா ராமகிருஷ்ணன்.

இன்று போல் அன்றைக்கு நீட் தேர்வு இல்லை. எனவே பள்ளியில் அதிக மதிப்பெண்கள் எடுத்த ரேணுகாவுக்குச் சுலபமாக புதுச்சேரி ஜிப்மர் கல்லூரியில் மருத்துவ இடம் கிடைத்தது. இளநிலை மருத்துவம் முடித்த பின்னர் ரேணுகா நினைத்தது போலவே தோல் சிகிச்சை நிபுணத்துவத்திற்கான மருத்துவ மேற்படிப்பை படித்தார். படிப்பு முடிந்த கையோடு புனித ஜான் மருத்துவமனை மற்றும் தொழுநோய் சிகிச்சை மையத்தில் பணியில் சேர்ந்துவிட்டார்.

''நான் நினைத்தது போலவே தொழுநோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவராக எனது சேவையைத் தொடங்கினேன்.

அது ஒரு சிறு கிராமம் என்பதால் இரவு நேரங்களில் பாம்பு, பூச்சிக்கடித்து பலர் சிகிச்சைக்காக வருவார்கள் அவர்களுக்கு சிகிச்சையளித்து உயிர் பிழைக்க வைத்துள்ளேன். கூடுதல் நேரம் பணியாற்றியதன் மூலம் கிடைக்கும் சம்பளத்தை தொழுநோயாளிகளின் நலவாழ்விற்காக செலவு செய்தேன். இரவு பகல் பாராமல் பணியாற்றுகிறேன் என்ற சோர்வே எனக்கு ஏற்பட்டதில்லை,'' என்கிறார் ரேணுகா.

திருமணத்திற்கு முன்பு வரை எந்தப் பெண்ணும் தான் நினைத்தவற்றைத் தடையின்றி செய்ய முடியும். ஆனால் திருமணத்திற்குப் பின்பும் அது முடியுமா என்பது தான் கேள்விக்குறி. ஆனால் ரேணுகா விஷயத்தில் அதுவும் அவருக்கு சாதகமாகவே இருந்தது. ரேணுகாவின் கணவர் ராமகிருஷ்ணன் அவரை பெண் பார்த்ததே மருத்துவமனையில் தான்.

''நான் என் கணவரிடம் உறுதியோடு சொன்ன ஒரே விஷயம் தொழுநோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பதை என்னால் நிறுத்த முடியாது என்பதே. அவரும் என்னுடைய விருப்பத்திற்கு எந்தத் தடையும் சொல்லவில்லை. திருமணம் முடிந்து முதலில் திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு கிராமத்தில் உள்ள மருத்துவமனையில் வேலை பார்த்தேன். அங்கு வீதி வீதியாகச் சென்று தொழுநோயாளிகளை தேடித்தேடி சிகிச்சை கொடுத்தேன். பின் சென்னைக்குக் குடிபெயர்ந்த நிலையில் ஷெனாய் நகரில் தொழுநோயாளிகளுக்கான சிகிச்சை மையத்தில் பணியாற்றத் தொடங்கினேன்,'' என்று கூறுகிறார் ரேணுகா.

**''தொழுநோயாளிகளைத் தொட்டாலே நமக்கு நோய் ஒட்டிக் கொள்ளும் என்று பலர் பயப்படுவதுண்டு, ஆனால் தொழுநோயாளிகளுக்கு சிகிச்சையளித்துக் கொண்டே தான் என் பிள்ளைகளுக்கு நான் பாலூட்டினேன். என் மாமியார் பிள்ளையை எடுத்து வந்து தாய்ப்பால் கொடுப்பதற்காகக் கொடுப்பார். அவரும் நோயாளிகளைப் பார்த்து முகம் சுளித்ததே இல்லை. எனக்கு ஒரு ஆண் பிள்ளை, ஒரு பெண் பிள்ளை. இருவருமே எந்த பாதிப்பும் இன்றி வளர்ந்து படித்து முடித்து தற்போது நல்ல நிலையில் இருக்கின்றனர்'' என்கிறார் ரேணுகா.**

30 வருடங்களுக்கு முன்னர் இருந்ததை விட தொழுநோய் பாதிப்பு தற்போது குறைந்து விட்டது. எனினும் இன்னும் சிலர் இந்த நோய் பாதிப்பிற்கு ஆளாகிக் கொண்டு தான் இருக்கின்றனர். முதலில் இந்த சமூகத்தினர் புரிந்து கொள்ள வேண்டிய விஷயம் தொழுநோய் தொற்றுநோய் கிடையாது, பாவம் செய்தவர்களுக்குத் தான் தொழுநோய் வரும் என்று கூறுவதெல்லாம் அறிவிலி நிலையின் உச்சகட்டம்'' என்கிறார் ரேணுகா.

''என்னால் எதையும் செய்ய முடியும் என் கையே எனக்கு உதவி. தன்னம்பிக்கை தான் வாழ்க்கை இதுவே சோர்ந்து போகும் நேரங்களில் எனக்கு நானே சொல்லிக்கொள்ளும் ஊக்கமளிக்கும் வாசகங்கள்,'' என்று திடமாகச் சொல்கிறார் ரேணுகா.

எந்த எதிர்பார்ப்பும் இன்றி நான் என்னுடைய சேவையைச் செய்து வருகிறேன். சக மனிதனை மனிதனாக மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், அன்பிற்காக ஏங்குபவர்களுக்கு அன்பைப் பகிருங்கள்'' என்று கூறும் ரேணுகாவின் பெரிய கவலையே, தனக்குப் பிறகு இந்தச் சேவையை யார் தொடர்வார்களோ என்பதுதான். ஏனெனில் தொழுநோயாளிகளுக்கான படிப்பையே இப்போது எடுத்துவிட்டனர். யாரும் அந்த நோய்க்கு சிகிச்சை கொடுக்க பிராக்டீஸ் பண்ணுவதில்லை!

1991இல் ஆரம்பித்த டாக்டர் ரேணுகா ராமகிருஷ்ணன் சேவை, இன்று வரைக்கும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது. இந்தத் தேவதையின் சேவையைப் பாராட்டி மத்திய, மாநில அரசின் விருதுகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் விருதுகள் என்று 150க்கும் மேற்பட்ட விருதுகள் வந்தடைந்துள்ளன!

## தேர்தல் வெற்றிக்காக
# தமிழக காவிரி உரிமையை பலிகேட்கும் கர்நாடக பாஜக அரசு

பி.எஸ்.மாசிலாமணி

கர்நாடகத்தில் காவிரியே அரசியலை தீர்மானிக்கிறது. இதனால்தான் பன்னெடும் காலங்களாக காவிரி பிரச்சனை முடிந்தும் முடியாமலும் தொடர்கிறது. இந்த நிலையில் வழக்கம் போல் கர்நாடக ஆளும் பா.ஜ.க மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் மேகதாது அணை கட்டுமானம் குறித்து தொடர்ந்து பேசி வருகிறார்கள். தற்போது அங்குள்ள நிலையில் இந்த பிரச்சனையை தீவிரப்படுத்திடும் சூழல் உள்ளது. அடுத்த ஆண்டு வர உள்ள கர்நாடக சட்டமன்ற தேர்தலால் அங்குள்ள பெரிய இரு கட்சிகளும் தன் பிரதான கோரிக்கையாக மேகதாது அணையை கையில் எடுத்துள்ளது. இது தொடர்ந்து இரு கட்சிகளின் போட்டி அரசியலால், மேகதாது அணையை கட்டுவோம் என்ற தேர்தல் வாக்குறுதியும் கொடுக்கப்படலாம்.

எதிர்காலத்தில் அமையும் புதிய அரசு, மேகதாது அணை கட்டுவதற்கான நடவடிக்கைகளை சட்டமீறல் கொண்டு கூட நிறைவேற்றுவதற்கு துணியலாம்.

இப்பிரச்சனை தமிழக மக்களுக்கு எதிராக கர்நாடக மக்களை தூண்டி விடுகிற செயலாகும். கர்நாடகத்தில் மக்கள் நலன் சார்ந்த எதிர்கால திட்டங்களைக் கொண்டு வருவதற்கு ஆளும் தகுதி உள்ள கட்சிகள் சிந்திப்பதற்கு பதிலாக வெறும் உணர்ச்சியை தூண்டி விட்டு பதவியை அடையும் குறுக்கு வழியை நாடி உள்ளார்கள்.

ஆளும் பாஜக அரசு இப்போது தாக்கல் செய்துள்ள நிதிநிலை அறிக்கையில் மேகதாது அணை கட்ட ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதாக அறிவித்திருக்கிறது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு மற்றும் அதைத் தொடர்ந்த கண்காணிப்பில் உள்ளதும், உச்ச நீதிமன்ற வழிகாட்டலில் நியமிக்கப்பட்டுள்ள காவிரி ஆணையத்தால் கண்காணித்து நிர்வகித்துவரும் காவிரி நதியின் ஊடே புதிய கட்டுமானங்கள் கட்டுவோம் என்பதும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்வது என்பதும் சட்டத்திற்குப் புறம்பானது. சட்ட வழி முறைகளுக்கு உட்பட்டு அமலாக்கப்படும் திட்டங்களுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்ய முடியும்.


ஆனால் மத்திய நீர்வளம், சுற்றுச்சூழல், வனத் துறை, மற்றும் மூன்று மாநிலங்களின் ஒப்புதல், காவிரி ஆணையத்தின் அனுமதி என எதைப் பற்றியும் கவலைப்படாது. மேகதாது அணை கட்டுமான திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்வதென்பது தவறாகும். மத்திய அரசு இந்த தவறான நிதி ஒதுக்கீட்டை தடுத்திட வேண்டிய ஒன்றிய அரசு வேடிக்கை பார்க்கிறது. இந்த நிலையில் கர்நாடகத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர். எப்படியாவது மேகதாது அணை கட்டினால் நல்லது என்று கூறி உள்ளதை வன்மையாக கண்டிக்கிறோம்.

தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கர்நாடக அரசின் நிதி ஒதுக்கீட்டை கண்டித்துள்ளது பாராட்டுக்குரியது.

இந்நிலையில் கர்நாடக அரசின் அத்துமீறலை கண்டித்தும், மத்திய அரசுஇதைத்தடுக்கக்கோரியும்காவிரி டெல்டா மாவட்டங்களில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் 15.3.2022 அன்று நடத்தப்பட்டது. கடலூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, தஞ்சாவூர் தெற்கு, தஞ்சாவூர் வடக்கு புதுக்கோட்டை, திருவாரூர் ஆகிய மாவட்ட மாவட்டங்களில் சிறப்பாக நடந்தது. விவசாயிகள் பெரும் எண்ணிக்கையில் பங்கு கொண்டனர்.



## ஜீவாவின் பேரனுக்கு பணிநியமனம்
# முதலமைச்சருக்கு நன்றி




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் புகழார்ந்த தலைவர் பேராசான் ப.ஜீவானந்தம் அவர்களின் மகன் வழி பேரன் ம.ஜீவானந்தத்திற்கு மார்ச் 14 அன்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்தில் இளநிலை உதவியாளர் பணிநியமனம் வழங்கியுள்ளார். மாற்றுத் திறனாளியான ம.ஜீவானந்த் வாழ்க்கைக்கு இது பேருதவியாக அமையும். நாட்டின் விடுதலைப் போராட்ட வீரரின் குடும்பத்திற்கு பணிநியமனம் வழங்கி ஆதரித்து முதலமைச்சருக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு நன்றி பாராட்டி மகிழ்ச்சியை தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

## திருத்துறைப்பூண்டியில்
# விவசாயிகள் போராட்டம்

திருத்துறைப்பூண்டி ஒன்றியம், நகரம், சார்பில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில், மேகதாதுவில் அணைகட்டி காவேரி டெல்டா விவசாயிகளை அழிக்க நினைக்கும்பாஜக அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் காமராஜர் சிலை அருகில் சங்கத்தின் ஒன்றிய தலைவர் கே.பாலு தலைமையில் நடைபெற்றது. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே உலகநாதன் கோரிக்கையை விளக்கி பேசினர். ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் பி.விசந்திரராமன், சங்கத்தின் ஒன்றிய செயலாளர் கோ.ஜெயபால் மற்றும் நகர பொறுப்பாளர்கள், ஒன்றிய பொறுப்பாளர்கள், விவசாய சங்க தோழர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு பா.ஜ.க. அரசை கண்டித்து கண்டன கோஷம் எழுப்பினர்.

01ம் பக்கத் தொடர்ச்சி >>

போக்கு ஒன்றிய அரசின் சர்வாதிகார மத்தியத்துவ தன்மையைத் தெளிவாக வெளிப்படுத்தியது.

ஓராண்டு காலமாக நீடித்த விவசாயிகள் போராட்டம், 700க்கும் மேற்பட்ட விவசாயிகளின் உயிர்த் தியாகம் – வேளாண் சட்டங்களைத் திரும்பப் பெறச் செய்தது என்ற போதும் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் கத்தி போன்ற தொழிலாளர் விரோத சட்ட தொகுப்புகள் மத்திய தொழிற்சங்கங்களை இரண்டு நாட்கள் (2022 மார்ச் 28 மற்றும் 29) அகில இந்திய பொது வேலைநிறுத்தத்தை மேற்கொள்ள வேண்டிய விளிம்பிற்கு தள்ளி இருப்பதைக் கட்சியின் தேசியக் குழு கூட்டம் சுட்டிக்காட்டியது.

திமுக, தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி, திரிணாமுல் காங்கிரஸ், ஆம் ஆத்மி கட்சி மற்றும் சிவசேனா உள்ளிட்ட பெரும்பாலான மாநில கட்சிகள் தொடர்ந்து ஒன்றிய அரசின் எதேச்சதிகாரப் போக்கு குறித்தும், மாநில உரிமைகளைப் பறிப்பது குறித்தும் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்து வருகின்றன. எதிர்க்கட்சிகளை ஒடுக்க மத்திய அரசு விசாரணை அமைப்புகளைத் தவறாகப் பயன்படுத்துவது, மாநில அரசுகளுக்கு உரிய நிதியை ஒதுக்கீடு செய்வதில்லை உள்ளிட்ட பிரச்சனைகளும் குறிப்பிடப்பட்டது. மத்திய அரசாங்கத்தின் கூட்டாட்சி முறைக்கு எதிரான இத்தகைய போக்கைக் கண்டித்து கேரள மாநில இடது முன்னணி அரசாங்கம் முன்களத்தில் நின்று போர்க்குரல் எழுப்பி வருகிறது.

ஆர்.எஸ்.எஸ்பாஜகவின் மத்தியத்துவ மற்றும் மேலாதிக்கப் போக்கிற்கு எதிரான எதிர்க்கட்சிகளின் ஒற்றுமையில் இடதுசாரிகள் ஒரு பிரிக்கமுடியாத அங்கமாக இருப்பதையும், ஒரு பரந்துபட்ட, ஜனநாயக, மதச்சார்பற்ற மற்றும் பாசிச எதிர்ப்பு முன்னணியை உருவாக்க இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இதர இடதுசாரி கட்சிகள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளத் தீர்மானித்து இருப்பதை கட்சியின் தேசியக் குழு அங்கீகரித்துள்ளது. வலுவான வெகுமக்கள் இயக்கங்களின் மூலமாகவே அத்தகையதொரு ஐக்கிய முன்னணி உருவாகும் என்ற எதார்த்த நிலையை ஆர்எஸ்எஸ்பாஜகவுக்கு எதிரான கட்சிகளின் கவனத்திற்கு தேசியக் குழு முன்வைத்தது.

தேசத்தின் பொருளாதார நிலை சிறப்பாக இருப்பது போல் முன்னிலைப்படுத்தும் ஒன்றிய நிதியமைச்சரின் முயற்சிகளை தேசிய குழு கூட்டம் மறுதலிக்கிறது. விலை உயர்வு மற்றும் வேலையின்மை உள்ளிட்ட பிரச்சனைகள் உத்தரப்பிரதேசம், பீகார் மற்றும் இதர மாநிலங்களில் உள்ள இளைஞர்களை ரயில்வே பணிகளில் ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு எதிராகப் போராடச் செய்துள்ளது, அதன் விளைவாக, ரயில்வே பணிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை ஒட்டுமொத்தமாக ரத்து செய்யப்பட்டது. வேலைவாய்ப்பில் பெண்களின் சதவிகிதம் குறைவாக இருப்பது வேதனை அளிக்கக்கூடிய மற்றொரு விஷயம் ஆகும். நிலைமை இவ்வாறு இருக்க, நிதிநிலை அறிக்கை வேலையின்மை பிரச்சனையை முற்றாகப் புறந்தள்ளுகிறது.

கார்ப்பரேட் நிறுவனங்கள் மற்றும் கார்ப்பரேட் ஆதரவு குழுக்களுக்கு ஒன்றிய நிதியமைச்சர் சலுகைகளை வாரி வழங்கி இருக்கிறார். மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் மற்றும் இதர நலவாழ்வு நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்துள்ளார்.

கல்வி மற்றும் மருத்துவத்துறைக்கான நிதி ஒதுக்கீடு ஓரளவு உயர்த்தப்பட்டுள்ளது. பொதுவாக, இந்த நிதிநிலை அறிக்கையானது கார்ப்பரேட் ஆதரவு மற்றும் மக்கள் விரோத நிதிநிலை அறிக்கை என்று தேசியக் குழு கருதுகிறது.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான மோடி அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும், சமூக மற்றும் பொதுத் துறைகளின் மீது உள்ள வெறுப்பையும் நிதிநிலை அறிக்கை வெளிப்படுத்துவதாக உள்ளது. வேளாண்மை, சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் சமூக நீதி துறைகளில் நிதிநிலை அறிக்கை பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாகவே உள்ளது.

உக்ரைன் நெருக்கடி இந்தியக் கல்வித் துறையில் நிலவும் அதிக கட்டண வசூலிக்கும் பிரச்சனையை அம்பலப்படுத்துகிறது. இந்தப் பிரச்சினை குறித்து உடனடியாக விவாதிக்கப்பட வேண்டும்.

கர்நாடகத்தில் மக்களிடையே வகுப்புவாத பிளவை உண்டாக்க ஆர்.எஸ்.எஸ்பாஜகவினரும், இசுலாமிய அடிப்படைவாதிகளும் வெளிப்படையாக முயன்றனர். ஆடைகளைத் தேர்ந்தெடுக்கும் தனிநபர் சுதந்திரத்தை தேசியக் குழு கூட்டம் உயர்த்திப் பிடிக்கிறது; கல்வி கற்கும் உரிமை கோரும் பெண்களின் உறுதிப்பாட்டை வரவேற்கிறது. பெரும்பான்மை வகுப்புவாதமும், சிறுபான்மை வகுப்பு வாதமும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் உதவுவதால், பெரும்பான்மை வகுப்புவாதத்தை சிறுபான்மை வகுப்புவாதம் மூலமாக எதிர்த்து நின்று வெல்ல முடியாது என்ற உண்மையைத் தேசியக் குழு பறைசாற்றுகிறது.

அடுத்து மேற்கொள்ள வேண்டிய பணிகளாகக் கட்சியின் தேசியக் குழுக் கூட்டம் பின்வருவனவற்றை வலியுறுத்துகிறது:

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய மாநாடு 2022ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 முதல் 18 வரை நடைபெறும். இதற்கான வழிகாட்டுதல்களை தேசியக் குழு அங்கீகரித்துள்ளது.

மத்திய தொழிற்சங்கங்கள் அறைகூவல் விடுத்துள்ள இரண்டு நாள் பொது வேலைநிறுத்தத்திற்கு கட்சி அமைப்புகள் முழு ஆதரவு அளிக்க வேண்டும்.

நால்கோ நிறுவன தனியார்மயமாக்கலுக்கு எதிரான போராட்ட இயக்கத்தை முன்னெடுத்தல்.

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதிக்கான வட்டி விகிதத்தை முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு குறைத்திருப்பதற்கு எதிராக வலுவான போராட்டத்தை நடத்துவது.

இவ்வாறு கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் டி.ராஜா வெளியிட்ட ஊடகங்களுக்கான செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

02ம் பக்கத் தொடர்ச்சி >>

வகுப்பு வாதத்திற்கு நாட்டு மக்கள் ஒருபோதும் பெரும்பான்மையினர் ஆதரவாக இல்லை, மாறாக எதிராகவே உள்ளனர் என்பதையும் புரிந்துகொள்ள முடியும்.

மக்கள் தெளிவாகவே உள்ளனர்.

- அரசியலமைப்புச் சட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில்,
- அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கியுள்ள அமைப்புகள் காக்கப்பட வேண்டும் என்பதில்.
- மதச்சார்பின்மை காப்பாற்றப்பட வேண்டும் என்பதில்,
- மக்கள் நிலைகுலையாமல் உறுதியோடு உள்ளனர்.

இத்தகைய கொள்கைகளை கொண்ட கட்சிகள் மக்களை மதித்து, மக்களின் உணர்வை மதித்து ஒன்றுபட்டு நிற்க தவறியது ஏன்? என்ற நியாயமான கேள்விக்கு பதிலளிக்க வேண்டும்.

அகில இந்தியக் கட்சிகள், வட மாநில தேர்தல்களில் தமிழ்நாட்டை முன்னுதாரணமாகக் கொண்டு அணி அமைத்து இருந்தால் முடிவுகள் எவ்வாறு இருக்கும்? என்பதனை எண்ணிப் பார்க்கவேண்டும்.

நடைபெற்ற ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் வகுப்புவாதத்திற்கு, சர்வாதிகாரத்திற்கு, பாசிசத்திற்கு எதிராக போராடும் கம்யூனிஸ்டுகள், இடதுசாரிகள், ஜனநாயக சக்திகள் என அனைவரும் ஒன்றுபட்டு போர் புரிய முன்வரவேண்டுமென மக்கள் தீர்ப்பளித்துள்ளனர்.

மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியை தமிழகம் போன்று உருவாக்கத் தவறியதற்கு மக்கள் தண்டனை அளித்துள்ளார்கள் என்பதே உண்மை!

மக்கள் நம் பக்கம்தான் உள்ளார்கள் என்ற பேருண்மையை உணர்ந்து செயல்பட வேண்டியவர்கள் அரசியல் கட்சிகள்தான் அவர்களை உணரச் செய்திட மக்களை அணிதிரட்டுவோம், பன்மடங்கு அதிகரிப்போம் 2024 நாடாளுமன்றத் தேர்தலை எதிர்கொள்வோம், வகுப்புவாதத்தை வீழ்த்துவோம், மாற்றத்தை காண்போம், நாட்டை காப்போம் – மீண்டும் சந்திப்போம்! வணக்கம்.

தோழமைமிக்க

இரா.முத்தரசன்

இரா.முருகவேள்



# பண்ணாரி - திம்பம் மலைப்பாதை

# தடையும் சுற்றுச் சூழல் பாதுகாப்பும்

**ஈரோடு மாவட்ட ஆட்சியர் கோவையிலிருந்து மைசூர் செல்லும் சாலையில் பண்ணாரி திம்பம் பகுதியில் போக்குவரத்து நெரிசலை குறைப்பதற்காகவும், வனவிலங்குகள் வாகனங்களில் அடிபட்டு இறப்பதைத் தவிர்க்கவும் 2019ம் ஆண்டு திம்பம் சாலையில் இரவு நேர போக்குவரத்துக்கு தடை விதித்தார். இது இருமாநில வணிகத்தையும், வனத்துக்குள்ளிருக்கும் சுமார் 160 கிராமங்களின் அன்றாட வாழ்க்கையையும், பல்லாயிரம் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கும் என்று பொதுமக்களிடம் இருந்து எதிர்ப்பு வந்ததால், இந்த தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.**

தற்போது சென்னை உயர்நீதிமன்றம் ஈரோடு மாவட்ட ஆட்சியரின் உத்தரவை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று உத்தரவிட்டதன் அடிப்படையில் இந்தத் தடை மீண்டும் அமுலுக்கு வந்துள்ளது.

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு உட்பட்ட பண்ணாரி திம்பம் சாலையில் மாலை 6 மணி முதல் காலை 6 மணி வரை வாகனப்போக்குவரத்து முற்றிலும் தடை செய்யப் பட்டுள்ளது. தடை இல்லாத நேரங்களில் இந்த சாலையில் பயணிக்கும் வாகனங்களுக்கு புதிதாக நுழைவுக் கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

இருபத்தி நான்கு மணிநேரம் நடந்து வந்த போக்குவரத்து பனிரெண்டு மணி நேரம் நடப்பதால் சூழல் மாசும், ஒலி மாசும், போக்குவரத்து நெரிசலும் அதிகரிக்கவே செய்யும், பகல் நேரத் தில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கையும், வேகமும் அதிகரித்து விலங்குகள் சாலையைக் கடப்பது சாத்தியமே இல்லாமல் போய்விடும்.

சத்தியமங்கலம் புலிகள் காப்பக எல்லைக்குள் இருக்கும் சுமார் 160 கிராமங்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் விநியோகித்தல், மாணவர்கள் பள்ளி சென்று திரும்புவது, கிராம மக்கள் வேலைக்கும் செல்வதால், காய்கறிகள் போன்ற விவசாய பொருட்களை கீழே மேட்டுப்பாளையத்திலும் சத்திய மங்கலத்திலும் உள்ள மார்க்கெட்டுகளுக்கு உரிய நேரத்தில் கொண்டு சென்று விற்பனை செய்வது சாத்தியமில்லாத தாகிவிடும்.

பெங்களூர் கோழிக்கோடு சாலை பந்திப்பூர் வழியாக செல்கிறது. இந்த சாலை பந்திப்பூர் சரணலாயம் வழியாகச் செல்வதால் இரவு நேரங்களில் மூடப்படுகிறது. முதுமலை புலிகள் காப்பகத்திலும் இரவுநேரப் போக்குவரத்து தடை செய்யப்பட்டுவிட்டது. எனவே கூடலூர் மைசூர் சாலையும் தமிழ்நாடு கர்னாடகா போக்குவரத்துக்கு பயன்படுவதில்லை. இது பற்றி வழக்கு நடந்து போது சத்தி திம்பம் சாலை இருக்கிறது என்று சொல்லிதான் இந்தச் சாலைகள் மூடப்பட்டன.. இப்போது சத்தி திம்பம் சாலையும் மூடப்பட்டுவிட்டது. மாற்று சொல்லவே இல்லை. இருக்கும் ஒரே மாற்று ஒசூர் வழியாக பெங்களூர் செல்லும் சாலைதான். இது தேசிய நெடுஞ்சாலை என்பதால் இந்த வழியெல்லாம் பெருந்தொகை சுங்கமாக வசூலிக்கப்படுகிறது என்றே பல வாகன ஓட்டிகள் இந்த சாலையைப் பயன்படுத்தி வந்தனர்.

எனவே இந்தத் தடையானது பல்லாயிரம் வணிகர்கள், விவசா யிகள், மாணவர்கள், வாகன ஓட்டிகளின் வாழ்வாதாரத்தை பாதிக்கும்.

வனத்துறை கொடுத்த கணக்குப் படி 2012 ஆம் ஆண்டி லிருந்து 2022 ஆம் ஆண்டுவரை 152 வன விலங்குகள் இந்தச் சாலையில் வாகனங்களில் அடிபட்டு மரணம் அடைந்துள்ளன. ஒவ்வொரு நாளும் 6000 வாகனங்கள் இந்தச் சாலையில் செல்கின்றன என்று வனத்துறை கூறுகிறது. எனவே ஒரு ஆண்டுக்கும் சுமார் 21,90,000 வாகனங்கள் ஒவ்வொரு ஆண்டும் இந்த சாலையில் பயணிக்கின்றன. எனவே பத்து ஆண்டுகளில் இரண்டு கோடி வாகனங்கள் இதில் சென் றுள்ளன. இதில் 152 வாகனங்கள் தான் விபத்து ஏற்படுத்தி உள்ளன. அடிபட்டு இறந்ததாகச் சொல்லப்படும் மூன்று சிறுத்தைகள் தவிர இறந்து போன உயிரினங்களில் பாம்புகள், மயில்கள், சிறுபறவைகள் ஆகியவையும் உள்ளன. இதெல்லாம் எந்த கிராமத்து சாலையிலும் நடக்கக் கூடியதுதான்.

நாள் ஒன்றுக்கு 6000 வாகனங்கள் இந்த பாதையில் செல்கின்றன என்பதையும் 152 உயிரினங்கள் இறந்துள்ளன என்பதையும் வனத்துறை தக்க ஆதாரங்களுடன் முன்வைக்க வில்லை என்கிறார் தமிழ்நாடு பழங்குடி மக்கள் சங்கத் தோழர் மோகன் குமார். இந்த 152 விலங்குகள் என்பது சென்னிமலை உள்ளிட்ட ஈரோடு வனச் சரகம் முழுவதற்குமான புள்ளிவிவரம் என்கிறார் அவர்..

**இந்த உயிரிழப்புகளுக்கு இவ்வளவு கடுமையான தடை தேவையா? வன விலங்குகளைக் காக்க வேறு நடவடிக்கைகள் வேகத்தடைகள் அமைப்பது, வாகனங்களை குழுக் குழுவாக அனுமதிப்பது, விலங்குகள் சாலையைக் கடக்க ஏதுவாக பாலங்கள் திறப்புகள் அமைப்பது என்று மாற்று ஏற்பாடுகள் செய்யலாம். மக்கள் நெரிசல் மிகுந்த பகுதிகளினூடே ரயில்களும், பஸ்களும் விபத்தின்றி செல்லும் போது காட்டிலும் விலங்குகளுக்கு சேதமின்றி வாகங்களை இயக்க முடியும் என்கின்றனர் மக்கள்.**

இப்போதும் பல லட்சம் வாகனங்களில் அற்பத்திலும் அற்பமான வாகனங்களே விபத்துகளை ஏற்படுத்தியுள்ளன. நெரிசல் மிகுந்த நகரங்களில் பஸ்களையும், ரயில்களையும் உயிர்ச்சேதம் விபத்துக்கள் இல்லாமல் இயக் குவது சாத்தியப் படும் போது அதே போல வனத்தில் மட்டும் ஏன் வாகனங்களை இயக்க முடியாது.

சென்ற ஜனவரியில் சத்தியமங்கலம் புலிகள் காப்பகம் தனது பகுதியில் வாழும் புலிகளின் எண்ணிக்கையை இரட்டிப் பாக்கியுள்ளதாக உலக அளவில் வழங்கப் படும் ஜிடீ2 என்ற மரியாதைக்குரிய விருதைப் பெற்றுள்ளது. 2010 இல் 43 ஆக இருந்த புலிகளின் எண்ணிக்கை 80 ஆக உயர்ந்து உள்ளது என்று கூருகிறார்கள். இந்த பாதையில் இவ்வளவு வாகனங்கள் சென்று கொண்டிருக்கும் போதுதான் இங்கே புலிகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

வனங்களை கோட்டைகளாக மாற்றிப் பாதுகாக்கும் சுற்றுச் சூழல் கோட்பாடே சூழல் பாதுகாப்புக்கான ஒரே கோட்பாடு என்ற எண்ணமே இங்கே உள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் யெசொமைட் பள்ளத்தாக்கில் பூர்வகுடிகளான செவிந்தியர்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்தனர். வெள்ளைக் காலனியாதிக்க வாதிகள் இந்தப் பகுதியைக் கைப்பற்றியதும் பேரழகு வாய்ந்த காட்டுக்கு இந்த அரை நிர்வாண பழங்குடிகளும், அவர்களது குடிசைகளும் இழுக்காக இருக்கின்றன என்று கூறி அவர்களை காட்டிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக வெளியேற்றத் தொடங்கினர். கடைசியில் 1980 களில் அவர்களது இறுதிக் குடியிருப்பும் வெளியேற்றப்பட்டு யெசொமைட் பள்ளத்தாக்கு முழுவதும் சுற்றுலாப்பயணிகளுக்கும் காட்டை கேளிக்கைகளுக்கும் மன அமைதிக்கும் ஓய்வுக்கும் பயன்படுத்துபவர்களுக்கும் திறந்து விடப்பட்டது.

போக்குவரத்தால் விலங்குகள் உயிரிழக்கின்றன என்ற காரணம் கூறி சத்தி திம்பம் சாலையில் போக்குவரத்து தடை செய்யப்படுகிறது. அருகே உள்ள முதுமலை புலிகள் காப்ப கத்தின் மையப் பகுதியில் அதி உயர் அழுத்த மின் வயர்கள் செல்கின்றன. நீலகிரி மைசூர் பகுதியில் 31 உயர் அழுத்த மின் வயர்கள் செல்கின்றன. முதுமலை புலிகள் காப்பகத்தினுள் வன விலங்குகள் இறங்கி ஏற முடியாத கான்கிரீட் கரைகள் கொண்ட கால்வாய்கள் உள்ளன. சிங்காரா கிளென்மார்கன் குழாய் தொடர் செல்கிறது. இது பிரம்மாண்டமான குழாய்களைக் கொண்டதாகும். இவற்றுக்கு இருபுறமு 600 மீட்டர் தொலைவுக்கு வன விலங்குகள் வருவதில்லை என்று **Staying Connected: Addressing the Impacts of Linear Intrusions on Wildlife in the Western Ghats** என்ற ஆய்வு கூறுகிறது. நீலகிரி முழுக்க அணைகள் உள்ளன. சுரங்கங்கள் உள்ளன. இவை அனைத்துமே வனவிலங்குகளுக்கு ஊறு விளைவிப்பவைதான். பல வன விலங்குகளை பலிவாங்கிக் கொண்டிருப்பவைதான். இப்படியிருக்கும் போது மக்கள் பயன்படுத்தும் சாலை மட்டுமே ஏன் குறிவைக்கப்படுகிறது?

கோவை போன்ற பெரு நகரங்களுக்கு நீரும், மின்சாரமும் அளிக்கும் அணைகளும், வாய்க்கால்களும், பிரம்மாண்டமான குழாய் தொடர்களும், அதி உயர் அழுத்த மின்சார வயர்களும் இல்லாமல் கீழே உள்ள நகரங்கள் வாழ முடியாது. அங்கே குவிந்து கிடக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மூலதனம் பெருக முடியாது. இதன் காரணமாகவே இவை தடை செய்யப்படவில்லை.

வனக்கோட்டை சூழல்வாதிகளும் வனத்துறையும் சூழலை அழிக்கும் பொருளாதார கொள்கைகளைப் பற்றிக் கவலை கொள்வதில்லை. அதற்கு பதில் பல மாபெரும் நிறுவனங்களின் ஆதரவை கோருகின்றன. மன்சாண்டோவுக்கும் **wwf** க்கும் உள்ள தொடர்பு குறித்து **The silence of the Panada** என்ற ஆவணபப்டம் வந்துள்ளது. வனத்துறை குறிப்பிட்ட சில வனப்பகுதிகலை பகுதிகளை மட்டும் பாதுகாத்து வைப்பதனாலே சுற்றுச் சூழலை பாதுகாத்துவிட முடியும் என்ற மாயையை உருவாக்குகிறது.

பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகளில் மக்களின் ஒத்துழைப் போடு சூழல் பாதுகாப்பு என்பதை அடியோடு புறக்கணித்து போலீஸ் போன்ற அரசு படைகளைக் கொண்டே வனங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறது இந்தக் கோட்பாடு. இது காடுகளை ராணுவமயமாக்கும் முயற்சியாகும்.

இப்போதும் இந்தப் போக்குவரத்துத் தடையானது வனப் பாதுகாப்புக்கானது என்று சொல்லப்பட்டாலும் வனத்துறையின் கையில் மேலும் அதிக அதிகாரங்கள் குவிக்கப்படுவதற்கே உதவும். மக்களின் கருத்து, நலன் என்பது இரண்டாம் பட்ச மாகி காடுகள் போலீஸ்மயமாவதற்கான சூழலே இதனால் ஏர்படக் கூடும். இதையே சூழல் கோட்டை ஆர்வலர்கள் விரும்புகின்றனர்.

இந்தியாவில் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதிகள் 1988 ஆம் ஆண்டில் 67 இருந்தன. இப்போது அவை 870 ஆகிவிட்டன. இது இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 5 சதவீதம் ஆகும். இவற்றில் 43 லட்சம் மக்கள் வசிக்கின்றனர்.

வன உரிமைச் சட்டம் மக்களுக்கு தாங்கள் வசிக்கும் காட்டை நிர்வகிக்க அளித்துள்ள உரிமைகள், வனங்களில் வசிக்கும் மக்களின் ஜனநாயக உரிமைகள், வனங்களைப் பயனப்டுத்தி வரும் மக்களின் உரிமைகள் ஆகியவை தடை விதிக்கப்படும் போது கணக்கில் எடுத்துக் கொள்ளப் படவே யில்லை.

வனத்துறையும் காவல்துறையும் வகனங்களை சரிவரி நிர்வகிப்பதில்லை என்பதே அவற்றின் மீதுள்ள குற்றச்சாட்டு. இவை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு பெருஞ்சேதத்தையும், சமூக அமைதியின்மையையும் ஏற்படுத்திவருகின்றன என்ற விமர்சங்களும் உண்டு. ஆனால் இந்தத் தடை உத்தரவுகள் இந்தத் துறைகளின் கரங்களில் மேலும் அதிக அதிகாரங்கள் குவிக்கப்படுவதையே உறுதி செய்கின்றன.

எந்த விவாதமும் இல்லாமல் தெங்குமராட்டா வழியாகச் செல்லும் சாலையில் போக்குவரத்து தடை செய்யப்பட்டது. ஓசூர் பெங்களூர் சாலையில் ஏராளமான சுங்கச் சாவடிகள் இருப்பதால்தான் சத்தி சாலையில் போக்குவரத்து அதிகரிக் கிறது என்றால் அதற்கு அல்லவா தீர்வு காண வேண்டும்? காலங்காலமாக இருந்து வரும் ஒரு சாலையில் போக்குவரத்தை தடை செய்வது எப்படி தீர்வாக முடியும்?

தொடர்புக்கு: **88833 82666**



# சங்கே முழங்கு!

## இரா.முத்தரசன், எம். செல்வராசு எம்.பி முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் சந்திப்பு



இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன், எம்.செல்வராசு எம்.பி., மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் எஸ்.குணசேகரன் எக்ஸ்.எம்.எல்.ஏ., வேதாரண்யம் ஒன்றிய செயலாளர் சிவகுரு பாண்டியன், இளைஞர் பெருமன்றத்தின் மயிலாடுதுறை மாவட்டச் செயலாளர் பிரபாகரன் ஆகியோர் தமிழக முதல்வரை சந்தித்து முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் அளித்துள்ள கோரிக்கை மனு அளித்தனர்.

● வேதாரண்யம் பகுதி உப்பை பயன்படுத்தி இராசயான உப்பு தொழிற்சாலை அமைத்திட வேண்டும்,

● அந்நிய செலவாணியை ஈட்டக்கூடிய விதத்தில் மாகூழ் தயாரிப்பு, ஆலையில் ஏற்றுமதி செய்வதற்கான திட்டத்துடன் செயல்படுத்திட வேண்டும்.

● நாகப்பட்டினம் மீனவர்களின் வாழ்வாதாரத்தை உறுதிபடுத்திட வேண்டும்.

● ஆர்காட்டுத்துறை, வெள்ளப்பள்ளம், தூண்டில் வளைவு துறைமுகப் பணியை விரைவு படுத்திடவும். ஆ.நம்பியார் குப்பம் பொதுமக்கள் பங்களிப்புடன் கூடிய துறைமுகப் பணியை விரைவுபடுத்திட முடித்திடவும்.

● சாமந்தன் பேட்டை தூண்டில் வளைவு துறைமுகத்திற்கு சென்ற கூட்டத் தொடரில் அமைப்பதற்கு அறிவிப்பு செய்துள்ளீர்கள். அதற்கான நிதி ஒதுக்கி செயல்படுத்திட வேண்டுகிறேன்.

● செருதூர் தூண்டில் வளைவு மீன்பிடி துறைமுகப் பணி செயல்படுத்திட வேண்டுகிறேன்.

● நாகப்பட்டினத்தில் சிப் காட் தொழில் நிறுவனம் அமைத்து வேலையில்லா தொழில்நுட்ப பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிட வேண்டுகிறேன்.

● திருவாரூரில் சிப் காட் அமைக்க சென்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் அறிவிக்க செய்து பணியை துவக்கி வைத்தற்கான நடவடிக்கை எடுக்க தாங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம். பணியை துரிதப்படுத்த வேண்டுகிறோம்.

● டெல்டா மாவட்டத்தை நெல் அரிசி பாதுகாப்பு மண்டலமாக அறிவித்து நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உரிய பாதுகாப்பும், விவசாய உற்பத்தியை ஊக்குவிக்க உரிய திட்டங்களை உள்ளடக்கிய அறிவிப்பை பட்ஜெட் கூட்டத் தொடரில் அறிவிக்கச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

● டெல்டா மாவட்டம் முழுவதும் களிமண் கலந்த மண் அமைப் பால் சாலைகள் மிகவும் மோசமாக உள்ளது. பொது மக்கள் பயணம் மேற்கொள்ள மிகவும் சிரமப்படுகிறார்கள். கீழ்க் கண்ட சாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து மேம்படுத்திட வேண்டுகிறேன்.

● **சீரமைக்கப்பட வேண்டிய சாலைகள்**

1. திருவாரூர் – மன்னார்குடி (எஸ்.ஹெச்)
2. திருவாரூர் – மயிலாடுதுறை
3. கும்பகோணம் – மன்னார்குடி
4. மன்னார்குடி – மதுக்கூர்
5. திருப்பத்தூர் – எடையூர் சங்கந்தி
6. வடபாதி மங்களம் – கோட்டூர்
7. கச்சணம் குலப்பாடு –கீழ்வேளூர்
8. மேலப்படாகை – திருக்குவளை – கச்சணம்
9. திருத்துறைப்பூண்டி – வாய்மேடு
10. மன்னார்குடி – திருத்துறைப்பூண்டி
11. நாகப்பட்டினம் – திருமருகல் (வழி) சன்னாநல்லூர்


● **ஏரி தூர்வாருதல் நீர் சேமித்தல்**

1. திருப்பூண்டி ஏரி (நாகப்பட்டினம்)
2. பனங்குடி ஏரி (நாகப்பட்டினம்)
3. திருமேனி ஏரி (மன்னார்குடி, திருவாரூர்)

● **தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம்**

அதிகாலை 6 மணிக்கே பணிக்கு வந்து பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற முறை நடைமுறைக்கு சாத்தியமில்லை. இதை மாற்றி தமிழக அரசு எப்பொழுதும் போல் பழைய நிலைமையில் பணி மேற்கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டுகிறேன்.

மேலே கண்ட நாகப்பட்டினம் எனது தொகுதி கோரிக்கைகளை செய்து தரவேண்டுமாய் அன்புடன் வேண்டுகிறேன் இன்னும் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மனு அளிக்கப்பட்டது.



உக்ரைனில் விழுந்த குண்டில்

பேராசிரியர். மு.நாகநாதன்

# வெடித்து சிதறிய நீட் நுழைவு தேர்வு பொய்கள்!

**உக்ரைனில் விழுந்த குண்டில் வீழ்ந்து முடிந்தது மாணவர் நவீன் உயிர் மட்டுமல்ல. நவீன் மருத்துவர் ஆவார் என்ற நம்பிக்கையில் இருந்த அவர் குடும்பத்தின் விருப்பமும் வெடித்து சிதறியுள்ளது.**

மறைந்த மாணவர் நவீனின் தந்தை ஞான கவுடா செய்தி ஊடகங்களுக்கு அளித்த பேட்டியே இதற்கு சான்று.

“எனது மகன் புதுமுக வகுப்பு (Pre-university)பாடங்களின் தேர்வில் 97 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றுயிருந்தார்.”

“நமது அரசியல் முறையில் கல்வி முறையில் சாதி ஆதிக்க முறையில் வெறுப்பு அடைந்துள்ளேன். தனியார் துறைதான் எல்லாவற்றையும் ஆட்டிப் படைக்கிறது.”

நாட்டின் ஒரு நடுத்தர வருமானப்பிரிவில் உள்ளே ஒரு குடும்பத் தலைவரின் அவல நிலைக்கு இது ஒரு எடுத்துக் காட்டாகும். இது தான் தனியார் துறை கல்வித் துறையில் இயங்கும் தன்மையும், சாதாரண குடும்பங்கள் சந்திக்கும் பொருளாதார கொடுமையும் !

ஏழை குடும்ப பிண்ணனியில் பிறந்து மேல்நிலை பாடங்களில் அதிக மதிப்பெண்களை பெற்றும் தனக்கு நுழைவுத்தேர்வு முறையால் மருத்துவ படிப்பிற்கு இடம் கிடைக்கவில்லை என்ற காரணத்தால் தானே ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த அனிதா தற்கொலை செய்து கொண்டார்.

இங்குள்ள தனியார் மருத்துவக்கல்லூரிகளில் மருத்துவ படிப்பை முடிப்பதற்கு கல்வி கட்டணம் ஏறக்குறைய ரூபாய் ஒரு கோடி செலவாகிவிடுகிறது. நீட் தேர்வில் மற்றோரு கொடுமையும் நிகழ்கிறது.

நீட் தேர்வில் மிகக் குறைந்த மதிப்பெண்கள் பெற்ற வெளி நாட்டு மாணவர்கள் என்.ஆர்.ஐ பிரிவு வழியாக இந்திய மருத்துவக் கல்லூரியில் இடம் பெறுகிறார்கள்.

நீட் தேர்வில் குறைந்த மதிப்பெண்களை பெற்ற மாணவர்கள் அதிக கட்டணத்தை செலுத்தி தனியார் மருத்துவக் கல்லூரி களில் இடம் பெற்றுவிடுகிறார்கள். இங்கெல்லாம் தகுதி எங்கே போனது !

இதைதானே நீதிபதி ராஜன் குழு ஆதாரங்களை திரட்டி ஒரு ஆய்வு அறிக்கையாக அளித்தது.

**பல இலட்சம் ரூபாய் செலுத்தி நீட் தேர்வு பயிற்சி மையங் களில் ஒரு ஆண்டல்ல பல ஆண்டுகள் பயிற்சி பெற்ற மாணவர்கள் அதிக மதிப்பெண்களோடு அரசு மருத்துவக் கல்லூரிகளில், அரசு உறுதி செய்யும் கட்டணத்தில் தனியார் கல்லூரிகளில் இடம் பெற்றுவிடுகிறார்கள். வாழ்க்கையில் பொருளாதார சிக்கலில் தவிக்கும் நகர்புற குடும்பங்களிலிருந்து மாணவர்கள் நீட் தேர்வு பயிற்சியில் சேர முடியாத நிலையில் உள்ளபோது ஊர் புற மாணவர்களின் எங்கே பணத்திற்கு செல்வார்கள்?**

நீட் தேர்விற்கு முன்பே தேர்வு முறையை அணுகுவதில் மாணவர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் உருவாகிவிடுகிறதே !

மருத்துவ கல்வியை ரூபாய் 30 லட்சம் செலவில் ரஷ்யா, உக்ரைன் போன்ற நாடுகளில் உள்ள தனியார் மருத்துவ கல்லூரியில் தருகின்றனவே !

உக்ரைன் நாட்டின் மருத்துவக்கல்லூரிகளில் பெறும் பட்டப் படிப்பை உலக சுகாதார நிறுவனம் அங்கிகாரம் செய்துள்ளது.

நடுத்தர வருமான பிரிவு குடும்ப பின்னணி கொண்ட மாணவர்கள் வெளிநாடுகளுக்கு சென்று மருத்துவ படிப்பை தொடர்வதற்கு காரணம் இது தான்.

இந்த வாய்ப்பும் தற்போதைய போர்ச் சூழலில் இழக்க நேரிடுகிறது அல்லவா !

கட்டிய கட்டணமும் போச்சு !
கல்வியும் போச்சு !!
உயிரும் போச்சு !!!

இது தான் ஒன்றிய அரசின் சமூக நீதிக்கு எதிரான கல்விக் கொள்கையால் ஏற்பட்ட விளைவு.

நமது பிரதமர் மோடி என்ன தீர்வை முன்வைக்கிறார் தெரியுமா? அதிக தனியார் மருத்துவக்கல்லூரிகளை தொடங்க வேண்டுமாம் !

ஆனால் நவின் தந்தை ஞான கவுடா எல்லாம் தனியார் துறை ஆட்டிப்படைக்கிறது என்று குறிப்பிட்டதை மனதின் குரலுக்கு கேட்கவில்லையா?

நாட்டில் மக்கள் அனைவரும் அம்பானி, அதானிகள் போன்று ஒரு நொடியில் பல இலட்சம் ரூபாய் உயர் வருமானம் பெறுகிறார்கள் என்று நினைக்கிராறா பிரதமர் மோடி !

மருத்துவக்கல்வி உட்பட பொது சுகாதாரத் துறைக்கு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் ஒன்றிய அரசு 1.5 விழுக்காடு அளவில் தான் பொது செலவைச் செய்கிறது.

தமிழ்நாடு உட்பட பல மாநிலங்களில் மாநில அரசு பெரும் நிதி ஒதுக்கீடு வழியாக அரசு மருத்துவக் கல்லூரிகளை தொடங்கினால் அங்கேயும் வந்து பணக்காரர்களுக்காக நீட் தேர்வை நுழைத்து சமூக நீதியை குலைப்பதற்கு தான் ஒன்றிய அரசு இயங்குகிறதா?

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பாண்டிச்சேரி ஜிப்மர் உட்பட மருத்துவ கல்லூரியில் ஏன் நீட் தேர்வை நடத்தி மாண வர்களை சேர்க்கவில்லை?

பாஜக அரசு அமைந்த பிறகு கல்வித்துறையில் தனியார் துறையை வளர்த்தெடுக்கதான் முயன்று வருகிறது.

அதன் வடிவம் தான் ஒன்றிய அரசின் புதிய கல்விக் கொள்கை என்று புது டெல்லி பல்கலைக்கழக ஆய்வாளர்களான நரேந்திர தாக்கூர் வைசாலி இணைந்து ஒரு கட்டுரையை மும்பையில் இருந்து வெளிவரும் அரசியல் பொருளாதார வார ஏட்டில் எழுதியுள்ளனர்.

அக்கட்டுரையில் ஒன்றிய அரசு தொடர்ந்து கல்விக்கான நிதி ஒதுக்கீட்டை குறைத்து வருவதை புள்ளிவிவரங்கள் வழியாக மெய்ப்பித்துள்ளனர்.

ஒன்றிய அரசு நாட்டின் ஒட்டுமொத்த பொருள் உற்பத்தி மதிப்பில் கல்விக்காக செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு 2013–14 ஆண்டில் 0.63% விழுக்காட்டு அளவிலிருந்து, 2019–20 ஆண்டில் 0.55% விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது.

கோவிட் தொற்று நோய் காலத்திற்கு பிறகும் 2022–23 ஆம் ஆண்டில் நாட்டின் ஒட்டுமொத்த பொருள் உற்பத்தி மதிப்பில் கல்விகாகான நிதி ஒதுக்கீடு 0.40 ஆக குறைந்ததுள்ளது என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

2019 ஆம் ஆண்டிற்கு பிறகு கோவிட் நோய் தொற்று காலத்தில் தொடங்கிய பொருளாதார சரிவினால் நடுத்தர வருமான பிரிவினர் ஏழைகளாக மாறிவருகின்றனர்.

ஏழைகள் வறுமையின் பிடிக்குள் சிக்கி தவிக்கின்றனர்.

கடந்த 70 ஆண்டுகளில் இந்தியா சந்திக்காத பொருளாதார, நிதிச் சறுக்கல் காலத்தில் பெரும் முதலாளிகளின் வருமானம் பல மடங்குகள் உயர்ந்துள்ளது.

ரஷ்யா உக்ரைன் போர் விளைவு ஏற்படுத்தப் போகும் சரிவுகளைப்பற்றி கவலை கொள்ளாமல்

பிரதமர் மோடி உபி தேர்தல் களத்தில் சுற்றி வருவது அவர் வகிக்கும் பிரதமர் பொறுப்பிற்கு அழகா என்ற கேள்வி எழுகிறதல்லவா?

அவரின் மனசாட்சி தான் இதற்கு விடைக்கண்டு மனதின் குரலில் ஒலிக்க வேண்டும்.

இத்தனை நாட்களாக ஒன்றிய அரசு சார்பாளர்களும், கல்வியாளர் போர்வையில் உலாவரும் பதவி தேடிகளும், தமிழ்நாடு சட்டமன்றத்தில் கொண்டு வரப்பட்டு நிறை வேற்றப்பட்ட நீட் தேர்வு நீக்க சட்டத்திற்கு ஒப்புதல் தரமால் ஆளுநர் ரவி கூறிய நீட் பொய்கள் எல்லாம் உக்ரைன் குண்டு வெடிப்பில் சிதறியுள்ளன.

எனவே தமிழ்நாட்டின் முதல்வர் ஸ்டாலின் வேண்டுகோளை ஏற்று நீட் தேர்வு நீக்க சட்டத்திற்கு ஒன்றிய அரசு ஒப்புதலை அளித்து சமூக நீதியை போற்ற வேண்டும்.

இது தான் முதன்மையான ஜனநாயக கடமையும் கூட !



த.லெனின்

# உ.பி. தேர்தல் முடிவுக

**பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஐந்து மாநில தேர்தல் முடிவுகள் வெளிவந்து விட்டன. வெற்றிக் களிப்பிலும், வெறிக் கூச்சலிலும் பா.ஜ.க. ஈடுபட்டு வருகிறது.**

ஒரு பக்கம் விவசாயிகள் போராட்டம், விலைவாசி உயர்வு, வேலையில்லா திண்டாட்டம் உள்ளிட்ட பலவற்றின் தாக்கம் அதிகம் இருந்தாலும் அதையும் மீறி பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது என்று அவர்கள் கூறுகிறார்கள். மறுபுறத்திலோ பா.ஜ.க.வின் துணை முதல்வர் உட்பட 10 அமைச்சர்கள் படுதோல்வி அடைந்ததும், விவசாயப் போராட்டக் களமான மேற்கு உத்தரப்பிரதேசத்தின் நான்கு மாவட்டங்களில் உள்ள 19 தொகுதிகளில் 13ல் பாஜக தோல்வியைத் தழுவியுள்ளது. கடந்த 2017 சட்டமன்றத் தேர்தலில் அது பெற்ற வாக்கு சதவிகிதம் 39.17 வென்ற தொகுதிகள் 312 ஆகும். கூட்டணியுடன் சேர்ந்து 325ல் வெற்றி பெற்றது.

ஆனால் 2022ல் அது கடந்த தேர்தலை விட 3% அதிக வாக்குகளைப் பெற்று 41.29% பெற்றது.

ஆனால் பா.ஜ.க. 255 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்று 57 தொகுதிகளை இழந்திருக்கிறது.

ஆனால் சமாஜ்வாதி கட்சி 2017 தேர்தலில் 21.82% வாக்குகளைப் பெற்று 47 தொகுதிகளை மட்டுமே வென்றிருந்தது. அது இப்போது ஏறத்தாழ 10% வாக்குகளை அதிகம் பெற்று 32.21 % ஆக உயர்ந்துள்ளது.

47 தொகுதிகளிலிருந்து 64 தொகுதிகள் அதிகம் பெற்று 111 தொகுதிகளில் வென்றும் கூட்டணிக் கட்சிகள் மொத்தமாக 124 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

மற்றொரு பெரிய கட்சியான மாயாவதியின் பகுஜன் சமாஜ் கட்சி கடந்த 2017ல் 22.2 ஆக இருந்த அதன் வாக்கு சதவிகிதம் தற்போது 12.88 சதமாக குறைந்து 14 தொகுதிகளிலிருந்து வெறும் ஒரு தொகுதியை மட்டும் வென்றிருக்கிறது.

காங்கிரஸ் கட்சியும் தனது வாக்கு சதவிகிதத்தை இழந்து 2.33 சத வாக்குகளோடு இரண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளில் மட்டும் வெற்றி பெற்றுள்ளது.

நல்லாட்சியின் நாயகன் மோடியின் ஆட்சிக்கு ஆதரவாகத்தான் இந்த மாபெரும் வெற்றி என்று ஊடகங்கள் விழுந்து விழுந்து எழுதுகின்றன. ஆனால் இதுவரை இந்திய தேர்தல் வரலாற்றில் எதிர்க்கட்சியை விட 10% அதிக வாக்கு பெற்ற ஒரு கட்சி மிகப் பெரும் வெற்றியைப் பெற்றிருக்க வேண்டும். ஆனால், கடந்த காலத்தை விட ஏன் இடங்கள் குறைந்திருக்கிறது?

பத்திரிகைகளும், ஊடகங்களும் ஊதி, ஊதி உத்தரப்பிரதேச தேர்தல் பா.ஜ.க.வுக்கும் சமாஜ்வாதிக்கும் இடையே மட்டுமே போட்டி என்றே வாதிட்டு வந்தது. அதன் பயனாகத்தான் இவர்கள் இரண்டு பேரும் பயனடைந்திருக்கிறார்கள்.

தேர்தலுக்கு முன்பாக சுமார் ரூ.56 ஆயிரம் கோடி மதிப்பிலான ரேஷன் பொருட்கள் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. சுமார் 2.5 கோடி விவசாயிகளுக்கு ரூ.2000 வீதம் மூன்று தவணையாக ரூ.6000 வங்கியில் செலுத்தப்பட்டது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை சரியாக நிர்வகிக்கப்பட்டதாக ஒரு பிம்பம் உருவாக்கப்பட்டது. ஆனால் இந்தியாவிலேயே அதிக அளவில் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்புணர்வு அங்குதான் நடைபெற்றது என்பது பெரும் செய்தி.

ஊழல் வழக்குகள் மற்றும் வருமானத்திற்கு மீறிய குற்றச்சாட்டிற்கு ஆளாகியுள்ள மாயாவதி இந்தத் தேர்தலில் அடக்கி வாசித்து பா.ஜ.க.வுக்கு ஆதரவாக தலித், ஜாதவ் வாக்குகளை திருப்பி விட்ட கொடுமையும் நடந்தது.

பிரண்ட்லைன் இதழில் பத்திரிகையாளர் நளின் வர்மா ஒரு அதிர்ச்சியான செய்தியைப் பகிர்ந்துள்ளார். அதில் பி.எஸ்.பி. தொண்டர் ரண்வீர் ஜாதவ் தேர்தலில் பகுஜன் சமாஜ் கட்சிக்கு ஆதரவாக இருங்கள் என்று சொன்ன பெகன்ஜி எங்கெல்லாம் சமாஜ்வாதி கட்சி தேர்தல் களத்தில் முன்னணியில் இருக்கிறதோ அங்கெல்லாம் நாம் பா.ஜ.க.வுக்கு வாக்களிக்க வேண்டும் என்று குறிப்பிட்டதாக குறிப்பிடுகிறார்.

மேலும், இன்னொரு பட்டதாரி இளைஞரான முகேஷ் குமார் எங்கள் தொகுதியில் சமாஜ்வாதி கட்சியின் சைக்கிள்தான் முன்னணியில் இருக்கிறது. அகிலேஷ் வேலை வாய்ப்பை உருவாக்குவேன் என்று வாக்குறுதி அளித்துள்ளார். ஏன் நான் சமாஜ்வாதிக்கு வாக்களிக்கக் கூடாது என்று கேட்டுள்ளார்.

அவருக்கு பதில் அளித்த ரண்வீர், மாயாவதிக்கு கணிசமான தொகுதிகள் கிடைத்தால் அமைச்சரவை அமைப்பதிலும் பகுஜன்களுக்கு ஆதரவான கொள்கைகளை வகுப்பதிலும் அவர் பா.ஜ.க.வுக்கு கட்டளையிட முடியும் என்று குறிப்பிட்டார்.

இதை அறிந்து கொண்டுதான் உள்துறை அமைச்சர் அமித்ஷா வாக்குப் பதிவின் கடைசி கட்டத்தில் பெகன்ஜியின் வலிமை பாராட்டப்பட வேண்டும் என்று திருவாய் மலர்ந்தார். பதிலுக்கு மாயாவதியும் எங்கள் வலிமையைப் பாராட்டுவது உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் உயர்ந்த உள்ளத்தை காட்டுகிறது என்று கூறினார்.

ஆக, சாம, பேத, தான, தண்ட முறைகளை பயன்படுத்தி பா.ஜ.க. இந்த வெற்றியை அறுவடை செய்திருக்கிறது என்பது உறுதியாகிறது.

**தேர்தல் துவக்கத்திலேயே உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் இந்தப் போர் 80%க்கும் 20%க்கும் இடையே நடைபெறும் போர் என்றார். ஏறத்தாழ 28 கூட்டங்களில் வெறுப்பு பிரச்சாரத்தையும் மக்களை மத ரீதியாகப் பிளவு படுத்தும் கருத்துக்களையும் பேசினார்.**

பிரதமரோ, அவுரங்கசிப்புக்கும் சிவாஜிக்குமான போர் என்று மத வெறியின் உச்சத்தில் நின்று பிரதமரே பேசினார். சித்து வேலைகளுக்கு பெயர் பெற்ற உள்துறை அமைச்சரைப் பற்றி சொல்ல வேண்டியதில்லை. ஆனால் இவர்களையெல்லாம் தேர்தல் ஆணையம் எந்தத் தெளிவான நடவடிக்கையும் எடுக்காது வேடிக்கை பார்த்ததையும் தான் கவனத்தில் கொள்ள முடியும்.





ஆனால் தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் ஆ.ராசா அன்றைய முதல்வரின் தாயார் குறித்து பேசியதற்காக தேர்தல் பிரச்சாரத்தில் தடை செய்யப்பட்ட நிகழ்வும் நடந்தது. ஆக பா.ஜ.க.வுக்கு ஒரு நீதி மற்றவர்களுக்கு ஒரு நீதி என்பதுதான் தேர்தல் ஆணையத்தின் எழுதப்படாத விதியாக மாறி இருக்கிறது.

ஒரு பக்கம் மதரீதியான போராட்டமாக இந்தத் தேர்தலை காட்ட பா.ஜ.க. முயன்றபோது, மறுபுறம் சிறுபான்மையினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகுப்புவாத கட்சியான ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சியின் அசாதுதீன் ஓவைசி பா.ஜ.க.விற்கு ஆதரவாக பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொண்டார். அவர்கள் போட்டியிட்ட நூறு இடங்களில் ஒரு இடத்தை தவிர 99 இடங்களில் காப்பு தொகையை இழந்துவிட்டார்கள் என்றாலும் இதுபோன்ற கடும் போட்டிகளில் சிறு வித்தியாச வாக்குகளே வெற்றியைத் தீர்மானிக்கும் காரணியாக இருப்பதால் பா.ஜ.க. வெற்றி பெற வாய்ப்பை அளித்து விட்டார்.

# வேலை வழங்கிடக் கோரி அறுவை அரங்க நுட்பனர்கள் ஆர்ப்பாட்டம்

தமிழ்நாடு அறுவை அரங்க நுட்பனர்கள் நலச்சங்கம் சார்பில், வேலை வழங்கிடக் கோரி ,சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் மார்ச் 10 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதில் தமிழ்நாடு மருத்துவத்துறை பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந் , சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர்.இரவீந்திரநாத், அரசுப் பணியாளர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் எம்.பொன்னிவளவன், அறுவை அரங்கு நுட்பனர்கள் நலச்சங்கத்தின் கௌரவத் தலைவர் ந.சுந்தர்ராஜா, பொதுச்செயலாளர் முகமது யூனுஸ், தலைவர் ர.பிரதிப் ராஜன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினார்.






**பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்று ஆட்சியில் அமரவேண்டுமானால் மற்ற கட்சிகளிடமிருந்து வேறுபட்ட உணர்வுபூர்வமான வர்க்க கட்சியின் செயல்பாடு அவசியம்**

**– ஏங்கல்ஸ்**

## மயிலாடுதுறையில் மாவட்ட அளவிலான

# நிதியளிப்பு பேரவை!

மயிலாடுதுறையில் மாவட்ட அளவிலான கட்சியின் நிதியளிப்பு பேரவை சீர்காழி வைத்தீஸ்வரன் கோயில் தனியார் மண்டபத்தில் மாவட்ட செயலாளர் சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள், ஒன்றிய செயலாளர்கள், ஒன்றிய நிர்வாகக்குழு, கிளை செயலாளர்கள் மற்றும் கட்சி உறுப்பினர்கள், வைத்தீஸ்வரன்கோயில் பேரூராட்சியில் வெற்றிபெற்ற உமாதேவி சுரேஷ் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# மீனா சுவாமிநாதன் மறைவு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இரங்கல்

வேளாண் விஞ்ஞானி முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதனின் வாழ்விணையர் திருமதி.மீனா சுவாமிநாதன் (88) மார்ச் 14 அன்று சென்னையில் காலமானார் என்பதை அறிந்து வேதனையுற்றோம்.

திருமதி மீனா சுவாமிநாதன் சமூக செயல்பாட்டாளர். குறிப்பாக குழந்தைகளின் கல்வி மேம்பாட்டில் அக்கறை காட்டி முனைப்பாக செயலாற்றியவர்.


கல்வி தொடர்பான ஒன்றிய அரசின் பல்வேறு வாரியங்களில் உறுப்பினராகவும், சில அமைப்புகளின் தலைவராகவும் பணியாற்றி சிறப்பான பங்களிப்பு செலுத்தியவர்.

பாலின சமத்துவம் தொடர்பான ஆய்வுகளையும், நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வந்த அறிவார்ந்த தாயை இழந்து விட்டோம். அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரைப் பிரிந்து வாடும் அவரது கணவர் முனைவர் எம்.எஸ்.சுவாமிநாதன் மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு மாநிலக்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

# கள் உணர்த்துவது என்ன?

80%




200 வாக்கு வித்தியாசத்தில் 7 தொகுதிகளிலும், 500 வாக்கு வித்தியாசத்தில் 23 தொகுதிகளிலும், 1000 வாக்கு வித்தியாசத்தில் 49 தொகுதிகளிலும், 2000 வாக்கு வித்தியாசத்தில் 86 தொகுதிகளிலும் பா.ஜ.க. வெற்றி பெற்று அரியணை ஏறி இருக்கிறது.

இந்த வாக்கு பிளவுபடவில்லை என்றால் சமாஜ்வாதி கட்சி 292 இடங்களைப் பெற்று தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சியைப் பிடித்திருக்கும்.

பா.ஜ.க. வெற்றிக்கு பாடுபட்டதற்காக பாரத ரத்னா விருதை அவர்கள் அறிவித்தால் அது செல்வி மாயாவதிக்கும், அசாதுதீன் ஒவைசிக்கும் நிச்சயம் கிடைக்கும் என வலை தளங்களில் பகடி காட்சிகள் பகரப்பட்டு வருகின்றன.

மாநிலத்தில் பாசிச பா.ஜ.க. ஆட்சியை எதிர்த்து முறியடிக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, இடதுசாரிகள் சமாஜ்வாதி கட்சியோடு இணைந்து போட்டியிடுவதற்கு பெரும் முயற்சி எடுத்தது. ஆனால், சமஜ்வாதி கட்சியின் பெரியண்ணன் போக்கால் தேர்தல் அணி சேர்க்கை ஏற்படவில்லை. ஜாதிய சமூக அணி சேர்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிற சமாஜ் வாதி கட்சி இடதுசாரி, ஜனநாயக, முற்போக்கு, மதச்சார் பற்ற அரசியல் இயக்கங்களை அணிசேர்க்காதது அதன் தோல்விக்கு முதன்மையான காரணமாகும்.

**விவசாயிகள் போராட்டத்தால், கொரோனா பெருந்தொற்றில் ஆக்ஸிஜன் இன்றி கொத்துக் கொத்தாக இறந்தவர்கள், கணக்கில் இல்லா பிணங்களை கங்கையில் மிதக்க விட்டது, பிற மாநிலங்களில் இருந்து அமைப்பு சாரா தொழிலார்கள் இரத்தம் தோய தோய சாலைகளில் நடந்து வந்தது என்பது போன்றவற்றில் கடும் கோபத்தில் இருந்த மக்களை ஒருமுகமாக ஒருங்கிணைக்கத் தவறிய சமாஜ்வாதியால் பா.ஜ.-க. வென் றது. அதிலும் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய பாலியல் பலாத்காரத்தின் தலைநகர் என்று சொல்லப்பட்ட உன்னாவ் சட்டமன்ற தொகுதியில் பா.ஜ-.க.வின் பங்கஜ் குப்தா தேர்ந் தெடுக்கப்பட்டிருக்கிறார்.**

தலித் பெண் ஒருவரை பாலியல் பலாத்காரம் செய்யப்பட்ட உ.பி. காவல்துறையினரால் நல்லிரவில் வலுக்கட்டாயமாக சடலம் எரியூட்டப்பட்ட கொடுமை நிகழ்ந்த ஹாத்ராஸ் தொகுதியிலிருந்து பா.ஜ.க.வின் அஞ்சுலா சிங் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

தங்களது நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி போராடிய அப்பாவி விவசாயிகள் மீது, ஒன்றிய உள்துறை இணை அமைச்சரின் மகன் கார் ஏற்றி கொன்று உயிர் பலிக்கு வித்திட்ட தொகுதியான நிகாசனிலிருந்து பா.ஜ.க.வின் சாசாங்கு வர்மா தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

மக்களிடம் எவ்வளவு எதிர்ப்பு இருந்தாலும், எதிர்ப்புகள், பிரச்சினைகள், அரசின் மீது விமர்சனங்கள் இருந்தாலும் அவற்றையெல்லாம் மடைமாற்ற வெறுப்பூட்டப்பட்ட இந்துத்துவ மாத்திரை ஒன்றே சர்வரோக நிவாரணியாக இந்தத் தேர்தலில் பா.ஜ.க. கண்டதையும் வெற்றி கொண்டதையும் நாம் காணலாம்.

ஆக மதவெறிக்கு எதிரான அனைத்து சக்திகளும் ஓரணியில் திரண்டால் 2024ல் பா.ஜ.க.வை வீழ்த்த முடியும். அதற்கான களப் போராட்டங்களை இப்போதே துவங்கியாக வேண்டும்.

உத்தரகாண்டில் பா.ஜ.க. மாநில அரசு மீது கடுமையான எதிர்ப்பு மக்கள் மத்தியில் இருந்தாலும் அங்கும் பிரித்தாளும் சூழ்ச்சியின் மூலம் வெற்றியைப் பெற்று விட்டது.

கோவாவில் கடந்த 2017ல் காங்கிரசே வெற்றி பெற்றது. அதன் எம்.எல்.ஏ.க்களில் 10 பேரை விலைக்கு வாங்கி பா.ஜ.க. ஆட்சி அமைத்தது. அப்போதே ஆம் ஆத்மி கட்சி அங்கே களம் இறங்கியது. 2022ல் பா.ஜ.க. படுதோல்வி அடையும் என்று கணிக்கப்பட்டாலும் ஆம் ஆத்மி கட்சி அங்கு பிரித்த வாக்குகளால் மீண்டும் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துவிட்டது.

ஊழலுக்கு எதிரான கட்சி என்று சொல்லும் ஆம் ஆத்மி கட்சி ஒருபோதும் ரபேல், பெகாசஸ் ஊழலுக்கு எதிராகவோ, இன்றைய ஐந்து லட்சம் கோடி பங்குச் சந்தை ஊழலுக்கு எதிராகவோ என்றும் பேசியதில்லை.

ஒரு தெளிவான பொருளாதார, சமூக நீதிக் கொள்கைகளை கொள்ளாத ஒரு கட்சி களத்தில் வாக்குகளை எப்படி அறுவடை செய்ய முடிகிறது? ஜனநாயகத்தில் சிவில் சமூகம் உதிரிப் பாட்டாளிகளின் துணை கொண்டு அதிகாரத்தை வெல்வது என்பது கார்ப்பரேட் மற்றும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் நிழல் அரசியல் ஆதரவு நிலைப்பாட்டையே உரித்துக் காட்டுவதாகும்.

பா.ஜ.க.வின் ஊழல் பற்றி அவர்கள் பேசுவதே இல்லை. விவசாயிகள் போராட்டத்தில் நாடே கொதித்தெழுந்த போது, இவர்கள் எங்கும் போராடியதாக வரலாறே இல்லை. ஆனால் அரசியலில் அவர்கள் கால் பதிக்கிற இடங்களிலெல்லாம் பா.ஜ.க.விற்கு ஆதரவான ஒரு வாய்ப்பை தந்துவிடுகிறது. ஆனால் பஞ்சாபின் நிலை அப்படி அல்ல. பஞ்சாப் வாக்காளர்கள் தீர்மானகரமாக பா.ஜ.க. எதிர்ப்பில் வாக்களித்துள்ளனர்.

காங்கிரஸ் கட்சி அங்கு பெரும் தோல்வியைச் சந்தித்துள்ளது. விவசாயப் போராட்ட பூகம்பமான பஞ்சாபின் மையப் பகுதியான மால்வா பகுதியில் ஆம் ஆத்மி கட்சி மொத்தம் உள்ள 69 இடங்களில் 66 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

தேர்தலுக்கு பிறகான லோக்நித்தி கணக்கெடுப்பின்படி விவசாயிகள் மத்தியிலும், விவசாயிகள் அல்லாதவர்கள் மத்தியிலும் மிகப் பெரும் ஆதரவுத் தளத்தை ஆம் ஆத்மி கட்சி கொண்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட்டது.

மத அடிப்படைவாத கட்சியான அகாளி தளம் கட்சி சந்தர்ப்பவாத, அமரிந்தர் சிங் – பா.ஜ.க. கூட்டணி படுதோல்வியைக் கண்டது. காங்கிரஸ் கட்சியின் செயல்படாத தன்மையாலும் மதச்சார்பற்ற அனைத்து சக்திகளையும் அணிதிரட்ட தவறியதாலும் பாரிய தோல்வியைக் கண்டது.

தேர்தலில் பணத்தின் ஆதிக்கம், வாக்கு இயந்திர மோசடிகள் குறித்த கவனம், தேர்தல் முறையில் மாற்றம் கோரும் விகிதாச்சார தேர்தல் முறைக்கான போராட்டங்கள் இனி எதிர்வரும் காலங்களில் அவசியம் என்பதையும் பெரும் நிறுவனங்கள் அளிக்கும் நன்கொடைகள் நாடு முழுவதும் 95% பா.ஜ.க.வுக்கு மட்மே பாயும் அதன் சூட்சமத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தவும் அடுக்கடுக்கான அரசியல் போராட்டங்கள் அவசியம்.

ஆக, இந்தத் தேர்தல் வெற்றிகள் அவர்களது கண்களை மறைக்கலாம். ஆனால், தோல்வியடைந்த மதச்சார்பற்ற கட்சிகள் தகுந்த படிப்பினைகளைப் பெற்று உகந்த முறையில் தங்களை மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும். மக்களின் மனசாட்சியோடு ஒரு சிறந்த உரையாடலை உடனடியாக தொடங்கியாக வேண்டும். இடதுசாரி, ஜனநாயக, மதச்சார்பற்ற சக்திகள் இந்த நாட்டின் அத்து மீறிய வெறுப்பு பிரச்சார நஞ்சை நீக்கி நம்பிக்கை ஊட்டும் புத்தொளியை பாய்ச்ச எத்தனித்தால் 2024 கைக்கு எட்டும் தூரத்தில்தான் வெற்றி.

தொடர்புக்கு: **94444 81703**



# வேதாரண்யத்தில் நூறுநாள் வேலைத் திட்டப் பணியாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம்

## எம்.செல்வராசு எம்.பி. பங்கேற்பு

நாகை மாவட்டம்,வேதாரண்யத்தில் மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டப் பணி நேரத்தை டிஜிட்டல் படம் எடுக்க ஏதுவாக காலை 8 மணிக்கு மாற்றி அமைத்துள்ளதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

வேதாரண்யம் கோட்டாட்சியர் அலுவலகம் எதிரே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஒன்றியச் செயலாளர் சிவகுரு.பாண்டியன் தலைமை வகித்தார். நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் எம்.செல்வராசு,இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் எஸ்.சம்பந்தம்,துணைச் செயலாளர் த.நாராயணன்,விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் பாங்கல் பாஸ்கரன்,இளைஞர் பெருமன்ற மாவட்டச் செயலாளர் கார்த்திகேயன்,ஊராட்சித் தலைவர்கள் வைத்திலிங்கம்,ரேவதிபாலகுரு உள்ளிட்டோர் பங்கேற்று பேசினர்.


பின்னர் செய்தியாளர்களிடம் நாகப்பட்டினம் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராசு அளித்த பேட்டியில் கூறியதாவது:

விவசாயத் தொழிலாளர்கள் உள்பட விளிம்பு நிலையில் வாழும் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரமாக நூறு நாள் வேலைத்திட்டம் திகழ்கிறது. இது மன்மோகன் சிங் தலைமையிலான ஆட்சிக்காலத்தில்,அப்போது இந்திய கம்யூ.கட்சியன் பொதுச் செயலாளரகவும்,மக்களவை உறுப்பினராகவும் இருந்த ஏ.பி.பரதன் முன்மொழிவோடு கொண்டு வரப்பட்ட திட்டம்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தில் நூறு நாள்வேலை,குறைந்த பட்ச கூலி வழங்குவதும் உறுதியளிக்கப்பட்டது. இந்த திட்டத்துக்கு 78 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்த நிலையல், இப்போது ஆயிரம், இரண்டாயிரம் கோடி என படிப்படியாக குறைந்துக் கொண்டே வருகிறது.அந்த நிதியும் மடைமாற்றம் செய்யப்பட்டு திட்டத்தை முடக்க சூட்சிகள் நடைபெறுகிறது.இதனை தமிழக அரசு அனுமதிக்கூடாது. காலை 8 மணிக்கு தொழிலாளர்கள் வேலைக்கு சென்றால் அவர்களது குடும்ப வேலை,பள்ளிக்கு செல்லும் பிள்ளைகளின் கல்வி போன்றவை கேள்விக்குறியாகும்.

எனவே, மத்திய அரசின் இந்த நடைமுறை உத்தரவுக்கு மாற்றான ஆணையை தமிழக அரசு வெளியிட்டு காலை 10 மணிக்கு வேலைக்கு செல்வதை உறுதிபடுத்தவேண்டும்.

நூறுநாள் வேலை திட்ட பணியாளர்களின் பணியை கையாள்வதிலும் அவர்களுக்கான ஊதியத்தை குறைப்பதிலும் ஈடுபாடுகாட்டும் அரசு ஊழியர்கள் தங்களின் அரசுப் பணியை நேர்மையாக செய்கிறோமா என்பதை மனசாட்சியுடன் பரிசீலிக்க வேண்டும். அப்பாவி தொழிலாளர்கள் மீது காட்டும் ஆளுமையை அரசு ஊழியர்கள் கைவிட வேண்டும்.இணைய சேவையே கிடைக்காத இடத்தில் இணைய வழியில் வருகை பதிவு செய்வது சாத்தியமா என்பதை உணரவேண்டும்.இந்த சம்பவத்தை கண்டித்து வரும் 15 ஆம் தேதி மாவட்ட அளவில் நாகப்பட்டினம் ஆட்சியர் அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்றார் எம்.செல்வராசு.



**பொருளாதாரக் கோரிக்கைகள் மற்றும் சீர்திருத்தங்களுக்காக மட்டும் தொழிற்சங்க நடவடிக்கைகள் நின்றுவிடக் கூடாது. தொழிலாளி வர்க்கத்தின் முழுவிடுதலைக்காக போராடுவதாக இருக்க வேண்டும்.**

**- மார்க்ஸ்**



-நீ.சு.பெருமாள்



# மனிதகுலம் என்றென்றும் மார்க்சை நினைக்கும்

**காரல் மார்க்ஸின் 140 வது நினைவு தினம் மார்ச் 14. 65 வயது வரையில் இந்த உலகில் வாழ்ந்தவர்...**

லண்டனில் அரச குடும்பத்தார் மற்றும் உயர் பதவி வகித்தவர்கள் அடக்கமாகும் கல்லறைத் தோட்டத்தில் மார்க்சின் உடலை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

மாறாக அதன் எதிர்புறத்தில் ஹைகேட் கல்லறை தோட்டத்தில் மார்க்சின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

எளிய மக்கள் இறந்து போனால் அடக்கம் செய்யும் இந்த ஹைகேட் பகுதியில்தான் அடக்கம் செய்ய அன்றைய முதலாளித்துவ பிரிட்டன் அரசு அனுமதி வழங்கியது.

பிரஷ்யா என்கிற கூட்டமைப்பில் இருந்த ஜெர்மனியில் பிறந்தவர்... ஆனால் இறக்கும்போது நாடற்றவராக இருந்தார்.

உற்ற நண்பராகத் திகழ்ந்த ஏங்கல்ஸ் உள்ளிட்ட 11 பேர்கள் தான் அந்த மிகப் பெரும் சிந்தனையாளரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகளில் பங்கேற்றனர்.

எளிய மக்களின் கல்லறைகளுக்குள் ஒன்றாக காரல் மார்க்ஸ் கல்லறை இருந்தால் காலத்தே கரைந்து போகும் என்று பிரிட்டன் முதலாளித்துவம் எண்ணியது.

ஆனால் மார்க்ஸ் காலமாகி 140 ஆண்டுகள் ஆன பின்னாலும் இன்றைக்கும் மார்க்சின் கல்லறை மீது மலர்களை வைத்து மரியாதை செலுத்துவோர் எண்ணிக்கை குறையவில்லை...

குறிப்பாக வெளிநாட்டவர் லண்டன் நகரைச் சுற்றிப்பார்க்க வேண்டும் எனில் சுற்றுலா வாகனம் ஓட்டுபவர் மறக்காமல் அவர்களிடம் கேட்கின்ற கேள்வி மார்க்சின் கல்லறை அமைந்த ஹைகேட் பகுதிக்கு போகலாமா என கேட்பது வழக்கம்...

காரல் மார்ஸ் ஒரு தத்துவ வாதியாக புரட்சிக்காரராக மட்டுமே பார்ப்போர் உண்டு. அதையும் கடந்து ஒரு காதலிக்குச் சிறந்த காதலராக... கவிதைகள் படைக்கும் கவிஞராகவும் இருந்தார் என்கிறது அவரது இளமைக் கால வரலாறு. காதலும் கவிதைகளும் படைக்கும் இதயத்தில்தான் புரட்சியும் இருக்கும் என்பதை மார்க்ஸ் வரலாறு நமக்குச் சொல்கிறது.

மார்க்சின் தந்தை ஹென்றிச் மார்க்ஸ் ஒரு யூதர். தாயார் பிரஸ்பார்க் ஒரு டச்சுக்காரப் பெண்மணி. இத் தம்பதியர்க்கு 9 குழந்தைகள். 5 பேர் இறந்து போக மீதமிருந்த நான்கு குழந்தைகளில் ஒருவர்தான் காரல் மார்க்ஸ்.

வழக்கறிஞராக இருந்த தந்தையாரிடம் அவ்வளவாக வழக்குகள் வரவில்லை காரணம் ஜெர்மனியர்கள் எப்போதுமே யூதர்களை வெறுத்தது தான்....

வேறுவழியில்லாமல் மார்க்ஸின் குடும்பம் மார்ட்டின் லூதரால் வழிநடத்தப் பட்ட கிருத்தவ மதத்தை தழுவுகிறது.

அதன் பின்னால் தான் மார்க்சின் தந்தைக்கு வழக்குகள் வருகின்றன. ஜெர்மானியர்களின் தொடர்பு ஏற்படுகிறது. அப்படி மார்க்சின் தந்தையோடு பழக வந்தவர்தான் பிற்காலத்தில் மார்க்சின் மனைவியான ஜென்னியின் தந்தை.

ஜென்னியின் தந்தையார் வீட்டில் நூலகம் இருப்பதை அறிந்த மார்க்ஸ் அவரது வீட்டிற்கு அடிக்கடி செல்கிறார். படிப்பதில் ஆர்வம் கொண்ட ஜென்னியுடன் இயல்பாகவே நட்பு கொள்கிறார் மார்க்ஸ்.

அந்த நட்பு காதலாக மாறி பல தடைகளுக்குப் பிறகு திருமணம் செய்து கொள்கிறார்கள்.மார்க்ஸை விட நான்கு வயது மூத்தவர் ஜென்னி.

மார்க்ஸ், ஜென்னி தம்பதியர்க்கு ஏழு குழந்தைகள் பிறந்தன. அதில் நான்கு குழந்தைகள் பட்டினியால், நோயால் மருத்துவம் பார்க்க வசதியின்றி இறந்து போகிறார்கள். வறுமைக்கு எதிரான ஆயுதக் கண்டு பிடிப்பதில் மூழ்கியிருந்த மார்க்ஸ்க்கு எவ்வித இடையூறும் இன்றி பாதுகாத்தவர் ஜென்னி.

மார்க்சுக்கு 12 வயது வரையில் வீட்டில்தான் தொடக்கக் கல்வி. பிறகு கல்வி நிலையத்திற்கு வருகிறார் மார்க்ஸ்.

ஆசிரியரின் கேள்வி ஒன்றுக்கு, ‘‘மனித குலத்தில் ஒரு சாரார் சகல வசதிகளுடன் பொருளாதாரத்தில் உயர்ந்து வாழ்கிறார்கள். ஆனால் பெரும்பாலான மக்கள் உண்ண உணவு கூட இல்லாமல் பட்டினியோடு போராடுவது ஏன்.... இதற்கான விடையைத் தேடுவதுதான் எனது எதிர்கால லட்சியம்‘‘ என்று ஆசிரியர் அதிர்ந்து போகும் அளவுக்கு பதில் சொல்கிறார் மாணவனாக இருந்த மார்க்ஸ்.

காரல்மார்க்ஸ் மாணவனாக இருந்த சமயத்தில் ஜெர்மானிய தத்துவவாதி ஹெகல் என்கிற சிந்தனையாளரின் தாக்கம் பெரும்பாலான இளைஞர்களை கவர்ந்திருந்தது.

அவர்தான் முதன்முதலில் மாற்றம் என்பது தவிர்க்க முடியாதது... மாறாதது ஒவ்வொரு பொருளின் வளர்ச்சிக்கு பின்னாலும் மாற்றம் இருந்தே ஆகும் அதுதான் இயற்கையின் விதி என்று அந்த வாசகத்தை பயன்படுத்தியவர்.

ஜெர்மனிய இளைஞர்களைப் போல முதன் முதலில் ஹெகலியவாதி யாகத்தான் மார்க்ஸ் இருந்தார்.

அவரின் படைப்புகளைத்தான் மார்க்சும் விரும்பினார்.

ஆனால் ஒரு விஷயத்தில் முரண்படுகிறார். இந்த உலகம் மாறிக் கொண்டே இருக்கிறது இந்த உலகத்தின் மாற்றம் என்பது யாராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றும் மாறிக்கொண்டே இருக்கும் இந்த உலகத்தின் கடவுளின் தூதுவர்களாக தான் மன்னர்கள் ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள்.

எனவே எல்லாம் மாறினாலும் இந்த ஆட்சிமுறை மாறாது மன்னர்களும் மாற மாட்டார்கள் ஏனென்றால் இந்த உலகத்தை படைத்த மாபெரும் சக்தி ஒன்று அவர்களுக்கு ஆதரவாக இருக்கிறது. அவர்கள் தான் கடவுளின் தூதுவர்கள் என ஹெகல் சொல்வதை மார்க்ஸ் நிராகரித்தார்.

ஹெகலின் தத்துவத்தை முழுமையாக உள்வாங்கிக் கொண்ட காரல் மார்க்ஸ் உலகத்தைப் படைத்தது கடவுள்தான் என்பதில் மாற்றுக்கருத்து கொண்டார். ‘‘எல்லாமே மாறும் என்றால் மன்னர்களின் ஆட்சி முறையும் மாறத்தானே வேண்டும்’’ என்றார் மார்க்ஸ்.

இன்னும் தீவிரமாக ஆராய்ந்தார் அதற்காக அவர் டாக்டர் பட்டம் பெறுவதற்கு அவர் எடுத்துக் கொண்ட பாடம் நாத்திகம்.

மதத்தின் வேலை என்ன.... மதம் மனிதனை எந்த அளவுக்கு உள்வாங்கி இருக்கிறது என்கிற ஆய்வில் ஈடுபடுகிறார்.

அந்த ஆய்வின் முடிவில் வெளியானதுதான் மூலதனம் எனும் தாஸ் கேபிடல் .

இந்த நூலை தன் சம காலத்தில் வாழ்ந்து கொண்டிருந்த டார்வின் அவர்களுக்கு சமர்ப்பணம் செய்ய விரும்பி டார்வினுக்கு கடிதம் எழுதுகிறார் காரல் மார்க்ஸ்.

ஏனென்றால் உயிரின் தோற்றுவாய் என்கிற டார்வினுடைய அந்த ஆய்வு முடிவு என்பது அனைவராலும் ஏற்கக் கூடியதாக இருந்தது.

அவர்தான் முதன் முதலில் மனிதனை கடவுள் படைக்கவில்லை மாறாக உயிர்களின் பரிணாம வளர்ச்சியின் தொடர்ச்சி தான் இன்றைய மனிதன் என்று மதவாதிகளுக்கு எதிரான கருத்துக்களை பதிவு செய்தார்.

அதற்காக மதவாதிகளின் துன்புறுத்தலுக்கு ஆளாகி வீட்டைவிட்டு செல்ல வேண்டிய அவலம் ஏற்பட்டது. அதனால் டார்வின் அவர்கள் சிறிது காலம் தன்னுடைய உறவுகளை விட்டு பிரிந்தார்.

இந்த நிலையில் மூலதனம் நூலை சமர்ப்பணம் செய்கிறேன் என்று மார்க்ஸ் எழுதிய கடிதத்திற்கு டார்வின் பதில் கடிதம் எழுதினார்....

தற்போது மதவாதிகளோடு நான் கொஞ்சம் சமரசம் செய்துகொண்டு என்னுடைய உறவுகளோடு வீட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன் உங்களுடைய மூலதனம் படைப்பை நான் மனப்பூர்வமாக வரவேற்றாலும் வெளிப்படையாக ஆதரவு தெரிவிக்க இயலவில்லை...

எனவே நீங்கள் என் பெயரில் சமர்ப்பணம் செய்ய வேண்டாம் என்று வருத்தத்தோடு மார்க்சுக்கு டார்வின் கடிதம் எழுதியதும் வரலாறாகும்...

மத உணர்வுகள் மதத்தினுடைய அந்த தாக்கம் எந்த அளவுக்கு சிந்தனையாளர்களை பாதிக்கிறது என்பதற்கு வரலாற்றில் இது ஒரு உதாரணமாகும். ஏங்கல்ஸ் நட்பு கிடைத்த பிறகு மார்க்சின் சிந்தனையில் வேகமெடுக்கிறது. குறிப்பாக மார்க்ஸ் குடும்பத்தின் வறுமைத் தீயை அணைக்க ஏங்கல்ஸ் உதவி செய்கிறார்.

தம்முடைய 28 ஆம் வயதில் ஏழ்மையின் தத்துவம் **(The poverty of philosophy)** எனும் பெயரில் 1847 ஆம் ஆண்டில் முதல் ஆய்வு நூல் வெளியிடுகிறார்.

அடுத்த ஆண்டில் உலகின் மூன்றில் இரண்டு பங்கு நாடுகளில் புரட்சிகள் மூலம் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்திய கம்யூனிஸ்ட் வேலை திட்டம் எனும் 24 பக்க நூலினை தன் நண்பர் ஏங்கல்ஸ் உடன் இணைந்து வெளியிடுகிறார். இந்த சின்னஞ்சிறு நூலானது தமிழ் உள்ளிட்ட 200 க்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது.

அந்த கம்யூனிஸ்ட் அறிக்கையில் உழைப்பாளி மக்கள் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்வி பதில் அடிப்படையில் உலக உழைப்பாளி மக்களின் மனதோடு பேசியது... அந்த புத்தகத்தின் வீச்சு மேற்குலகத்தின் ஆட்சியாளர்களை உலுக்கியது.

அதன் விளைவாக மார்க்ஸ் வாழ்ந்த காலத்திலேயே பிரெஞ்சுப் புரட்சி நடைபெற்றது. இருப்பு கொள்ளாமல் நேரில் சென்று அந்த புரட்சியாளர்களை சந்தித்து வாழ்த்துக் கூறினார். ஜெர்மனில் புரட்சி செய்வதாக அந்த புரட்சியாளர்கள் சொன்னபோது அவசரப்படவேண்டாம் அதற்கான களப்பணியில் முதலில் இறங்குங்கள் என்று சொன்னவரும் அவர்தான்...

அதேபோல பெல்ஜியம் பகுதிக்கும் புரட்சி இப்போதைக்கு தேவையில்லை என்று சொல்லி அவர்களை ஆசுவாசப்படுத்தினார். இரண்டுமே அவர்கள் ஏற்கவில்லை மாறாக புரட்சி செய்தார்கள் தோற்றுப்போனார்கள்.

ஜெர்மன் தேசம் காரல் மார்க்சுக்கு தத்துவத்தை சொல்லிக் கொடுத்தது. பிரான்சு தேசம் அரசியலைக் கற்றுக் கொடுத்தது பிரிட்டன் நாடு பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை களைவது எப்படி என்கிற ஆய்வுக் களத்தை அமைத்தது.

இங்கிலாந்தில் அன்றைக்கு முற்போக்கு எண்ணம் கொண்ட இளைஞர்கள் சிலரால் நியாயவாதிகள் எனும் பெயரில் ஒரு சங்கம் இயங்கி வந்தது. அதில் மார்க்சையும், ஏங்கல்சையும் உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டனர்.

இந்தச் சங்கம்தான் பின்நாட்களில் பொதுவுடைமையரின் சங்கம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. (கம்யூனிஸ்ட் கட்சி)

பிரிட்டன் நூலகத்தில் காலையில் சென்றால் இரவில் வருவது. நூலக குறிப்பைக் கொண்டு எழுதுவது என தன் வாழ்நாட்களில்15 ஆண்டுகள் பொருளாதார ஆராய்ச்சி யிலேயே செலவழித்தார்.

உலகை மாற்றக்கூடிய வல்லமை உழைக்கும் மக்களுக்குத் தான் உண்டு என்றும்....


உலகத் தொழிலாளர்களே ஒன்றுசேருங்கள்... நீங்கள் இழக்கப் போவது அடிமை விலங்குகளைத்தான்... அடையப் போவதோ பொன்னுலகம் எனச் சொல்லி தாஸ் கேபிடல் எனும் மூலதனம் நூலைப் படைத்தார்.

இன்றைக்கும் காரல் மார்க்சின் கல்லறையில் உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள் என்கிற வாசகம் பொறிக் கப்பட்டிருக்கிறது.

மனிதகுலம் இருக்கும் வரையில் மார்க்சின் பெயர் நிலைத்து நிற்கும். என இரங்கல் கூட்டத்தில் ஏங்கல்ஸ் பேசியது உண்மைதான் என உலகம் நிரூபித்துக் கொண்டிருக்கிறது.

தொடர்புக்கு: **9442678721**

## மார்க்ஸ் படத்திற்கு அஞ்சலி



கள்ளகுறிச்சி மாவட்டம், தியாகதுருவத்தில் மாமேதை கார்ல் மார்க்ஸ் நினைவு நாளான மார்ச் 14 அன்று அவரின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

# மார்க்சிஸ்ட் ஊழியர் கொலை: நாமக்கல் பெண்கள் சிறப்பு நீதி மன்றத் தீர்ப்பு

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்பு

நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் மற்றும் இதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் விசைத்தறி நெசவுத் தொழில் பெருமளவு நடந்து வருகிறது. இதில் ஆயிரக்கணக்கான ஆண், பெண் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

விசைத்தறித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம் கூட கிடைப்பதில்லை. சமூக பாதுகாப்பு திட்டங்களும் இல்லை. இதனால் தொழிலாளர்கள் சிறுநீரகங்களை விற்றும்/ கத்துவட்டிக் கடன் பெற்றும் வாழ்ந்து வரும் அவல நிலை நிலவுகிறது. இந்தச் சூழலில் கடந்த 2010 ஆண்டில் கந்து வட்டி நிறுவனத்தில் கடன் பெற்ற பெண் தொழிலாளி ஒருவரை, அந்த நிறுவனத்தை சேர்ந்த சிவகுமார் உள்ளிட்ட 5 பேர் கடத்தி சென்று, மறைவிடத்தில் வைத்து பாலியல் வன்கொடுமை உள்ளிட்ட பல வகை சித்தரவதை செய்து, அதனை ஒளிப்படமாக பதிவு செய்து, சமூக ஊடகங்களில் வெளியிடுவதாக மிரட்டியுள்ளனர்.

பாதிக்கப்பட்ட பெண் தொழிலாளி நியாயம் கேட்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஊழியர் வேலுச்சாமியை அணுகியுள்ளார். இதன் மீது வேலுசாமி தொடர் நடவடிக்கை மேற்கொண்டதால் கந்து வட்டிக் கும்பல் மார்க்சிஸ்ட் கட்சி ஊழியர் வேலுசாமியை கொடூரமாக வெட்டிக் கொன்றது. இது தொடர்பாக நாமக்கல் மாவட்ட பெண்கள் சிறப்பு நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் நீதிபதி சசிரேகா மார்ச் 14 அன்று குற்றவாளிகள் ஐந்து பேருக்கும் இரட்டை ஆயுள் தண்டனை, மற்றும் கடுங்காவல், அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கியுள்ளார். போராடும் விசைத்தறி நெசவாளர்களின் மன உறுதியை ஊக்கப்படுத்தும் தீர்ப்பை வரவேற்பதுடன், இந்த வழக்கில் குற்றவாளிகள் சட்டத்தின் இண்டு, இடுக்குகளிலும், சந்து, பொந்துகளிலும் நுழைந்து தப்பி விடாமல் சிறப்பாக வழக்கை நடத்திய,

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியில் வட்டார செயலாளர், மாவட்டச் செயலாளர் என்ற பொறுப்புகளில் இருந்து களப் போராட்ட அனுபவம் நிறைந்த மூத்த வழக்கறிஞர் பி.திருமலைராஜன் அவர்களுக்கு பாராட்டுக்களையும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு தெரிவித்துக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியத்தை அதிகரிக்க வல்லுநர் குழு

**டி.எம்.மூர்த்தி**

வருங்கால வைப்பு நிதி அறங்காவல் குழு கூட்டம், மார்ச் 11, 12 தேதிகளில் குவாஹாத்தி நகரில் நடைபெற்றது.

வருங்கால வைப்பு நிதியுடன் இணைந்த ஓய்வூதியத்தை (ணிறிஷி 95) அதிகரிப்பது சம்பந்தமாக, சாத்தியமான வழிமுறைகளை ஆய்வு செய்து ஆலோசனை வழங்குவதற்கு, ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு துறை வல்லுநர்களைக் கொண்ட ஒரு செயல்பாட்டுக் குழுவை அமைக்க முடிவு செய்துள்ளது.

இந்தக் குழுவில் ஓய்வூதிய ஒழுங்கமைப்பு ஆணையம், ஆயுள் காப்பீட்டு நிறுவனம், வி.வி.கிரி தேசிய தொழிலாளர் கழகம், மற்றும் 2 சுயேச்சையான மதிப்பீட்டாளர்கள், முக்கியமான நிதி நிறுவனங்கள்/ முதலீட்டு நிறுவனங்களின் முதன்மை முதலீட்டு அலுவலர்கள் மற்றும் இதர வல்லுநர்கள் இருப்பார்கள் என்று அறங்காவல் குழு முடிவுகள் கூறுகின்றன. ஏற்கனவே ஒரு அட்ஹாகாக் கமிட்டி அமைத்து பரிந்துரை பெறப்பட்டுள்ளது. அது தந்த பரிந்துரையை பரிசீலிப்பதற்கு மற்றொரு குழுவை இப்போது அமைத்திருக்கிறார்கள்!

2013 பிப்ரவரி 21, 22 ஆகிய தேதிகளில் அனைத்து மத்திய தொழிற்சங்கங்களும் இணைந்து அகில இந்திய பொது வேலைநிறுத்தத்தை மேற்கொண்டபோது குறைந்தபட்ச ஓய்வூதியம் கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. கோரிக்கைகள் குறித்துப் பேசுவதற்காக ஏ கே அந்தோணி தலைமையில் ஒரு அமைச்சரவைக் குழுவை அன்றைய காங்கிரஸ் அரசாங்கம் அமைத்தது. அப்போது ரூபாய் 3000 ஓய்வூதியமாக தரவேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கூறியபோது 1000 ரூபாய் தர அமைச்சரவை குழு ஒப்புக்கொண்டது. ஆயினும் அது நிறைவேற்றப்படும் முன்பு பொதுத் தேர்தல் நடந்து, மோடி , ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். ரூபாய் 1000 குறைந்தபட்ச ஓய்வு ஊதியம் பெறுவதற்கான ஆணை தயாராக இருந்தும் கூட மோடி அரசு 2014 செப்டம்பர் மாதம் வரை இழுத்தடித்து அதன் பின்புதான் அமல் நடத்தியது.

இதற்குப் பிந்தைய காலங்களில் நடந்த பொது வேலை நிறுத்தங்களின் போது 6000 ரூபாய் என ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் என்று தொழிற்சங்கங்கள் கூறின. என்றாலும் 2000 அல்லது 2500 உயர்த்தி தருவோம் என்று அரசு சொன்னது. அது வெற்று வாக்குறுதியாகவே இன்றும் காற்றில் அலைந்து கொண்டிருக்கிறது. மார்ச் 28, 29 பொது வேலை நிறுத்தத்தில் ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி 28, 29 தேதிகளில் மறியல், ஆர்ப்பாட்டங்கள் தமிழ்நாடு முழுக்க நடைபெறுகிறது. நமது ஓய்வூதியர் சங்கங்கள் அவற்றில் பங்கெடுப்பது பயனுள்ளதாக இருக்கும். அதைச் செய்வார்களா எனத் தெரியவில்லை!

சென்ற இரு தினங்களில் குவஹாத்தியில் நடந்த அறங்காவலர் குழு கூட்டத்தில், ஏஐடியுசி பிரதிநிதியான, தேசிய செயலாளர் தோழர் சுகுமார் தாம்லே கலந்துகொண்டு, ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டும் எனக் கோரி வலியுறுத்தி வாதாடினார். அவருக்கு நமது நன்றி உரித்தாகுக.




### மேகேதாட்டு அணை கட்ட கர்நாடக அரசு ரூ.1000 கோடி

# தமிழ்நாடு விவசாய சங்கம், விவசாய தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

மேகேதாட்டு அணை கட்ட கர்நாடக அரசு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதை கண்டித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் மற்றும் விவசாய தொழிலாளர் சங்கம் சார்பில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு விவசாய சங்க மாவட்ட தலைவர் வீரமோகன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் ஆர்.எஸ்.பாலு தலை மையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. விவசாய சங்க மாவட்ட செயலாளர் பா.பாலசுந்தரம், விவசாய தொழிலாளர் சங்க தெற்கு மாவட்ட தலைவர் ரெ. கோவிந்தராசு, மாவட்ட செயலாளர் சி.பக்கிரிசாமி,வடக்கு மாவட்ட செயலாளர் இரா.இராமச்சந்திரன் ஆகி யோர் முன்னிலை வகித்தனர். ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு விவசாய தொழிலாளர் சங்க மாநில பொருளாளர் சி.சந்திரகுமார் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார். ஏஐடியூசி மாவட்ட செயலாளர் ஆர்.தில்லைவனம் முடித்து வைத்து உரையாற்றினார்.

கோரிக்கைகளை விளக்கி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தஞ்சை தெற்கு மாவட்ட செயலாளர் முத்து.உத்திராபதி, வடக்கு மாவட்ட செயலாளர் மு.அபாரதி ஆகியோர் சிறப்புரையாற்றினர். விவசாய சங்க நிர்வாகிகள் அ.பன்னீர்செல்வம், சோ.பாஸ்கர், அ.கலியபெருமாள், ஜி.அன்பழகன், நா. சௌந்தரராஜன் த.மதியழகன், வி.தொ.ச நிர்வாகிகள் ஜி.கிருஷ்ணன், எஸ்.தனசீலி, பி.ஏ.கருப்பையா, வி.ராஜமாணிக்கம், மு. பால்ராஜ் , இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு, வடக்கு மாவட்ட நிர்வாகிகள் காசிநாதன், சாமு. தர்மராஜ், ஆர்.கே.செல்வகுமார், கோ.சக்திவேல், பூபேஸ்குப்தா, மாதர் சங்க நிர்வாகி வசந்தி, மருத்துவர் ச.சுதந்திர பாரதி ஏஐடியூசி மாவட்ட செயலாளர் துரை. மதிவாணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் மேகேதாட்டு அணை கட்டுவதற்கு கர்நாடக பாஜக அரசு ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கியதை கண்டித்தும், உச்சநீதிமன்ற தீர்ப்பு மற்றும் காவிரி நடுவர் மன்ற தீர்ப்பு, வழிகாட்டுதலுக்கு எதிராக செயல்பட்டு வரும் கர்நாடக அரசுக்கு மறைமுக ஆதரவு அளிக்க கூடாது என்று ஒன்றிய அரசை கண்டித்தும், தமிழ்நாட்டின் உரிமைகளுக்கு எதிராக தொடர்ந்து செயல்பட்டு வரும் கர்நாடக அரசு மீது சட்ட மன்றத்தில் தீர்மானம் கொண்டுவந்து அவமதிப்பு வழக்கு தொடரவும் தமிழ்நாடு அரசை வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

### சூரியா நடித்த ‘எதற்கும் துணிந்தவன்’

# படத்திற்கு எதிர்ப்பு!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்

புராணங்களில் மூழ்கி கிடந்த தமிழ் திரையுலகில், சுயமரியாதை, சமதர்ம சிந்தனையாளர்களால் சமூக சீர்திருத்தக் கருத்துக்களும், மனித மாண்புகளை மதிக்கும் பண்புகள் வளர்க்கும் கருத்துக்களும் முன்வைக்கப்பட்டு, பெரும் சாதனை படைத்துள்ளது.

அண்மை காலமாக சமூகத்தில் ஒடுக்கப்பட்டு, குரலற்றவர்களின் குரலை சில திரைப்படங்கள் முழங்கி வருகின்றன. இதில் “குறவர்” சாதிப் பிரிவை சேர்ந்த ராஜகண்ணுவுக்கு இந்த சமூகமும், விசாரணை அமைப்புகளும் இழைத்த அநீதியை, திரைக் கலைஞர் சூரியாவின் “ஜெய்பீம்” திரைப்படம் வெளிப்படுத்தியது.

இத்திரைப்படம் உருவாக் கிய ஆக்கப்பூர்வமான நேர்மறை சிந்தனைகளை தடுத்து, திசைதிருப்பும் முறையில் சில குறுக்குப் பார்வை அமைப்புகள் மோதலை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டன. ஆனால், அது மக்களால் நிராகரிக்கப்பட்டது.

இப்போது திரைக்கலைஞர் சூரியா நடித்த “எதற்கும் துணிந்தவன்” என்ற திரைப்படத்தை திரையரங்குகளில் திரையிடக்கூடாது என பாமகவும், அதன் ஆதரவாளர்களும் “கலகம்” செய்வது அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையை பறிக்கும் அத்துமீறலாகும். இது மாற்றுக் கருத்துக்களை, விமர்சனங்களை எந்த வகையிலும் சகித்துக் கொள்ளாத பாசிசத் தன்மை கொண்ட பகைமைச் செயலாகும். இந்த செயலை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

சட்டப்பூர்வமாக அமைக்கப்பட்ட தணிக்கைத் துறையின் அனுமதியோடு திரைக்கு வந்துள்ள “எதற்கும் துணிந்தவன்” திரைப்படம் எந்தவித அச்சுறுத்தலுக்கும் ஆளாகாமல், மக்கள் பார்வைக்கு செல்ல தமிழ்நாடு அரசு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.




# தஞ்சை மாவட்ட த.நா.க.இ.பெருமன்ற கூட்டம்

த.நா.க.இ.பெருமன்றம் தஞ்சை மாவட்ட கூட்டம் ஏ.ஐ.டி.யூ.சி. அலுவலக கட்டடத்தில் நடைபெற்றது.

எழுத்தாளர் ராஜவேலு தலைமையேற்றார். கவிஞர் வல்லம் தாஜுபால் அனைவரையும் வரவேற்றார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தஞ்சை தெற்கு மாவட்டச்செயலர் முத்து.உத்திராபதி வாழ்த்துரை வழங்கினார். சி.பாஸ்கரன் முன்னோட்ட உரையாற்றினார். சிறப்பு நிகழ்வாக முனைவர் பே.சக்திவேல் தன் சிறப்புரையில் “தமிழ் மரபில் இலக்கியம் பண்பாடு” குறித்தும் சிறு தெய்வ வழிபாடு, கடவுள் கொள்கை குறித்தும் விரிவுரையாற்றினார். ஒரத்தநாடு கிளைச்செயலர் சிவஞானம், பட்டுக்கோட்டை கிளைச்செயலர் பாலதண்டாயுதம், கவிஞர் செல்வராசு கருத்துரை வழங்கினர். கவிஞர்கள் அய்யாசாமி, குமார் ஆகியோர் கவிதை வாசித்தனர். சிறப்பு விருந்தினர், கவிஞர்களுக்கு நூல்கள் நினைவுப் பரிசளிக்கப்பட்டது. இறுதியில் பாடகர் தஞ்சை இந்துமணி சில பாடல்கள் பாடினார். நிறைவாக மாவட்டச்செயலர் கவிஞர் முனைவர் அய்யாறு ச.புகழேந்தி நன்றியுரையாற்றினார்.

## இந்த வார தம்பிக்குறள்

### 63. சால்பு


**தன்மனையைத் துப்புரவாய் சால்பு சமைத்தலோ**
**அண்டைக்கும் ஆக்கஉம் சால்பு.**

தன் வீட்டைத் தூய்மையாக வைத்துக் கொண்டால், அடுத்த வீடும் சான்றாண்மையில் தூய்மை பெறும் (அண்டை வீடு என்பதனை உலகம் முழுதும் கொள்க.

**ஊழி பெயர்ந்தாஅல் தான்திருந்தும் சால்புணர்ந்து**
**கீழ்தான் திருந்தா இசைந்து.**

சமுதாய மாற்றத்திற்கேற்ப மேலோர்கள் தம்மைத்தக அமைத்துக் கொள்வார்கள். அறிவற்றவர்கள் எந்த நிலையிலும் தம்மை மாற்றிக் கொள்ளமாட்டார்கள்.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

தேசிய உயர்கல்வி வரைவு அறிக்கை உயர்கல்வி வாய்ப்பை உடைத்தெறியும் என்று தனது கட்டுரையில் பேராசிரியர் கதிரவன் விளக்குகிறார். கட்டுரை படித்து புரிந்து கொள்வதற்கு சிரமமாக இருக்கிறது. எளிய நடையில் அமைய வேண்டும்.

**– மா.சுகந்தி**
புரசைவாக்கம், சென்னை

**ஆசிரியர் ஜனசக்தி,**

போரை நிறுத்திடுக பேச்சு வார்த்தையை தொடங்கிடுக– பொதுச் செயலாளர் டி.ராஜா அவர்களின் கட்டுரை ரஷ்ய தாக்குதல் குறித்து கேள்வி எழுப்ப நேட்டோ அமைப்புகளுக்கு தார்மீக அடிப்படையோ, அதிகாரமோ இல்லை என்பதையும் அதேநேரத்தில் ரஷ்யாவின் பதிலடியை நியாயப்படுத்த முடியாது. என்பதையும் விளக்குகிறது.

**– பா.சதீஷ்குமார்**
குடியாத்தம், வேலூர்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

நேட்டேவின் துணையோடு அமெரிக்கா தனது ஆயுத விற்பனை செய்ய பிற நாடுகளின் உள்நாட்டு பிரச்சனைகளில் தலையிட்டு ராணுவ மேலதிகாரத்தை நிறுவ முயல்கிறது. இனி எந்த இராணுவ கூட்டணியும் தொடரக் கூடாது என்பதை மகேந்திரன் எழுதிய போரில்லாத உலகம் கட்டுரை விளக்குகிறது. கோகுல்ராஜ் ஆணவப் படுகொலை, நீதிமன்ற தீர்ப்பு ப.பா.மோகன் வாதத்திறமையை அஷரப் அலி கட்டுரை விளக்குகிறது.

– மு.**துரை,** மேட்டுப்பாளையம்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

சால்வைகளைத் தவிர்த்து நிதியாக வழங்க வேண்டும் என்ற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநிலக் குழுவின் முடிவு மிகவும் முக்கியமானது மட்டுமல்ல உடனடியாக செயல்படுத்த வேண்டியதுமாகும். இன்றே இந்த பணியை நிறைவேற்றத் தொடங்குவோம்.

**– வடிவேலு,** பட்டுக்கோட்டை

### கோவையில் 36 ஆவது

# தேசிய புத்தக கண்காட்சி துவக்கம்

## மாநகர மேயர் கல்பனா திறந்து வைத்தார்

நேஷனல் புக் டிரஸ்ட் ஆஃப் இந்தியா புதுடெல்லி மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம், கோவை மாவட்ட நூலக ஆணைக்குழு ஆகியவை இணைந்து 36 ஆவது தேசிய புத்தக கண்காட்சியை கோவையில் டவுன் ஹால் அருகே உள்ள மாவட்ட நூலக வளாகத்தில் நடத்துகின்றது. இந்த புத்தக கண்காட்சியை மாநகர மேயர் கல்பனா ஆனந்தகுமார் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட நூலக அலுவலர் இரா. யுவராஜ், நியூசெஞ்சுரி புத்தக நிறுவன மண்டல மேலாளர் ஆர். ரங்கராஜன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் ப.பா.ரமணி, கே. புருஷோத்தமன், முனைவர் முருகேசன், மாவட்ட மைய நூலகம் ராஜேந்திரன், கவுன்சிலர்கள் எம்.டி.மோகன், மல்லிகா புருஷோத்தமன், பிரபா ரவீந்திரன், சாந்தி சந்திரன், பேராசிரியர் திலீப்குமார், விஸ்வநாதன், புத்தக நிறுவன மேலாளர் எஸ். குணசேகர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இந்தப் புத்தகக் கண்காட்சி வரும் வரும் மே மாதம் 15ஆம் தேதி வரை தொடர்ந்து நடைபெற உள்ளது. இதில் வாடிக்கையாளர்களுக்கு 10 முதல் 25 சதம் வரை தள்ளுபடி வழங்கப்பட உள்ளது என்றும் மண்டல மேலாளர் ஆர். ரங்கராஜன் கூறினார்.



# நூல் வெளியீட்டு விழா

ஜவகர்லால் நேரு அவர்கள் எழுதிய “ஒரு தேசத்திற்கான கடிதங்கள்”நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. வாசிப்பார் களம் திருச்சி அமைப்பாளர் காமராஜ் தலைமையில் நடந்த இந்த விழாவில் நூலை காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர் திருச்சி வேலுச்சாமி வெளியிட்டார். முதல் பிரதியை காங்கிரஸ் கட்சியின் வடக்கு மாவட்ட தலைவர் திருச்சி கலை பெற்றுக்கொண்டார். நேரு அவர்களின் இந்த நூலை தொழிற்சங்க தலைவர் நா.வீரபாண்டியன் தமிழில் மொழி பெயர்த்து உள்ளார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம். செல்வராஜ், மார்க்சிஸ்ட் கட்சி மாநில குழு உறுப்பினர் ஸ்ரீதர், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தமிழாதன், எழுத்தாளர் எம். சங்கையா, கருப்பையா வசிப்போர் களம் மதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். நூலாசிரியர் என்.வீரபாண்டியன் ஏற்புரை நிகழ்த்தினர். கணேசன் நன்றி கூறினார்.



### மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில்

# ஆடு, மாடு மேய்ச்சலுக்கு அனுமதிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

விருதுநகர் மாவட்டம் திருவில்லிபத்தூர் வனத்துறை அலுவலகம் முன்பு ஆடு, மாடு வளர்ப்போம் சங்கத்தின் சார்பில் மேற்கு தொடர்ச்சி வனப்பகுதிகளில் ஆடு, மாடுகளை மேய்ச்சலுக்கு அனுமதிக்க கோரியும், மேய்ச்சலுக்கு தடை விதிக்கப்பட்ட நீதிமன்ற உத்தரவை நிறுத்தி வைத்து, தமிழக அரசு உடனடியாக மேல்முறையீடு செயதிட வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டத்தில் பேசிய தலைவர்கள் வலியுறுத்தினர் . சிபிஐ மாநில நிர்வாகக் குழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, தவிச மாவட்ட செயலாளர் சவுந்திரபாண்டியன் ஆகியோர் பேசினர்.



# பங்கு விற்பனைக்கு எதிராக பரமக்குடி எல்ஐசி கிளை முன்பாக ஆர்ப்பாட்டம்

பரமக்குடிஎல்ஐசி கிளை முன்பாக எல்ஐசி ஐபிஓ வெளியீடு மற்றும் பங்கு விற்பனைக்கு எதிராக மெழுகுவர்த்தி ஏந்தி ஆர்ப்பாட்டம் மற்றும் வாயிற் கூட்டம் பரமக்குடி எல்ஐசி கிளை செயலாளர் எஸ்.ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. முகவர் சங்கம் சார்பாக ஷாஜகான், மீனாட்சி சுந்தரம் மற்றும் டி.ஆர்.வாசுதேவன் ஆகியோரும், வளர்ச்சி அதிகாரிகள் சங்கம் சார்பாக விஜயரகுநாதன் மற்றும் கதிரவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். ஜிஐசி சார்பாக அண்ணாத்துரை கலந்து கொண்டார்.



### வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளுக்கான

# பயிற்சி மருத்துவர் இடங்களை அதிகரிக்க வேண்டும்

## கே.சுப்பராயன் எம்.பி.யிடம் கோரிக்கை மனு

வெளிநாட்டு மருத்துவ பட்டதாரிகளுக்கான பயிற்சி மருத் துவர் இடங்களை அதிகரிக்க வேண்டும், பயிற்சிக்கால ஊதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 6 கோரிக்கைகள் அடங்கிய மனுவினை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் கே. சுப்பராயன் அவர்களிடம் தமிழ் நாடு மருத்துவ மாணவர்கள் சங்கம் (வெளிநாட்டு மருத்துவப் பட்ட தாரிகள்) சார்பில் மார்ச் 11 அன்று சென்னையில் சந்தித்து வழங்கப் பட்டது.

சமூக சமத்துவத்திற்கான டாக் டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர். ஜி.ஆர். இரவீந்திரநாத் உடனிருந்தார். இக் கோரிக்கைகள் தொடர்பாக, தேசிய மருத்துவ ஆணையம் மற்றும் ஒன்றிய சுகாதாரத்துறையின் கவனத்திற்கு கொண்டு செல்வதாக கே.சுப்பராயன் எம்.பி. கூறினார்.

கோரிக்கைகள் நிறைவேற உதவுவதாகவும் அவர் உறுதி அளித்தார்.

# பணிநிரந்தரம் கோரி தமிழ்நாடு பல்நோக்கு மருத்துவப் பணியாளர்கள் உள்ளிருப்புப் போராட்டம்



பணிநிரந்தரம் கோரி சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் தமிழ்நாடு பல் நோக்கு மருத்துவப் பணியாளர்கள் உள்ளிருப்புப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு பல்நோக்கு மருத்துவ மனை பணியாளர் சங்க ( TNMPHWA) மாநிலத் தலைவர் எல்.ரெங்கநாதன் தலைமையில், பொதுச்செயலாளர் சி.சரவணக்குமார், அமைப்புச் செயலாளர் ஜெ.தினேஷ்குமார், பொருளாளர் என்.தினேஷ் முன்னிலை வகிக்கின்றனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் சங்கத்தின் (TNGEU) மாநி லத் தலைவர் ப.குமார், பொதுச் செயலாளர் மு.பொன்னிவளவன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி உரையாற்றினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக் டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர். ஜி.ஆர்.இரவீந்திரநாத், ஏஐடியூசி ஆஷா பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வஹிதா நிஜாம், தமிழ்நாடு மருத்துவப் பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர்.சாந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இப்போராட்டத்தில் ஏராளமான பெண் பணியாளர்கள் உட்பட ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றுள்ளனர்.

# பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐடியூசி உள்ளாட்சி பணியாளர்கள் ஆர்பாட்டம்

தருமபுரி மாவட்ட ஏஐடியூசி முனிசிபல் பஞ்சாயத்து பொது பணியாளர் சங்கம், கிராம ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் தூய்மைக் காவலர்கள் சங்கத்தின் சார்பில், ஊராட்சி,பேரூராட்சி, நகராட்சி துறைகளில் நேரம் காலமின்றி பணியாற்றும் தூய்மை காவலர்களுக்கு தொகுப்பூதிய அடிப்படையில் பணிப் பதிவேடு துவக்க வேண்டும், வேலை நேரம் எவ்வளவு என்பதை நிர்ண யம் செய்யவேண்டும், வாரம் ஒரு நாள் விடுமுறை அளிக்க வேண்டும், அரசு அறிவித்த கொரோனா கால சிறப்பு ஊக்கத்தொகை வழங்கவேண்டும், பணியாளர்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள், சீருடைகள் வழங்கவேண்டும், பேரூராட்சியில் பணியாற்றும் பணியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பெற்றுள்ள கடனை உரிய காலத்தில் பிடித்தும் செய்து அபராத தொகை வசூலிப்பதை தவிர்க்க வேண்டும், டேங்க் ஆப்ரேட்டர்களுக்கு 7வது ஊதிய பரிந்துரைப்படி ஊதிய உயர்வு நிலுவைத் தொகை வழங்க வேண்டும், தூய்மை பணியாளர்களுக்கு 2017 ம் ஆண்டில் சிறப்பு காலமுறை ஊதியம் வழங்க தமிழக அரசு அரசாணையின்படி மாவட்ட நிர்வாகம் உடனடியாக நிலுவை தொகை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

உள்ளாட்சி பணியாளர் சம்மேளன மாவட்ட தலைவர் என்.மனோகரன் தலைமை வகித்தார்.

ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலர் கே.மணி ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார்.

ஏஐடியூசி மாவட்ட தலைவர் எம்.மாதேஸ்வரன், மாதர் சம்மேளன மா.செ. எஸ்.கமலாமூர்த்தி, கட்டுமான சங்க மா.செ. ஆர்.சுதர்சனம், மாநிலக்குழு உறுப்பினர்கள் முனியம்மாள், முனுசாமி, உள்ளாட்சி பணியாளர் சங்க மாவட்ட பொருளாளர் எம்.ராஜ மாணிக்கம் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்

# கிளை மாநாடுகள்

**திருவொற்றியூர் :** வடசென்னை மாவட்டம், திருவொற்றியூர் பகுதி கிளை 21வது மாநாடு , கலைஞர் நகரில் தோழர் சுப்பையா அரங்கத்தில் மூத்த தோழர்கள் எஸ்பி ஆண்டியப்பன், பி.பட்டுராஜ், கொண்டையா, இசைக்கும் மணி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. மாநாடு கொடியை ஏ. சுகுணா ஏற்றி வைத்தார். வடசென்னை மாவட்ட செயலாளர் எம்.எஸ்.மூர்த்தி, துணைச் செயலாளர் எம். வசந்தகுமார் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினர். டி.ஜெயராமன் கிளை செயலாளராகவும், கே. கோபி, பி.காந்தமணி துணைச் செயலாளர் களாகவும் , எஸ்.பி. ஆண்டியப்பன் பொருளாளராகவும் தேர்வு செய்யப்பட்டனர்.

**பேரணாம்பட்டு 18வது வார்டு:** வேலூர் மாவட்டம் பேரணாம்பட்டு நகரத்தில் 18வது வார்டில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கிளைமாநாடு நகர செயலாளர் ஜி. எஸ்.மூர்த்தி, தலைமையில் நடைபெற்றது. சி. பலராமன், ஒன்றிய செயலாளர், வே.குமார், ஆகியோர்கள் முன்னிலையிலும். எஸ்.பி.முருகேஷ் பேர்ணாம்பட்டு கட்சி அலுவலகத்தில் கொடியேற்றனார். கிளை செயலாளராக நா.சே. தலீத் பாஸ்கர், துணை செயலாளராக வெ.சுகந்தி, கிளை பொருளாளராக பா.ஹேமலதா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். இதில் ஒன்றிய செயலாளர் எஸ்.பன்னீர் செல்வம் சிறப்புரை ஆற்றினார்.

**நாகல் கேணி:** காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் தொகுதி நாகல் கேணி கிளை மாநாடு ஆர். லெனின் தலைமையில் நடைபெற்றது. காஞ்சிபுரம் செங்கல்பட்டு மாவட்ட செயலாளர் எல்.மேகநாதன் அரசியல் நிலை குறித்து பேசினார், பல்லாவரம் தொகுதி செயலாளர் எஸ்.ஏழுமலை வாழ்த்துரை வழங்கினார். கிளை செயலாளராக எல்.பிரவீன் குமார், துணைச் செயலாளராக ஆர்.பொன்னுசாமி, பொருளாளராக லெனின் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.









### தேசிய தரமேம்பாடு குறித்து

# லேப் டெக்னீசியன்கள் கருத்தரங்கம்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் மற்றும் பாராமெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

தமிழகத்தில் ஏறத்தாழ பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட சிறிய மற் றும் நடுத்தர ரத்தப் பரிசோதனை நிலையங்கள் உள்ளன.

இந்த பரிசோதனை நிலையங்கள் குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு பல்வேறு பரிசோதனைகளை செய்து வழங்கி சேவை புரிந்து வருகிறார்கள்.

கிராமப்புறங்களில் செயல்படும் சிறிய ரத்தப் பரிசோ தனை மையங்கள் அங்கு உள்ள ஏழை எளிய மக்களுக்கு குறைந்த செலவில் ரத்தத்தில் சர்க்கரை நோய் பரிசோதனை, ஹீமோகுளோபின் பரிசோதனை, யூரியா போன்ற அடிப்படை பரிசோதனைகளை தரமான முறையில் பரிசோதித்து முடிவுகளை தெரிவிக்கின்றனர் .

மேலும் இந்த ரத்தப் பரிசோதனை கூடங்களை மேலும் தரம் உயர்த்துவது தொடர்பாக **NABL (National Accreditation Board for Testing and Calibration Laboratories)** அமைப்புடன் இணைந்து, பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கம் இன்று (மார்ச் 13) காலை சென்னையில் கருத்தரங்கம் நடத்தியது.

சென்னை அண்ணாநகர் கிழக்கில் உள்ள அம்மா அரங்கத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது.

இக்கருத்தரங்கிற்கு, பாரா மெடிக்கல் லேப் கல்வி மற்றும் நலச் சங்கத்தின் அகில இந்தியத் தலைவர் பி.காளி தாசன் தலைமை தாங்கினார். மாநிலப் பொருளாளர் எஸ்.சம்பத்குமார் வரவேற்புரையாற்றினார்.

தமிழ்நாடு மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

**NABL** தலைமைச் நிர்வாக அலுவலர் என். வெங்கடேஸ்வரன், **NABL** இணை இயக்குநர் காயத்திரி, பிரமிளா கிறிஸ்துதாஸ் ஆகியோர் **NABL** தரப்படுத்துதல் குறித்து விழிப்புணர்வு கருத்துரை யாற்றினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் .ஜி. ஆர். இரவீந்திரநாத், தமிழ்நாடு மருத்துவப் பணியாளர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் டாக்டர். ஏ .ஆர் .சாந்தி, பொருளாளர் **Dr.G.** இரமேஷ், ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மாநில துணைத் தலைவர் எஸ்.தனவந்தன் நன்றி நவின்றார்.

கருத்தரங்கில் தமிழகம் முழுவதிலுமிருந்து ஆயிரத் திற்கும் மேற்பட்ட ஆய்வக நிபுணர்கள் மற்றும் உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

லேப்டெக்னீசியன்களுக்கு என, லேப் டெக்னீசியன்கள் கவுன்சில் அமைக்க வேண்டும். அதில் லேப் டெக்னீசியன் களின் பிரதிநிதிகளை நியமிக்க வேண்டும்.

லேப்டெக்னீசியன்கள் நலன் காக்க தனி வாரியம் உருவாக்க வேண்டும்.

தமிழக அரசு மருத்துவ கழிவுகளை அழிப்பதற்கும், மறுசுழற்சி செய்வதற்கும் மாவட்டம் தோறும் சொந்தமாக ''உயிரியல் மருத்துவக் கழிவு மேலாண்மை '' நிறுவனங்களை அமைத்திட வேண்டும். அவற்றின் மூலம் அனைத்து அரசு மற்றும் தனியார் மருத்துவநிறுவனங்களின் மருத்துவக் கழிவுகளை அரசே மேலாண்மை செய்யமுடியும். இதன் மூலம் தனியார் இரத்தப் பரிசோதனை நிலையங்களில் உருவாகும் மருத்துவக் கழிவுகளை குறைந்த செலவில் மேலாண்மை செய்திட முடியும். அரசுக்கும் வருவாய் கிட்டிடும்.

இரத்தப் பரிசோதனை கூடங்களில் பயன்படுத்தும் திரவம், வேதிப் பொருட்கள் மற்றும் கருவிகளுக்கு தரக்கட்டுபாடு அறிவித்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

பரிசோதனை கூடங்களில் பயன்படுத்தும் திரவங்கள் மற்றும் கருவிகளை தமிழக அரசே உற்பத்தி செய்து, குறைந்த விலையில் வழங்க வேண்டும்.

மருத்துவமனை மற்றும் அதைச் சார்ந்த நிறுவனங்களை வரை முறைப் படுத்தும் சட்டத்தின் படி பதிவு செய்வது அவசியமாகிறது.

பரிசோதனைக் கூடங்களின் அளவைப் பொறுத்து சிறிய நடுத்தர பெரிய என வகைப்படுத்த வேண்டும். பதிவுக் கட்டணத்தை சிறிய பரிசோதனை கூடங்களுக்கு 5000 ரூபாயிலிருந்து 1000 ரூபாயாக குறைக்க வேண்டும்.

மருந்துக் கடையில் இரத்தப் பரிசோதனை மற்றும் சிறு நீர் பரிசோதனைகள் செய்ய அனுமதிக்கக் கூடாது. இது ''மருத்துவ நிறுவனங்கள் முறைப்படுத்தும் சட்டத்திற்கு'' எதிரானது. இச்சட்டத்தை மீறுபவர்கள் மீது உடனடி நடவ டிக்கை எடுக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் அடங் கிய மனு அமைச்சரிடம் வழங்கப்பட்டது.

சிறிய லேப்களுக்கான பதிவுக் கட்டணத்தை ரூ 1000 மாக குறைக்க நடவடிக்கை எடுப்பதாக மருத்துவத்துறை அமைச்சர் உறுதி அளித்தார்.

இதர கோரிக்கைகள் தொடர்பாக மருத்துவத்துறை உயர் அதிகாரிகளுடனும், சங்க நிர்வாகிகளுடனும் கலந்து பேசி உரிய தீர்வு காணப்படும் எனவும் அமைச்சர் உறுதி யளித்தார்.

இவ்வாறு டாக்டர்.ஜி.ஆர். இரவீந்திரநாத் கூறியுள்ளார்.

# மாநில கல்விக் கொள்கையை விரைவில் உருவாக்கிடுக!

## மாணவர் பெருமன்றம் தீர்மானம்



அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் தமிழ்நாடு மாநிலக் குழுக் கூட்டம் மார்ச் 13 அன்று திருச்சியில் மாநில தலைவர் மௌ.குணசேகர் தலைமையில் நடைபெற்றது. மாநில துணைத் தலைவர் ஆ.பிரகாஷ் கொடியேற்றி வைத்தார்.

மாநில செயலாளர் சீ.தினேஷ் அரசியல், வேலை அறிக் கைகளை சமர்ப்பித்தார். பேராசிரியர் கதிரவன் கலந்து கொண்டு தேசிய கல்விக் கொள்கையின் ஆபத்துகள் குறித்து விளக்கி பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் திராவிடமணி வாழ்த்துரை வழங்கினார்.

நீட் தேர்வில் விலக்கு கோரும் தமிழ் நாடு சட்டமன்றத்தின் தீர்மானத்தை ஆளுநர் குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்கு உடனே அனுப்ப வேண்டும். மாநில கல்விக் கொள்கையை விரைவில் உருவாக்கப்பட வேண்டும். உயர்கல்வித் துறையின் நிர்வாக மற்றும் கல்வியியல் செயல்பாடுகளை இனி ஒன்றிய அரசே தீர்மானிக்கும் என்கிற தேசிய உயர்கல்வி தகுதிக் கட்டமைப்பு வரைவு அறிக்கையைத் திரும்பப் பெற வேண்டும். உக்ரைன் ரஷ்யா போரால் படிப்பை தொடர முடி யாத இந்திய மாணவர்களுக்கு கல்வி வழங்க ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆசிரியர் பட்டயப் பயிற்சி மாணவர்களுக்கான பருவத் தேர்வுகளில் 100க்கு 98 % பேர் தோல்வி அடைகின்றனர்; இதில் மாநில அரசு உடனடியாக தலையிட்டு சரி செய்ய வேண்டும். தமிழ்நாடு டாக்டர். அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தில் 3 ஆண்டு சட்டப் படிப்புக்கான **(3 Year LLB)** 2021–2022ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை நடத்தாமல் உள்ளதை நடத்த வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கோகுல்ராஜ் கொலை வழக்கில் திறம்பட வாதாடி நீதியைப் பெற்றுத் தந்த வழக்கறிஞர் ப.பா.மோகன் அவர்களுக்கு பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தில் மாணவர் பெருமன்ற மாநில துணைச் செய லாளர் ச.பூர்ணிமா நந்தினி, திருச்சி மாநகர் மாவட்டச் செயலாளர் க.இப்ராஹிம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதி

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி கிளை பொருளாளர் வி.வாசு – வி.கலாவதி மகன் வி.செல்வின் (எ) செந்தில்குமாருக்கும் – சி. அபிநயா அவர்களுக்கும் திருமணம் நடைபெற்றது. மணமக்களை வாழ்த்தி கலை இலக்கிய பெருமன்ற மாநில தலைவர் சி.சொக்கலிங்கம், கலை இலக்கியப் பெருமன்றம் செந்தீ நடராஜன், கலை இலக்கிய பெருமன்ற மாநிலக்குழு உறுப்பினர் எஸ்.கே.கங்கா, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் எஸ்.இசக்கிமுத்து ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். திருமண விழாவில் ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கப்பட்டது.

### கெலமங்கலத்தில்

# 108 ஆம்புலன்ஸ் சேவை

## டி.ராமச்சந்திரன் எம்.எல்.ஏ-. தொடங்கி வைத்தார்




தளி சட்டமன்றத் தொகுதி, கெலமங்கலம் பேரூராட்சியில் அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட புதிய 108 ஆம்புலன்ஸ் சேவையை தளி சட்டமன்ற உறுப்பினர் டி.இராமச்சந்திரன் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் வட்டார மருத்துவ அலுவலர், பேரூராட்சி தலைவர், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### போக்குவரத்து ஏஐடியூசி சார்பில்

# வேலை நிறுத்த நோட்டீஸ் அனுப்பி வைப்பு

மார்ச் 28,29 தேதிகளில் நடைபெறும் 48 மணி நேர நாடு தழுவிய பொது வேலை நிறுத்தத்தில் கும்பகோணம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக ஏஐடியுசி தொழிற்சங்கம் பங்கேற்பதை அறிவித்து தஞ்சாவூர் தலைமை அஞ்சலகம் மூலம் கும்பகோணம் அரசு போக்குவரத்து கழக மேலாண் இயக்குனர் மற்றும் பொது மேலாளர், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர், தொழிலாளர் நல அலுவலர், அரசு போக்குவரத்துத்துறை செயலாளர், தேனாம்பேட்டை தொழிலாளர் நல ஆணையர் உள்ளிட்டவர்களுக்கு வேலை நிறுத்த நோட்டீஸ் ஏஐடியூசி தொழிற்சங்கம் சார்பில் அனுப்பப்பட்டது.

# தொழிலாளர்கள் பணி நீக்கம்: கண்டித்து ஆர்ப்பாட்டம்

ஓசூர் ஷார்டுலோ நிர்வாகம் சட்டவிரோதமாக 8 தொழிலாளிகளை பணி நீக்கம் செய்துள்ளதைக் கண்டித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஏஐடியூசி சார்பாக தொழிற்சங்க மாவட்ட துணைச் செயலாளர் செந்தில் தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தளி சட்டமன்ற உறுப்பினரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளருமான டி.ராமச்சந்திரன், விவசாய சங்க மாநில துணைத்தலைவர் எம்.இலகுமையா மற்றும் பல தோழர்கள் கலந்து கொண்டனர்.




# கட்டுமான தொழிலாளர்களின் வாரிய நிதி உதவியை அதிகப்படுத்துக!

தமிழ்நாடு ஏஐடியுசி கட்டடத் தொழிலாளர் சங்கம் திருச்சி மாவட்ட குழு கூட்டம் மார்ச் 14 அன்று மிளகு பாறையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் மாவட்ட தலைவர் க.சுரேஷ் எம்.சி. தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட செயலாளர் சி.செல்வகுமார், மாவட்ட துணைச் செயலாளர் எம்.ஆர். முருகன், மாவட்ட துணைத் தலைவர்கள் எம்.மருதம்பாள், பி.துரைராஜ் மற்றும் பாலசுப்ரமணியன், இருதயசாமி, பழனியப்பன் நாகராஜ், முத்தழகு, நிர்மலா, ரஷியாபேகம், சசிகலா, ஹேமலதா, கலைச்செல்வன், பிரகாஷ், குமரேசன், ரெங்கராஜ் உள்ளிட்ட பல்வேறு தோழர்கள் கலந்து கொண்டனர். அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு பெண்களுக்கு 50 வயதிலும் ஆண்களுக்கு 55 வயதிலும் மாதம் ரூ.6000 ஓய்வூதியம் வழங்க வேண்டியும், கட்டுமான மற்றும் அமைப்பு சாரா பெண் தொழிலாளர்கள் பேறுகால உதவியாக 6 மாத விடுப்பு 90 ஆயிரம் வழங்க கோரியும், கட்டுமான மற்றும் அமைப்பு சாரா தொழிலாளர்களின் அமைத்து வாரிய நிதி உதவியை கூடுதல் படுத்த கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. துணைத் தலைவர் எம். மருதம்பாள் நன்றி கூறினார்.

# பாரதி 100
## நூற்றாண்டு நினைவேந்தல் பதிப்பு

பாட்டுக்கொரு புலவன் என பெயர் பெற்ற நமது தேசிய கவி பாரதியார் பற்றிய முனைவர் உலகநாயகி பழனி அவர்களின் நூறு சொற்பொழிவுகளின் தொகுப்பே 'பாரதி 100 ' என்கிற இந்நூல்

தமிழக வரலாற்றில் புரட்சிகரமான எண்ணங்களையும் புதிய மாற்றங்களையும் அளித்த பெருமைக்குரியவர் பாரதியார். "நாட்டு மக்கள் நலமுற்று வாழவும்,நானிலத்தவர் மேனிலை எய்தவும்,பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும் " என்ற குறிக்கோளோடு தனது கவிதை பயணத்தை தொடங்கியவர் பாரதி. பாரதி மேனாட்டு கவிஞர்கள் மற்றும் நம் நாட்டு கவிஞர்களின் படைப்புக்களையும், தமிழ் இலக்கியங்களையும் ஊன்றிக் கற்று,வறண்டு கிடந்த தமிழ் இலக்கியத்தை,வளமாக்க துடித்து. மேலை நாட்டு இலக்கிய வகையான தன்னுணர்ச்சி பா வகையிணையும், சிந்து நடையிணையும் தமிழுக்கு அறிமுகப்படுத்தி, தமக்கு முன் வாழ்ந்த கவிஞர்களுக்கு இல்லாத சமூக உணர்வும், விடுதலை உணர்வும்,கவிதை வேகமும் கொண்ட ஆற்றல் வாய்ந்த மொழியினைக் கையாண்டவர்.




போலி அலங்காரங்களும், கடுமையான நடையும், பண்டித மனப்பான்மையும் இல்லாத எளிய ஆனால் வீறுகொண்ட மொழிநடை யினை கையாண்டார். மொழி காலவெள்ளத்தில் புதிய சிறந்த மாற்றங்களை தர வேண்டுமென விரும்பினார். அதனால்தான் தன் கவிதைகளை தானே திறனாய்வு செய்தார்.

" சுவை புதிது, பொருள் புதிது,வளம் புதிது, சொல் புதிது சோதி மிக்க நவ கவிதை எந்நாளும் அழியாத மாக் கவிதை " என அனைத்திலும் புதுமையை நாடிய கவிஞன் பாரதி. வெள்ளத்தின் பெருக்கைப்போல், கலைப்பெருக்கும், கவிப்பெருக்கும் மேவுமாயின்,பள்ளத்தில் விழுந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்றுப் பதவி கொள்வார். கவிழும் கலையும் பெருகுமாயின் சாதாரண எளிய மக்களுக்கும் உரிய அங்கீகாரங்களும் அதிகாரங்களும் கிடைக்கும் என்பதை பாரதி பாடுகிறான். பாரதி என்னும் பெரும் புலவனை பல்வேறு கோணங்களில் மாணவர்களுக்கும்,பொதுமக்களுக்கும் முனைவர் உலகநாயகி பழனி அவர்கள் படம் பிடித்துக் காட்டியுள்ளார்.அதன் தொகுப்பே இந்த புத்தகம். இதை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டும். **-இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : முனைவர் உலகநாயகி பழனி**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை–14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 444 விலை : ரூ.420**

நூல் நயம்

# தாமிரவருணி சமூக- பொருளியல் மாற்றங்கள்

தமிழகத்தின் நீர் மேலாண்மை குறித்தும். தமிழக பாசன வரலாறு பற்றியும், பெரியாறு அணை மறைக்கப்பட்ட உண்மைகள் குறித்தும், தமிழக ஆறுகளில் தொடர்ச்சியாக நடைபெறும் மணல் கொள்ளை குறித்தும், தமிழக ஏரி பாசன முறைமைகளில் பாரம்பரிய நீர் மேலாண்மை நடைமுறைகள் பற்றியும், பழமையின் அறிவைத் தேடி பாசன ஏரிகள், சில தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில் இந்திய ஏரிகளில் புனரமைப்பு மற்றும் நீர் மேலாண்மை குறித்து.சிறந்த நூல்களை எழுதியுள்ள முனைவர் பழ.கோமதி நாயகம் அவர்கள் எழுதிய நூலே தாமிரவருணி சமூக பொருளியல் மாற்றங்கள் என்னும் இந்நூல்.

கடந்த காலங்களில் ஆறுகளில் ஓடி வரும் மழைத்தண்ணீர் சேகரிக்கவும்,சேர்த்து வைக்கவும், கொண்டு செல்லவும்,பகிர்ந்து அளிக்கவும் பாசன அமைப்புகள் உருவாக்கப்பட்டன. ஆனால் இவை பிற்காலத்தில் அரசுகளால் மெல்ல மெல்ல சிதைக்கப்பட்டன. ஆற்றுப்படுகை ஒன்றின் பாசன அமைப்பு முழுமையாக உருவாக்கப்பட்டு விட்ட நிலையில்,வெவ்வேறு பயனாளிகள் போட்டிபோட்டு எழுப்பும் கோரிக்கைகள் எப்பொழுதும் தகராறுகளில் தான் சென்று முடியும். உள்ளூர்,வட்டார,தேசிய, பன்னாட்டு அளவிலான தகராறுகள் அதிகரிக்கவே செய்கிறது.




எனவே ஆற்றுப்படுகை ஒன்றின் தகராறுகளைப் பற்றிய ஆய்வு தான் .நிலையான நீர்வள ஆதார மேலாண்மைக்கான தெளிவான திட்டங்களை வகுக்க நமக்கு பெரிதும் உதவும் என்கிறார் நூலாசிரியர்.

இந்நூலில் ஒரு நெடிய காலகட்டத்தில். தாமிரபரணி ஆற்றுப்படுகையின் வளர்ச்சிப்போக்கு மற்றும் அவை தொடர்பான நிகழ்வுகள் பற்றி ஆராயப்படுகின்றன.

தாமிரபரணி ஆற்று பாசனம் என்பது, 8 அணைக்கட்டுகள் மற்றும் 11 கால் வாய்கள் மூலம் திருநெல்வேலி,தூத்துக்குடி மாவட் டங்களில் உள்ள 218 வருவாய் கிராமங்களில் பரவிக் கிடக்கிறது. தமிழகத்தில் அரசு அங்கீகரித்த விதிகள் மற்றும் வழிகாட்டு நெறி முறைகளின் அடிப்படையில் பாசனத் திட்டங்களை பாசனத்துறை இயக்கிக் கொண்டிருக்கிறது. தோன்றும் இடத்திலிருந்து கடலில் கலக்கும் மன்னார் வளைகுடா வரையில் தாமிரவருணி ஆற்றின் நீளம் 125 கிலோ மீட்டர்.

திருநெல் வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்ட மக்களின் வாழ்வாதாரம் இதுதான். கி.மு. 400 வாக்கிலேயே இந்த பகுதியில் நாகரீகமான மக்கள் வாழ்ந்து இருந்ததை ஆற்றின் கரைகளில் மேற்கொண்ட அகழய்வு கண்டுபிடிப்புகள் சுட்டிக் காட்டுகின்றன.

வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து படி, இந்திய ஆறுகளில் மிக உயரிய இடத்தை பெறுகிறது தாமிரபரணி. தமிழின் மிகப் பழமையான சங்க இலக்கியங்கள் இந்த நதியை 'பொருநை' என குறிப்பிடுகின்றன. தாமிரபரணி பற்றிய பல்வேறு விவரங்களை இந்நூலில் முனைவர் பழ.கோமதி நாயகம் அவர்கள் எழுதியுள்ளார். அவர் எழுதிய ஆங்கில மூலத்தை. காலத்தின் தேவை கருதி தமிழில் எம்.பாண்டியராஜன் அவர்கள் மொழிபெயர்த்துள்ளார் . நூலினை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம். **-சமரன்**

**நூலாசிரியர் : முனைவர் பழ.கோமதிநாயகம**
**தமிழில் : எம்.பாண்டியராஜன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ், 142, ஜானி ஜான்கான் சாலை இராயப்பேட்டை, சென்னை–14, செல்: 044 28482441**
**பக்கங்கள் : 166 விலை : ரூ.140**

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்


## உக்ரைன் போர்:

## மேற்கு உலகின் பொருளாதார தடைகளுக்கு

# ரஷ்யாவின் பதிலடி!

உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவத் தாக்குதல்களைத் தொடர்ந்து அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு உலக நாடுகள் ரஷ்யா மீது பொருளாதார தடைகளை விதித்துள்ளன. அதற்குப் பதிலடியாக, ரஷ்யா ஏற்றுமதி தடைகளை விதித்துள்ளது.

தொலைதொடர்பு, மருத்துவம், விவசாயம், மின்சாரம் மற்றும் இதர தொழில்நுட்ப கருவிகள் ஆகியவற்றோடு காடுகளில் கிடைக்கும் பொருள்கள் மீது 2022 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ஏற்றுமதி செய்வதற்கான தடையை ரஷ்ய அரசாங்கம் விதித்துள்ளது. இவ்வாறாக, சுமார் 200 க்கும் மேற்பட்ட பொருள்கள் மீது ஏற்றுமதிக்கான தடை விதிக்கப்பட்டுள்ளது. இதன்படி, கோதுமை, சோளம், பார்லி, உள்ளிட்ட தானியங்கள் யுரேசிய பொருளாதார ஒன்றியத்தில் **(Eurasian Economic Union)** உள்ள நாடுகளுக்கு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் நாள் வரை ஏற்றுமதி செய்வது நிறுத்தப்படுகிறது என்று ரஷ்யாவின் பொருளாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.



ஐரோப்பிய நாடுகளின் எரிவாயு தேவையில் ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கை ரஷ்யா பூர்த்தி செய்து வருகிறது. கடந்த காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தங்களின் அடிப்படையில், ஐரோப்பிய நாடுகளுக்கான எண்ணெய் மற்றும் எரிவாயு ஏற்றுமதி தொடரும் என்று ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் கூறியுள்ளார். மேற்கு உலகம் ரஷ்யா மீது விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் குறித்து அதிபர் புதின் கூறியிருப்பது பின்வருமாறு:

*ரஷ்யாவுக்கு எதிரான மேற்கு உலகத்தின் பொருளாதாரத் தடைகள் மேற்கு உலக நாடுகளை திருப்பித் தாக்கும். அமெரிக்க சந்தையில் ரஷ்ய எண்ணெய் இறக்குமதியை நிறுத்துவதாக அவர்கள் அறிவித்துள்ளார்கள். அந்நாட்டில் விலை உயர்வு காரணமாக முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு பணவீக்கம் அதிகரித்துள்ளது.*

இவ்வாறு ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதின் கருத்து தெரிவித்துள்ளார்.

## உலகின் முதல் பத்து எதேச்சதிகார நாடுகளின் பட்டியலில்


# இந்தியா!

விடெம் **(Varieties of Democracy, www.v-dem.net)** எனும் சுவீடன் நாட்டு ஆராய்ச்சி நிறுவனம் அண்மையில் உலக நாடுகளில் ஜனநாயகம் குறித்த அறிக்கை ஒன்றை வெளி யிட்டது. அந்த அறிக்கையின்படி, உலகின் முதல் பத்து எதேச்சதிகார நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம்பெற்றுள்ளது. மேலும், இந்தியாவின் ஜனநாயகத் தன்மை சிதைவுற்று வருவதாக அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தயாரித்துள்ள ஜனநாயக குறியீட்டின்படி, கடைக்கோடியில் உள்ள 40-50% நாடுகளின் பட்டியலில் இந்தியா இருக்கிறது. இந்நிறுவனத்தின் ஆய்வின்படி, 32 நாடுகளில் எதேச்சதிகாரம் நடைமுறையில் அனுபவமாகிறது. இந்நிறுவனம் கடந்த ஆண்டு இந்தியாவைத் 'தேர்தல்முறை கொண்ட எதேச்சதிகார நாடு' என்று வகைப்படுத்தியது. இந்தியாவில் பன்மைத்துவத்திற்கு எதிரான அரசியல் கட்சிகள் எதேச்சதிகாரத்தை முனைப்புடன் உந்தித் தள்ளுகின்றன; வகுப்புவாத குவிமையப்படுத்துதல் அதிகரித்து வருகிறது. இக்காரணங்களால் ஜனநாயக குறியீட்டில் இந்தியா 93 வது இடத்தில பின்தங்கியுள்ளது என்று இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## ஆசிய - ஆப்பிரிக்க நாடுகளைக்

# கபளீகரம்

## செய்யும்ஏகாதிபத்தியம்



**தொடக்க காலத்தில் இருந்தே, ஏகாதிபத்தியம் அதன் வடிவங்களை மாற்றியவாறே பயணித்து வருகிறது. காலனிய காலத்தில், பணக்கார நாடுகளின் தொழில்துறை வளர்ச்சியானது, உலகின் தென் பகுதியில் உள்ள ஆசிய ஆப்பிரிக்க நாடுகளில் உள்ள வளங்கள் அபகரிப்பைச் சார்ந்திருந்தது.**

ஐரோப்பிய தொழிற்புரட்சி மிகப்பெரிய அளவில் பருத்தி மற்றும் சர்க்கரை ஆகியவற்றைச் சார்ந்திருந்தது. பருத்தி மற்றும் சர்க்கரை ஆகியவை அமெரிக்க பூர்வகுடி மக்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலங்களில், ஆப்பிரிக்க அடிமை மக்களின் கட்டாய உழைப்பின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டன. ஆசிய மற்றும் ஆப்பி ரிக்க நாடுகளில் உள்ள இயற்கை வளங்களைக் கொள்ளையடித்து, நவீன வளர்ச்சியின் குறியீடாக உள்ள ஐரோப்பிய நாடு களின் உள்கட்டமைப்பு மற்றும் அரசு கட்டடங்கள் உருவாக்கப்பட்டன. இதற்காக தென் பகுதி நாடுகள் கொடுத்த விலை: இனப்படுகொலை, பஞ்சம், வறுமை, நில அபகரிப்பு உள்ளிட்டவை ஆகும்.

20 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் ஏகாதிபத்திய சக்திகள் தென் பகுதி நாடுகளில் இருந்து இராணுவத்தையும், அவற்றின் கட்டுப்பாடுகளையும் திரும்பப் பெற்றன. ஆனால், அதற்குப் பிந்தைய பல பத்தாண்டு காலங்களாக காலனியாதிக்கம் நீடித்த தன்மையுடன் நடைமுறையில் இருப்பதுடன், தொடர்ந்து உலகப் பொருளாதாரத்தையும் வரையறை செய்து வருகிறது என்று சார்பு தத்துவ **(Dependency Theory)** நீரோட்டத்தில் இயங்கி வரும் வரலாற்றாசிரியர்கள் மற்றும் பொருளியல் நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். ஏகாதிபத்தியம் அதன் வடிவத்தை மட்டுமே மாற்றிக்கொண்டுள்ளதே தவிர மரணித்துவிடவில்லை என்று அவர்கள் உறுதிபட உரைத்து வருகிறார்கள்.

அவர்களது கூற்று சரியானதே! பணக்கார நாடுகள் அவற்றின் பொருளாதார மேலாதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ள தென் பகுதி நாடுகளின் வளங்களைச் சார்ந்துள்ளன என்பதை அண்மைக்கால ஆய்வுகள் நிறுவுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் பல நூறு பில்லியன் டன் எடை கொண்ட மூலப்பொருட்கள், பல நூறு பில்லியன் மணி நேர மனித உழைப்பானது, நாம் பயன்படுத்தும் முதன்மையான பொருட்கள் மட்டுமின்றி, நவீன அதிநுட்ப பொருட்களான திறன்பேசிகள் (ஸ்மார்ட்போன்), மடிக்கணினி, கணினி சில்லுகள் மற்றும் மகிழுந்து ஆகியவற்றின் உற்பத்தியில் செலுத்தப்படுகிறது. கடந்த சில பத்தாண்டுகளாகவே, இது போன்ற பொருட்கள் பெரும்பாலும் உலகின் தென் பகுதி நாடுகளில் தான் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உற்பத்திக்கான செலவு உலகின் வட பகுதி நாடுகளில் இருப்பதைக் காட்டிலும் தென் பகுதி நாடுகளில் மிகக் குறைவாகவே உள்ளது. எடுத்துக்காட்டாக, உலகின் தென் பகுதி நாடுகளில் உள்ள தொழிலாளர்களின் ஊதியம் வட பகுதி தொழிலாளர்களின் ஊதியத்துடன் ஒப்பிடும்போது ஐந்தில் ஒரு பங்கு மட்டுமே ஆகும். எனவே தான், பெரும்பாலான பொருட்களின் உற்பத்திக்கான மூலப்பொருட்கள் மற்றும் உழைப்புச் சக்தி தென் பகுதி நாடுகளில் இருந்து உறிஞ்சப்படுகிறது. காலனிய ஆக்கிரமிப்புகளின் வன்முறை நடவடிக்கைகள் எதுவும் இன்றி, கண்ணுக்குப் புலப்படாத வகையில் ஏகாதிபத்தியம் ஆசிய, ஆப்பிரிக்க நாடுகளின் இயற்கை வளங்களையும், உழைப்பையும் கபளீகரம் செய்து வருகிறது.

1960 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை உலகின் தென் பகுதியில் இருந்து சுரண்டப்பட்ட செல்வ வளத்தின் மொத்த மதிப்பு 62 ட்ரில்லியன் டாலர் ஆகும். தென் பகுதி நாடுகளின் இயற்கை வளம் மற்றும் உழைப்பு சக்தியை அவற்றின் மேம்பாட்டிற்குப் பயன்படுத்தி இருந்தால், தென் பகுதி நாடுகளின் வளர்ச்சி மதிப்பு தற்போது 152 ட்ரில்லியன் டாலர் ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது.

ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம் என்ற மாமேதை லெனினின் மதிப்பீடு அரசியல் பொருளாதார ரீதியாக முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு காலப் பொருத்தப்பாடு உடையதாக இருக்கிறது எனத்தைத் தான் தென் பகுதி நாடுகளில் நடைபெறும் பொருளாதார நடவடிக்கைகள் நமக்கு உணர்த்துகின்றன.

# தோழர் சி.கே. சந்திரப்பன்

## நினைவு மண்டப நிதிக்கு நன்கொடை வழங்கிடுவீர்!

### இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு வேண்டுகோள்





வரலாற்றுச் சிறப்புமிகு புன்னப்புரா வயலார் போராட்டம் பெற்றெடுத்த புகழ்மிக்க வீரப்புதல்வர்களில் ஒருவரான தோழர் சி கே சந்திரப்பனின் நினைவைப் போற்றும் வகையில் கேரள மாநிலம் கொல்லம் மாவட்டத்தில் நினைவு மண்டபம் ஒன்றைச் சிறப்பாக அமைக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநிலக் குழு முடிவு செய்துள்ளது. தோழர் சி கே சந்திரப்பன் நினைவு மண்டப நிதிக்கு அனைவரும் தாராளமாக நன்கொடை அளித்திடுமாறு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு வேண்டுகோள் விடுக்கிறது.

விடுதலைப் போராட்ட காலத்தில், ஆலப்புழா மாவட்டத்தில் உள்ள அம்பலப்புழா மற்றும் சேர்தலா பகுதிகளைச் சார்ந்த உழைக்கும் மக்கள் அடக்குமுறைகளை எதிர்த்து வீறுகொண்டு எழுந்தனர். அம்மண்ணில் இருந்து முகிழ்த்துப் பரிணமித்தவர் தோழர் சி கே சந்திரப்பன் ஆவார். தனது மாணவப் பருவத்திலேயே, விடுதலைப் போராட்ட வீரர்களைத் தீவிரமாக ஆதரித்துக் களம் கண்டவர். வயலார் ஸ்டாலின் சி கே குமரப்பணிக்கர் மகன் என்பதாலும், தீவிர அரசியல் பங்கேற்பில் ஈடுபட்ட குடும்பத்தைச் சார்ந்தவர் என்பதாலும், கொச்சியில் உள்ள மகாராஜா கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. எனினும், அவர் ஒரு தேர்ந்த மாணவராகப் பொருளியல் துறையில் பட்டப்படிப்பையும், முதுகலைப் பட்டப்படிப்பையும் வேறு கல்லூரிகளில் முடித்தார். தோழர் சி கே சந்திரப்பன் பல மட்டங்களில் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து அனைத்திந்திய மாணவர் பெருமன்றம் மற்றும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் ஆகியவற்றின் மாபெரும் தலைவராக அகில இந்திய அளவில் அறியப்பட்டவர்; கோவா பிரதேச விடுதலைப் போராட்டத்தில் போர்த்துகீசிய படையினரின் துப்பாக்கிச் தோட்டாக்களை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்ட பெருமைக்குரியவர். மக்களவை மற்றும் கேரள மாநில சட்டமன்றத்தில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டார்.

இளைஞர் மற்றும் மாணவர் பிரதிநிதியாக, இளம் வயதிலேயே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினராகவும், கேரள மாநிலச் செயலாளராகவும், தேசிய செயற்குழுவில் உறுப்பினராகவும் சிறப்பாகச் செயலாற்றினார். அவர்தம் நினைவைப் போற்றும் வண்ணம் நினைவு மண்டபம் ஒன்றைச் சிறப்பாக அமைத்திட கட்சியின் கேரள மாநிலக் குழு முடிவு செய்துள்ளது.


தோழர் சி கே சந்திரப்பன் நினைவு மண்டப நிதிக்கு அனைவரும் தாராளமாக நன்கொடை அளித்திடுமாறு வேண்டுகோள் விடுத்த இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய பொதுச் செயலாளர் தோழர் டி ராஜா, தோழர் சிதம்பரத்துடன் இணைந்து ஒரு லட்சம் ரூபாய் நன்கொடை அளித்தார். இதனைத் தொடர்ந்து, கட்சியின் தேசிய செயற்குழு உறுப்பினரான தோழர் பல்லப் சென் குப்தா ரூபாய் 10000க்கான காசோலையை கேரள மாநிலச் செயலாளர் தோழர் கணம் ராஜேந்திரனிடம் வழங்கினார். எண்ணற்ற தோழர்கள் தங்களின் பங்களிப்பை விரைவில் செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

இவ்வாறு தேசியக் குழு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.






















தென்காசி மாவட்டம் சிவகிரி முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர்
தோழர் **எஸ்.இரணவீறு** அவர்களின்
இல்லத் திருமண விழாவிற்கு வருகை தரும்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர்

தோழர் **இரா.முத்தரசன்**





மாநில நிர்வாகக்குழு தோழர்கள்
**தி.இராமசாமி** எக்ஸ்.எம்.எல்.ஏ.
**வி.அழகிரிசாமி** எக்ஸ். எம்.பி.
**எஸ்.காசிவிஸ்வநாதன்**
**எஸ்.அழகுமுத்துபாண்டியன்**

**பொ.லிங்கம்** எக்ஸ்.எம்.பி.
விருதுநகர் மாவட்டச் செயலாளர்
**டி.இசக்கிதுரை,** வழக்கறிஞர்
தென்காசி மாவட்டச் செயலாளர்
**டி.சுப்பையா** – ஏஐடியூசி
தென்காசி மாவட்டச் செயலாளர்

திரு **தனுஷ் எம்.குமார்**
எம்.பி. தென்காசி
திரு டாக்டர் **சதன் திருமலைக்குமார்**
எம்.எல்.ஏ. வாசுதேவநல்லூர்
திரு **பொன்.முத்தையா பாண்டியன்**
ஒன்றியப் பெருந்தலைவர், வாசு
டாக்டர் **செ.சு.செண்பக விநாயகம்**
பேரூர், தி.மு.க. செயலாளர்
திருமதி **பவானி** JE, TNEB
தோழர் **பி.சிங்காரவேலு**
சிபிஐ, மாவட்ட நிர்வாகக்குழு
தோழர் **பி.பாலசுப்பிரமணியன்**
சிபிஐ, சிவகிரி நகரச் செயலாளர்

மணநாள்: 27.03.2022 ஞாயிற்றுக்கிழமை
இடம்: தேவர் மண்டபம், சிவகிரி

தங்கள் நல்வரவை விரும்பும்
**இ.கணேசன் - ஜி.முத்துலட்சுமி**
**இ.ஸ்டாலின் - எஸ்.சுப்புலட்சுமி**
சிபிஐ மாவட்டக்குழு உறுப்பினர்
முன்னாள் கவுன்சிலர், சிவகிரி



மணமக்கள்
**எஸ்.வீரக்குமார்** BE, CIVIL
**எம்.காயத்ரி** M.Com

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
Posted on 19.03.2022 at Egmore RMS 1 / Patrika Channel.
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57




Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.